அக்டோபர் 18, 2020

# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 100

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

## ஈழத்தமிழினத்தின் நீதித் தேடலில் இளையோரும் வரைகலை வடிவமைப்பும்

பாலி பாலவதனன்

11

## மக்களுக்காகப் பேசுவதும் மக்களைப் பேச வைப்பதும்

16

திரு எஸ். திருச்செல்வம்

## ஐ.நாவில் ஈழத்தமிழர்களின் பங்களிப்பு

முனைவர் ஆ. குழந்தை, சென்னை

09



## சர்வதேச அல்லது கலப்பு நீதிமன்ற விசாரணையை நான் கோரி வருகிறேன்

18

டாக்டர் மனோகரன்

## கிழக்கு மாகாண மக்கள் விழித்தெழும் நேரம் இது

07

மட்டு. நகரான்

## தமிழர்களுக்கு வரலாறு உணர்த்திய – உணர்த்திக் கொண்டிருக்கின்ற பாடம்

10

முனைவர் மு. அரசேந்திரன்

## விடுதலையை நோக்கிய பயணம் ஒரு புதிய பார்வை

14

திருமிகு சத்யா சிவராமன்

# அதிகரிக்கும் கொரோனா தொற்று
## – படையினர் மீது குற்றச்சாட்டு

கடந்த சில வாரங்களாக சிறீலங்காவில் குறிப்பாக தென்னிலங்கையில் அதிகரித்துச் செல்லும் கொரோனா தொற்றுக்கு சிறீலங்கா அரசு மருத்துவர்களை நம்பாது படையினரை நம்பியதே காரணம் என தென்னிலங்கையில் இருந்து குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

கோவிட்-19 இற்கு எதிரான செயற்பாட்டு திட்டங்களை வகுப்பதில் சிறீலங்கா அரசு படையினரையே பயன்படுத்துகின்றது, வைதியர்களை அல்ல. இது அங்கு ஒரு பொய்யான தோற்றப்பாட்டை ஏற்படுத்தி வருகின்றது.

சீருடையில் உள்ளவர்களே நாட்டின் சுகாதார கொள்கைகளை தீர்மானிக்கின்றனர். வைத்தியர்களோ, தொற்றுநோய் நிபுணர்களோ அல்ல என கொழும்பை தளமாகக் கொண்ட ஆங்கில நாளேடு குற்றம் சுமத்தியுள்ளது.

நீண்டகாலப் போக்கில் இராணுவமயமாக்கல் என்பது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். நாட்டின் தேசிய கட்டுமானப் பணிகளுக்கு படையினரை பயன்படுத்திய பாகிஸ்தானின் நிலை தான் சிறீலங்காவுக்கும் எற்படும். அது கொரோனா வைரசின் சேதத்தைவிட அதிக சேதம் விளைவிக்கும் என அது மேலும் தெரிவித்துள்ளது.

# தமிழரின் விவசாய நிலங்களை தொடர்ந்து ஆக்கிரமிக்கும் சிங்கள விவசாயிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசங்களான அம்பாறை மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் வசிக்கும் பொரும்பான்மை சிங்கள இன விவசாயிகள் தமிழ் மக்களின் நிலங்களில் பலவந்தமாக குடியேறி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருவதனால் தமிழ் விவசாயிகள் கடும் பாதிப்புக்களை சந்தித்து வருகின்றனர்.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட எல்லையில் அமைந்துள்ள மயிலத்தமடு, மாதவணை கிராம சேவகர் பிரிவுகளில் அம்பாறை மற்றும் பொலநறுவை மாவட்டத்தில் வசிக்கும் சிங்கள விவசாயிகள் ஏறத்தாள 3,000 ஏக்கர் நிலங்களில் காடுகளை வெட்டி பலவந்தமாக குடியேறி சேனைப்பயிர் செய்கைக்கு தயாராகி வருகின்றனர்.

இதனால் செங்கலடி, கிரான், பட்டிப்பாளை மற்றும் வெல்லாவெளி போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட சுமார் ஆயிரம் கால்நடை வளர்ப்பாளர்களின் இரண்டு இலட்சம் கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் முறைப்பாடுகளை தொடர்ந்து மாவட்ட செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையிலான உயர்மட்டக்குழு சம்பவ இடத்திற்கு பயணம் மேற்கொண்டு சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்துள்ள இடங்களை பார்வையிட்டதுடன், பலவந்தமாக குடியேறியவர்களுடனும் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தனர்.

தமக்கு காணிகள் இல்லாததால் தாம் குடியேறியதாக குடியேற்றக்காரர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் 1000 குடியேற்றக்காரர்களால் கையகப்படுத்தப்பட்ட 3000 ஏக்கர் காணிகளுக்கு இணையான சேனைப் பயிர்ச் செய்கைக்கு உகந்த காணிகள் அவர்களின் பகுதிகளில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த செயற்பாட்டினால் பெரும்போக பயிர்ச் செய்கையின் போது பாரம்பரியமாக கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்லும் மக்கள் மேய்ச்சல் நிலம் இல்லாததால் நெருக்கடிகளை சந்தித்துள்ளனர். இந்த ஆக்கிரமிப்பால் 1,56,000 ஏக்கர் நிலங்களில் செய்யப்படும் நெற்செய்கையும் பாதிப் படைந்துள்ளது.

இதனை நிறுத்துமாறு மகாவலி அபிவிருத்தி அதிகாரிகளை மாவட்ட செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால் குடியேற்றக்காரர்கள் அதனை ஏற்க வில்லை. எனவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பில் தமக்கு உதவவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# இந்திய அரசால் தடுத்து வைக்கப்பட்ட முன்னாள் முதல்வர் விடுதலை

காஷ்மீரின் சுயாட்சி அதிகாரத்தை இந்திய மத்திய அரசு பறித்ததால் ஏற்பட்ட அரசியல் பதற்றத்தைத் தொடர்ந்து இந்திய அரசினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த காஷ்மீர் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் மெக்பூமா முப்ரி (61) கடந்த செவ்வாய்க்கிழமை (13) விடுதலை செய்யப் பட்டுள்ளதாக அவரின் மகள் தெரிவித்துள்ளார்.

பல முன்னணி அரசியல்வாதிகளுடன் சேர்த்து கைது செய்யப்பட்ட இவர் 14 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காஷ்மீருக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கிய 370 ஆவது சட்டத்தை இந்திய மத்திய அரசு நீக்கியிருந்தது.

இவரின் கைதுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மகள் இரிஜா முப்ரி தொடுத்த வழக்கை தொடர்ந்தே முன்னாள் முதல்வர் விடுவிக்கப்பட்டுள்ளார். தனது தாயரின் விடுதலைக்கு உதவியவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ள இரிஜா, இந்திய சிறைகளில் பெருமளவான இளைஞர்களும், யுவதிகளும் துன்பத்துடன் வாழ்வதாக தெரிவித்துள்ளார்.

# நவீன அடிமைத்தனத்தில் வாழும் 2.9 கோடி பெண்கள்

அடிமைத்தனத்தில் சிக்கியுள்ள பெண்களின் எண்ணிக்கை அவுஸ்திரேலியாவின் மக்கள் தொகையை விட அதிகம் என Walk free என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் பலவந்த உழைப்பு, பலவந்த திருமணம், கடனுக்கான அடிமைகள் போன்ற நவீன அடிமைத்தனத்தினால் 2.9 கோடி பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சராசரியாக 130 பெண்களில் ஒருவர் இந்த அடிமைத்தனத்தில் சிக்கியுள்ளதாகவும், யதார்த்தம் என்னவெனில் முன்னைய காலங்களுடன் ஒப்பிடும் போது இது அதிகம் எனவும் அனைத்துலக தொழிலாளர் அமைப்பு, புலம்பெயர்ந்த மக்களுக்கான அனைத்துலக அமைப்பு ஆகியன இணைந்து வெளியிட்ட இந்த அறிக்கையில் walk free என்ற அமைப்பின் பிரதி தலைவர் கிரேஸ் பார்ரஸ்ட் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்களில் 99 விகிதமானவர்கள் பலவந்த பாலியல் சுரண்டல், 84 விகிதமானவர்கள் பலவந்த திருமணம், 58 விகிதமானவர்கள் பலவந்த உழைப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் இதனை ஒழிப்பதற்கு உலகளாவிய ரீதியில் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இதன் மூலம் 136 நாடுகளில் தற்போதும் குற்றமாக கருதப்படாத பலவந்த திருமணத்தை முடிவுக்கு கொண்டுவர வலியுறுத்தப்படும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அழிவை நோக்கி உலகின் ஐந்தில் ஒரு பங்கு நாடுகளின் வளங்கள்

உலகில் உள்ள நாடுகளில் ஐந்தில் ஒரு பகுதி நாடுகளில் உள்ள இயற்கை வளங்கள் முற்றாக அழியும் நிலையில் உள்ளதாக சுவிற்சர்லாந்து நாட்டை சேர்ந்த சுவிஸ் ரீ (Swess Re) என்ற காப்புறுதி நிறுவனம் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

உணவு, நீர் காற்று போன்ற இயற்கை வளங்கள் மனிதர்களின் செயற்பாடுகளால் ஏற்கனவே அழிவைச் சந்தித்து வருகின்றன. உலகின் மொத்த உற்பத்தியின் 50 விகிதமான 42 றில்லியன் டொலர்களை மனிதன் வாழும் சூழல் தொகுதி தான் வழங்குகின்றது.

பேரழிவை சந்தித்துள்ள நாடுகளின் பட்டியலில் அவுஸ்திரேலியா, இஸ்ரேல் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளும், ஆபத்தான கட்டத்தில் இந்தியா, ஸ்பெயின் மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளும் உள்ளன. பாகிஸ்தான் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளிலும் இயற்கை வளங்கள் வேகமான அழிந்து வருகின்றன என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காடு அழிப்பை வெளிப்படுத்திய ஊடகவியலாளர் மீது தாக்குதல்

முல்லைத்தீவில் காடுகளை அழித்து மரங்களை கடத்துபவர்கள் தொடர்பில் தகவல்களை வெளியிட முயன்ற ஊடகவியலாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறீலங்காவில் புதிய அரசு பதவியேற்ற பின்னர் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள இயற்கை வளங்கள் அதிகளவு அழிக்கப்படுகின்றன. இந்த நிலையில் இந்த வாரம் இடம் பெற்ற தாக்குதல் என்பது வடக்கின் சூழல் பாதுகாப்புக்கு பாரிய ஒரு அச்சுறுத்தலாக மாற்றம் பெற்றுள்ளது.

சூழல் பாதுகாப்பு தொடர்பில் அக்கறையுள்ளவர்கள் இந்த சட்டவிரோத நடவடிக்கையை கண்டிப்பதுடன், தாக்குதலுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என முல்லைத்தீவு வாழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலக்கு
இதழ் 100
வாராந்த மின்னிதழ்
அக்டோபர் 18, 2020
03
ஆசிரியர் தலையங்கம்

## நினைந்து தலை சாய்க்கிறோம்

இலக்கின் இலக்கு நோக்கிய பயணத்தில் முதலாவது இதழிலிருந்து நூறாவது இதழ்வரை ஆக்கங்கள், செவ்விகள், செய்திகள் வழங்கியோர், ஓவியர்கள், வடிவமைப்பாளர்கள், ஒப்பு நோக்குநர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், உலகத்தளமெங்கும் எடுத்துச் சென்றோர், ஆலோசனைகள் வழங்கியோர், நிதியாதரவு தந்தோர், ஒருங்கிணைப்பாளர்கள் எனப் பணியாற்றிய அனைவரையும்

நன்றியோடு நினைந்து தலை சாய்க்கிறோம்

## இலக்கு

*என்றும் அணையா இலட்சிய விளக்கு*
*ஏற்றம் தந்ததைத் திசையும் துலக்கு*
*எந்நிலைமாறினும் துன்பம் விலக்கு*
*எனையும் உனையும் சேர்க்கும் இலக்கு!*

*யாதும் ஊரெனப் பரவிக்கிடந்தேனும்*
*யாவருமறிய உரிமையை முழக்கு!*
*தீதும் நன்றும் தெளிவெனக்கடந்து*
*எதுவாயினினும் அடைவாய் இலக்கு!*

*திசைதிசையெங்கிலும் திரிந்துகிடந்து*
*திறமைகள் யாவும் பறையென முழக்கு!*
*தீரரொருவரின் வழியில் நிமிர்ந்து*
*தீப ஒளியினால் திசையெங்கும் விளக்கு!*

*பாடுகள் மாறலாம், பாடல்கள் மாறலாம்*
*பாதைகள்கூடப் பயணத்தின் நோக்கில்*
*பரந்தும் விரியலாம்,*
*பரந்து கிடக்கும் வான்போல் என்றும் மாறாததொன்றுன்*
*இலக்கே இலக்கென முழக்கடா முழக்கு!*

*வாடிக்கிடந்த பயிர்கள் துளிர்த்து*
*வசந்தமொன்றை மண்ணிலே பரப்பு!*
*தேடித்திரிந்த தேசங்கள் கடந்து உன்*
*தேசம் பாரடா வடக்குடன் கிழக்கு!*

*ஏழுகடல்களைத் தாண்டி நீ நின்றும், உன் உரிமைச் சத்தம்*
*முழக்கடா முழக்கு!*
*எதுவரும்போதிலும், எழுந்துநிற்பதே*
*உன்மானச் செருக்கடா,தேசம் செதுக்கு!*

*தேடியலைந்து, தேம்பியழுது*
*உதிரமும், வியர்வையும், கண்ணீரும்சிந்தி,*
*ஓடிய திசைகளில் நீ நிர்க்கதியாகினாய்,*
*நீ ஓடியதுபோதும்,*
*ஓளி(ழி)ந்ததும் போதும்,*
*போதுமடா போதும் பொல்லாமை நிறுத்து!*
*தேடியொரு புத்தொளியை உனக்காய்*
*வளர்த்து உனக்குள் நீயே உள்ளொளி பெருக்கு!*
*வழியதை அமைத்து வாழ்வதைச்செதுக்கி வல்லவர் நாமென*
*வரலாறு படைத்து வாழும் தமிழனாய் வலிமை துலக்கு!*

*இலக்கின் பயணம் இலட்சியம் வெல்லட்டும்!*
*இணைந்த கரங்களாய் இதயங்கள்*
*மலரட்டும்!*
*தொலைந்த நம்கனவுகள் துல்லியமாகட்டும்,*
*தூய்மையாய் ஒருதேசம் துணிவோடு நிமிரட்டும்!*

**-காந்தள்-**

# இலக்கின் இலக்கு

இலக்கு நூறாவது இதழை விரித்துள்ள இந்நேரத்தில் இலக்கின் இலக்கு இணைவால் இலக்கை அடைதலே என மீளவும் உரக்கக் கூவி மகிழ்கின்றோம். இதற்காக இந்த நூறு இதழ்கள் வரை உழைத்த அனைவரையும் ஈழத்தாய் உடன் சேர்ந்து நாமும் முத்தமிட்டுப் பேருவகை கொள்கின்றோம். எங்கள் தேசியத்தலைமையின் தெளிவான வழிகாட்டலும், மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்த அத்தனை ஈழத்தமிழர்களின்; எதனாலும் அசைக்க முடியாத உள்ள உறுதியும் ஈழத்தமிழர்கள் தங்களிடையுள்ள வேற்றுமைகளை, வேறுபாடுகளைக் களைந்து தம்தம் நிலையிலேயே ஈழதேச மக்களாக இலக்கை நோக்கிப் பயணிப்பதற்கான ஆற்றலை என்றென்றும் தந்து நிற்பார்கள் என்பது இலக்கு இதழைத் தொடங்கிய அன்று முதல் இன்று வரையான எமது மிக உறுதியான நம்பிக்கை. இந்த நம்பிக்கை தந்த பலத்துடனேயே கடந்த நூறு இதழ்களிலும் இலக்கு ஈழத்தமிழர்களை அவரவர் சிறப்பு நிலைகளைப் பேணியவாறே பொது நிலையில் ஈழதேசமக்களாக இணைந்து, ஈழத்தமிழர் உரிமைகளைப் பாதுகாத்திடும் இலக்கை நோக்கி *2009* இல் துப்பாக்கிகள் மௌனித்துவிட்ட இடத்தில் இருந்து சனநாயக ரீதியாக ஈழத்தமிழர் என்ற ஒரு அணியில் அமைதி வழிப் போரட்டத்தைத் தொடருங்கள் என்றே பலநிலைகளிலும் வலியுறுத்தி வந்தது.

இதுவே என்றும் இலக்கின் தலையாய நோக்காகத் தொடரும். இலக்கு எல்லா ஈழத்தமிழர்களினதும், ஈழத்தமிழருடன் இணைந்து உறவாடும் உலகத் தமிழர்களதும், உலக மக்களதும் இணைப்புக் களமாகவே என்றும் தன் பணியைத் தொடரும் என்பதை இவ்விடத்தில் மீளவும் உறுதியாகக் கூறவிரும்புகின்றோம். எங்கிருந்தாலும் எமது மக்களே எமது சொத்து. எமது மக்களின் ஒற்றுமை ஒன்றே எம் மக்களின் பலம். அவர்களின் சுதந்திர, சமத்துவ, சகோதரத்துவ பெருவாழ்வே என்றும் எம் இலக்கு. ஏனெனில் பிரித்தானிய காலனித்துவ அரசு ஈழத்தமிழர்களின் இறைமையை பெரும்பான்மைச் சிங்களவர்களின் இறைமையுடன் ஒற்றையாட்சிப் பாராளுமன்றத்தில் பகிர்ந்து வாழ ஏற்படுத்திய அரசியல் முறைமையைப் பயன்படுத்தி இலங்கைத் தீவில் ஈழத்தமிழர்களிடை இணக்கப்பாட்டை இல்லாது செய்யும் பலவகையான பிரித்தாளும் தந்திரங்களைக் கையாண்டு அவற்றின் வழியாகவே ஈழத்தமிழர்களின் பிரிக்கப்பட முடியாத உரிமையான அவர்களின் தன்னாட்சி உரிமையினை அடக்கி, அவர்களின் தொன்மையும் தொடர்ச்சியுமுள்ள ஈழத்தமிழ்த் தேசியத்தை ஒடுக்கி வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலான அவர்களின் தாயகத்தில் அவர்களைப் படைபலம் மூலம் இனங்காணக் கூடிய அச்சத்திற்கு உள்ளாக்கி அழமைப்படுத்தித் தன்னிச்சையான முறையில் இனஅழிப்பு, இனத்துடைப்பு, பண்பாட்டு இனஅழிப்பு என்பவற்றை உலக நாடுகளுக்கோ, அமைப்புக்களுக்கோ, உலக சட்டங்களுக்கோ, ஒழுங்குகளுக்கோ வழமைகளுக்கோ எவ்வித அச்சமுமின்றி நடாத்தி ஈழத்தமிழரை ஆண்டு வருகிறது என்பது கடந்த *72* ஆண்டுகால வரலாறாக உள்ளது.

இதனால் ஈழத்தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் ஆன்மிக விடுதலை என்பது இந்நான்கு தளங்களிலும் ஈழத்தமிழர்களைக் குழுக்களாகவும் தனிநபர்களாகவும் பிரிக்கும் அத்தனையையும் ஈழத்தமிழர்கள் அறிவார்ந்த மீள்வாசிப்புக்கு உட்படுத்துவதன் மூலம் கண்டறிந்து விலக்குவதன் மூலமே சாத்தியமாகும். இதுவே ஈழத்தமிழர்களின் பிரிக்கப்பட முடியாத உரிமையான தன்னாட்சி உரிமையின் உள்ளக தன்னாட்சித்தன்மையையும், வெளியகத் தன்னாட்சித் தன்மையையும் நாளாந்த வாழ்வு க்கும் வளர்ச்சிக்குமான கருவிகளாகப் பயன்படுத்த ஈழத்தமிழர்களின் அரசியல் ஆற்றலை வலுப்படுத்தும். ஈழத்தமிழர்களிடை, சமூகநிலையில் சாதி சமயம் பிரதேசம் என்கிற முத்தரப்பட்ட மேலாண்மைகளின் வேறுபாடுகளையும் பெண்ணடிமைத்தனத்தையும் சீதனக் கொடுமைகளையும் பால்நிலை வேறுபாடுகளையும் விலக்கி, பொருளாதார நிலையில் உள்ளவர் இல்லாதவர் இடை உள்ள இடைவெளியை வறுமையையும் அறியாமையையும் உலகத்தமிழர்களின் கல்விப் பலத்தையும் சமூக மூலதனத்தையும் அவர்களுடன் பகிர்வதன் வழி குறைத்து, ஆன்மீகநிலையில் உண்மையை நிலை நிறுத்தி வாழ்தல், உள்ளதைத் தன்னலமற்ற முறையில் பகிர்ந்து நன்மைத்தனம் உள்ளவராக வாழ்தல், மற்றவர்களின் சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்தி வாழ்தல் என்பவையே ஆன்மீகம் என்பதை உணர்ந்து வாழ உதவி, அரசியல் நிலையில் ஈழத்தமிழர்களின் தாயக, தேசிய, தன்னாட்சி உரிமைகளை அவர்கள் எந்நாளும் தொடர்ந்து பேணி இந்த மண் எங்களின் சொந்த மண் என்ற உரிமையுடன் அவர்கள் வாழ இயன்றதைச் செய்தலே இலக்கின் போக்கு.

சுருக்கமாகக் கூறுவதானால், தேசமாக ஈழத்தமிழரைத் தொடர்ந்து நிலைபெறவைக்க தேசஉருவாக்க *(Nation building Process)* முயற்சிகள் அவசியம். இந்த தேச உருவாக்கத்தின் செல்நெறியாக *(Mode of Direction)* அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்படல் என்பது அமைந்து நிலைமாற்று நீதி உலக அமைப்புக்களால் காலதாமதமின்றிச் செயற்படுத்தப்படல் வேண்டும். என்பதே இலக்கின் விருப்பு.

இவற்றைத் தாயகத்திலும், அனைத்துலக மட்டத்திலும் தெளிவாக எடுத்தியம்பி ஈழமக்களை ஒன்றிணைப்பதும், அனைத்துலக சட்டங்களுக்கு அமைய அனைத்து நாடுகளையும், அமைப்புக்களையும் அதீத மனிதாயத் தேவைகளுடன் உள்ள நலிவுற்ற மக்களான ஈழத்தமிழர்களுக்கு இத்தகைய சூழலில் ஒரு நாட்டின் இறைமையை மீறி உதவுதல்; அனைத்துலக நாடுகளின் கடமை என்ற அனைத்துலக மன்றத்தின் மனிதாய நெறிப்படுத்தலுக்கு அமைய ஈழத்தமிழர்களின் வளர்ச்சிக்கு நேரடியாக உதவும்படி, உலகத் தமிழினத்தின் உதவியுடன் கேட்பதும், இலக்கின் செயற்றிட்டம்.

உலகில் அமைதியையும் மனித உரிமைகளையும் போற்றும் அனைத்து மக்களும், அமைப்புக்களும், நாடுகளும், இந்த எமது நீண்ட பயணத்தில் எம்மோடு இணைந்து, ஈழத்தமிழர்கள் தமது உரிமைகளைப் பாதுகாத்தல் என்னும் இலக்கை விரைவில் அடைய உதவுவர் என்பது இந்த நூறு இதழ்களையும் வெளியிட்டதில் நாம் பெற்ற நம்பிக்கையாக உள்ளது.

**ஆசிரியர்**

# அமெரிக்கா, இந்தியாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்த

# சீனாவின் அதிரடியான இராஜதந்திர நகர்வுகள்

அகிலன்

சீனாவிலிருந்து உயர் மட்டத் தூதுக் குழு ஒன்று கடந்த வாரம் கொழும்புக்கு மேற்கொண்ட திடீர் விஜயம், இராஜதந்திர மற்றும் அரசியல் மட்டத்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியமைக்குப் பல காரணங்கள் உள்ளன. ஆச்சரியத்தை ஏற்படுத்தியமைக்கு மேலாக - இலங்கையைச் சுற்றி இடம்பெறும் சர்வதேச வல்லாதிக்கப் போட்டியின் பிந்திய நகர்வுகளையும் இந்த விஜயம் வெளிப்படுத்தியிருக்கின்றது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் உள்ள சர்ச்சைக்குரிய மலைப்பகுதியான லடாக்கில் இரு நாடுகளுமே ஆயிரக்கணக்கான துருப்புக்களைக் குவித்து அந்தப் பகுதி பதற்றமான நிலையில் காணப்படும் ஒரு பின்னணியில்தான் இந்த விஜயம் இடம்பெற்றிருக்கின்றது. இலங்கைக்கு வரும் இராஜதந்திரிகள் உட்பட அனைவரும் 14 நாள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், சீனத் தூதுக்குழு மட்டும் முதல் நாள் இரவு வந்து மறுநாள் காலை, இலங்கை ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்தது.

இக்குழுவிற்கு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய அரசியல் குழு உறுப்பினரும் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளருமான யங்ஜி யேச்சி தலைமை தாங்கியிருந்தார். சீனாவின் வெளிவிவகார அமைச்சராகவும் முன்னர் பணியாற்றிய இவர், சீன அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை வகுப்பில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஒருவராகவும் கருதப்படுகின்றார்.

அதனால், இவரது இலங்கைக்கான விஜயம் மிகவும் முக்கியமானது. அதுவும் 26 உறுப்பினர்களைக் கொண்ட உயர் குழு ஒன்றுக்குத் தலைமைதாங்கி இவர் வந்திருந்தமை இந்த விஜயத்தின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரித்திருந்தது.

### சீனாவுக்கு முக்கியத்துவம்

'கோவிட் 19' உலகளாவிய தொற்றின் பின்னர் அறிமுகமான இரண்டு சொற்றொடர்கள் இராஜதந்திர நடைமுறைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன. *air bubbles, travel bubble* என்பன தான் அவை. கொரோனா தொற்று எமது வாழ்க்கை முறையில் பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் செல்லும்போது, இராஜதந்திரிகள்கூட கட்டாய தனிமைப்படுத்தலுக்குள்ளாகிறார்கள்.

ஆனால், நம்பிக்கையின் அடிப்படையில் கொரோனா கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குச் செல்பவர் அவ்வாறான கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படாமல் செல்வதற்கான ஏற்பாடுதான் *air bubbles* அல்லது *travel bubble* எனச் சொல்லப்படுகின்றது. இதற்கான உரியான தமிழ்ச் சொல் எதுவும் இதுவரையில் நடைமுறையில் வரவில்லை என்பதால், ஆங்கிலச் சொற்களையே இங்கு பயன்படுத்துகின்றோம். தற்போது சீன உயர் மட்டக் குழு இலங்கை வந்ததும் இவ்வாறான ஒரு ஏற்பாட்டில் தான்.

புதுடில்லிக்குச் சென்று திரும்பிவரும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஒவ்வாரு தடவையும் 14 நாள் தனிமைப்படுத்தலில் இருந்த பின்னர் தான் சந்திப்புக்களை மேற்கொள்கின்றார். இலங்கைக்கு புதிதாக வரும் இராஜதந்திரிகள் அனைவருமே இவ்வாறான நடைமுறையைப் பின்பற்றும் பின்னணியில், சீனத் தூதுக்குழுவின் 26 பேர் மட்டும் இந்தத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டது சீனாவுக்கு இலங்கை கொடுத்திருந்த முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியது.

இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான மீள் நிர்மாண நடவடிக்கைளில் இந்தியாவும் சீனாவும் ஒன்றையொன்று போட்டியிட்டுக்கொண்டு இறங்கியிருந்ததையே காணமுடிந்தது. இப்போட்டியில் சீனா பிரமாண்டமான கட்டுமானங்களுக்கான அனுமதியைப் பெற்றிருந்ததோடு, இலங்கையின் வரைபடத்தையே மாற்றியமைக்கக் கூடிய வகையில் கொழும்பு துறைமுகநகர் அபிவிருத்தித் திட்டத்தையும், மத்தள விமான நிலைய நிர்மாணத்தையும் தனது பிடிக்குள் கொண்டு வந்திருந்தது.

### கடன்பொறி இராஜதந்திரம்

உலகில் யுத்தம், பொருளாதார, அரசியல் நெருக்கடிகளால் பாதிப்புற்ற நாடுகளுக்கு பெருமளவு கடன் வசதிகளை வழங்கி, பின்னர் அந்நாடுகள் கடன்களை திரும்பச் செலுத்தாத நிலையில், அவற்றை தனது கட்டுப்பாடின்கீழ் வைத்திருப்பதே சீனாவின் கபடத்தனமான இராஜதந்திரமாகும். இலங்கைக்கும் தொடர்ந்தும் கடன்களையும், நிதி உதவிகளையும் அள்ளி வழங்கும் சீனா, இலங்கையைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான உபாயங்களையும் வெற்றிகரமாக முன்னெடுக்கின்றது.

தென்சீனக் கடல் உட்பட தென்னாசியப் பிராந்தியத்தில் தனது ஆளுமையை நிலைநாட்ட சீனா திட்டங்களை வழிவகுத்துள்ள நிலையில், இலங்கையின் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டமும் அதன் விரிவாக்க செயற்பாடுகளின் ஓர் அங்கமாகவே கருதமுடியும். கொழும்பு துறைமுக அபிவிருத்தி தற்போது அதன் இறுதிக்கட்டத்தை நெருங்கி வருகின்றது. பல பில்லியன் டொலர்களை சீனா இதற்கென ஒதுக்கியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் அதனுடைய எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு இதனைப் பிரதானமானதாகக் கருதுகின்றது.

அதனால், சீனாவுக்கு அதிகளவு வாய்ப்புக்களைக் கொடுத்திருக்கின்றது. அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி, கொழும்பு துறைமுக நகரத் திட்டம் என்பன வெறுமனே பொருளாதாரத்துடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. கேந்திர ரீதியாகவும் முக்கியமானது. அந்த நிலையில், சீன நிறுவனங்கள் சிலவற்றுக்கான தடையை அமெரிக்கா விதித்தது. கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தையும் இலக்காக வைத்ததாகவே அந்தத் தடை கருதப்பட்டது. ஆனால், சீனாவின் திட்டங்களை அது பெருமளவுக்குப் பாதிக்கவில்லை.

### சீனாவின் புதிய உபாயம்

இலங்கை வந்த சீனக்குழு இலங்கை தனது வல்லரசுப் போட்டிக்கு துணை நிற்பதற்கு பிரதி உபகாரமாக இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக சர்வதேச அரங்கிலும், ஐ.நா மனித உரிமைப் பேரவையிலும் இலங்கைக்கு உதவத் தயாராக

இருப்பதாக அறிவித்திருந்தது. சீனக் குழுவின் தலைவர் யங்ஜி யேச்சி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்த போது இந்த வாக்குறுதியை வழங்கியிருக்கின்றார்.

மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் கடுமையான நெருக்கடி ஒன்றை இலங்கை சந்திக்கப் போகின்றது. இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு வழங்கப்பட்ட இரண்டு வருடகால அவகாசம் முடிவுக்கு வருவதால் அடுத்ததாக என்ன செய்வது என்பதையிட்டு மேற்கு நாடுகள் சிந்திக்கும் தருணம் இது. இந்த வேளையில், சீனாவின் ஆதரவு இலங்கைக்குத் தேவைப்படும். அதற்கான வாக்குறுதி கடந்த வாரம் பெறப்பட்டு விட்டது.

அதேவேளையில், இலங்கையின் ஆதரவை சீனா வேண்டிநிற்பதற்கு மற்றொரு காரணமும் உள்ளது. இந்தியாவை அண்டிய நாடாக இலங்கை இருப்பதால் தற்போதைய லடாக் நிலவரம் பெரும் யுத்தமாக வெடிக்கும் பட்சத்தில், இலங்கையின் மத்தள விமான நிலையம் உட்பட இலங்கையில் தனக்கு தேவையான வளங்களை சீனா பெரிதும் பயன்படுத்துமென்றே கருத முடியும். சீனா உயர் மட்டக்குழுவின் விஜயத்தின் பின்னணியில் இதுவும் இருக்கலாம் என்றே இராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன.

### அமெரிக்காவின் அதிரடி

இலங்கையை மையப்படுத்தி சீனா முன்னெடுத்திருக்கும் இராஜதந்திர நகர்வுகள் இந்தியாவுக்குத் தான் உடனடி அச்சுறுத்தலாக உள்ளது ஆனால், இவ்விடயத்தில் இந்தியா மௌனமாக இருக்கின்றது. ஆனால், நிலைமைகளை உன்னிப்பாக அவதானிக்கின்றது. பதிலாக, அமெரிக்காதான் இதற்கு பதில் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக அமெரிக்காவுடன் இலங்கை செய்து கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்ட எம்.சி.சி. உடன்படிக்கை கேள்விக்குள்ளாக்கப் பட்டிருப்பதும் அமெரிக்காவின் சீற்றத்துக்குக் காரணம்.

"எம்.சி.சி உடன்படிக்கை இவ்வளவு தூரம் அரசியல் மயமாக்கப்பட்டமை வெட்கக்கேடான விடயம்" என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனா பி. டெப்பிளிட்ஸ் தெரிவித்திருந்தார். "இலங்கையின் வேண்டுகோளை தொடர்ந்தே அமெரிக்கா எம்.சி.சி உதவித் திட்டத்தை இலங்கைக்கு வழங்க முன்வந்தது என தெரிவித்துள்ள தூதுவர், வறுமையை ஒழிப்பதும்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

# இனமான உணர்வோடு தன்னாட்சி வென்றெடுப்போம்

தொல்புவியில் நாமாண்ட வரலாறு மீண்டெழுதி
வல்லாண்மைத் திறத்தினொடு அதிவிவேக நுண்மதியால்
பல்நாட்டு வல்லரசார் உள்ளத்தை ஊடுருவி
சல்லடையாய் சிங்களத்தைத் துளைத்தெடுத்த
வேந்தனெங்கே!

கர்மவீரன், திடசித்தன், களங்கமில்லாத் தூயநெஞ்சன்
தந்தை செல்வா முன்மொழிந்த தமிழ் ஈழம் உருவாக்கி
தர்மநெறி தழுவியவர் நாற்படைகள் அரணமைக்க
அதர்மத்தை வேரறுத்து இனம்காத்த செம்மலெங்கே!

பதினெட்டு வயதினிலே விடுதலையின் கனல்மூண்டு
கதியற்றுத் தடுமாறித் தவித்ததமிழ் மக்கள்துயர்
பதியத்தன் னுள்ளத்தில் பகையொடுக்கும் ஆவேசம்
கொதித்தெழும்பத் தேசத்தைக் கைக்கெடுத்த
வேந்தனெங்கே!

பாசமிகு உறவுகளே, தமிழீழத் தலைவர்களே
நன்றாகச் சிந்தியுங்கள் சிந்தித்துச்
செயலெடுங்கள்
குருதியினில் நடைபயின்று நெருப்பாற்றை
ஊடுருவி
பகைவர்தளம் தகர்த்தழித்து மண்மீட்டுக்
காத்தவர்கள்
தமிழன்னை ஈன்றெடுத்த தவப்புதல்வர்
புதல்வியர்கள்

விண்ணுறையும் மாவீரர் கனவுகளை
நாம் சுமப்போம்
சர்வதேச நாடுகளின் சதியால்நாம்
அழிந்தாலும்
துவளாது நாமொன்றாய்த் தலைமகனின் உறுதியுடன்
சாத்வீகப் போர்தொடுத்து அடிமைவிலங் குடைத்தெறிவோம்

சந்ததியின் நலனுக்காய் எழுச்சிக்காய் சிந்தியுங்கள்
தலைவணங்காத் தமிழனவன் தமிழினத்தின் தெய்வமகன்
அஞ்சாத நெஞ்சனவன், அடக்கியாண்ட சிங்களத்து
இனவாத நெஞ்சத்துச் சண்டாளர் பாதகங்கள்
களைந்தெங்கள் இனம்காத்த வீரத்தை மறப்பீரோ

இராணுவத்தை வெளியேற்றி உறவுகளைக் குடியமர்த்தத்
தாமதிக்கும் காலமெல்லாம் இனமழியும் காலமன்றோ
தாயகத்தில் சிங்களவர் குடியேற்றம் தொடர்கையிலே
எங்கள்மண் முற்றாகக் கபளீகரம் செய்கையிலே
எதிர்த்தொருபோர் முன்னெடுக்கத் திரண்டெழுவீர் உறவுகளே

கர்ப்பத்துச் சிசுக்களொடு கருத்தரித்த பெண்களொடு
கைக்குழந்தை அன்னையரோ டிளைஞர்கள் யுவதிகள்
வளர்ந்தவர்கள் வயோதிபர்கள் வயதுவேறுபாடின்றி
முள்ளிவாய்க்கால் பலிக்களத்தில் குண்டுகளால்
கொல்லப்பட்ட
கொடூரங்களுக் கோர்தீர்வு பெறுவதற்குத்
திரண்டெழுவோம்

நீண்டகாலம் சிறைகளிலே வாடுகின்ற
இளைஞர்களை
மாண்டழியும் முன்னதாக மீட்டெடுக்கும்;
துணிச்சலுடன்
வீரம்மிக்க இளைஞர்களே, தலைவர்களே
திரண்டெழுந்து
அகிம்சைவழிப் போராடி அடிமைவிலங்
குடைத்தெறிவோம்

சுயநலத்தின் வேரறுத்து பிரிவினைக்கு
இடங்கொடாது
ஒன்றுபட்டுக் கரமிணைத்து மனிதநேயம் வளர்த்தெடுத்து
மனோதிடத்தில் தளராது மாற்றான்பேச்சில் மயங்கிடாது
இனமான உணர்வோடு தன்னாட்சி வென்றெடுப்போம்.

**மாரீசன்**

## உன்னை நீயுணர் உயர்வினைக் காணுவாய்

முள்ளி வாய்க்காலெம் முடிவல்ல அறிந்திடு
பள்ளிகொள்ள இது படியல்ல புரிந்திடு
எள்ளி நகைப்போரை புறந்தள்ளி நடந்திடு
துள்ளி எழுந்துமே தடைகளைக் கடந்திடு

வெண்ணை திரண்டுமே தாழியில்
வரும்கணம்
கண்ணை மூடியே கரமதை விடுவதோ?
மண்ணை காத்திட மடிந்தவர் சந்ததி
திண்ணை குந்தியே தினங்களைப்
போக்குமோ?

விழுந்து எழுந்திடா மழலையும் உள்ளதோ?
உயர்வு தாழ்விலா சாலையும் செல்லுமோ?
அலைகள் ஓய்ந்ததோர் ஆழியும் உள்ளதோ?
விலைகள் இன்றியே விடுதலை
வெல்லுமோ?
எந்தக் கையது உடைந்திடும் போதிலும்
நம்பிக் கையது வாழ்வினைத் தாங்கிடும்
தும்பிக் கை-பலம் பேறுறு யானையும்
நம்பிக்கை கெடில் அடிமையே ஆகிடும்

பொன்னைப் புடமிடின் மின்னிடும்மேலுமாய்
முங்கில் சுடப்படின் இசைத்திடும் கானமாய்
மண்ணுள் புதைந்தபின் முளைவிடும்
வித்தென
உன்னை நீயுணர் உயர்வினைக் காணுவாய்

இலக்கு மாறிடா தியங்கிட வேண்டுமே
கலக்கம் இன்றியே நடையிடு நீண்டுமே
பலத்தை வளர்த்துமே பறந்திடு மீண்டுமே
நிலத்தை வாழவை நீயதை ஆண்டுமே!

**மது நோமன்**

# இந்து சமுத்திரப் பிராந்திய பூகோள நெருக்கடியில்

# தமிழ் மக்களின் வகிபாகம்

சிறீலங்கா அரசுக்கு தாம் இரண்டு கடற்படைக் கப்பல்களை வழங்கியதாகவும், அதில் எஸ். எல்.என் கஜபாகு என்ற கப்பலே கடற்படையிடம் உள்ள கப்பல்களில் பெரியது எனவும், அதனைதான் அண்மையில் எம்.வி.டயமன்ட் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு சிறீலங்கா அரசு பயன்படுத்தியது. ஆனால் அமெரிக்காவை புறக்கணித்து சிறீலங்கா சீனாவுடன் நல்லுறவுகளை பேணுவதாகவும், அமெரிக்காவின் மிலேனியம் உடன்பாட்டை அரசியல்மயப்படுத்தி சிறீலங்கா அரசு தம்மை கேவலப்படுத்தியுள்ளதாகவும் சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா தெப்லிஸ் கடந்த வாரம் தெரிவித்துள்ள கருத்துக்கள் ஆழமானவை.

இந்த கருத்துக்களை பார்க்கும் போது, சீனா, ரஸ்யா, ஈரான் போன்ற நாடுகளை மிரட்டும் அமெரிக்கா ஏன் சிறீலங்காவிடம் மட்டும் மென் போக்கை கடைப் பிடித்து மன்றாடுகின்றது என்ற கேள்வி ஏற்படலாம். அதற்கான ஒற்றைச் சொல் இந்தியா தான். இந்தியவை மீறி சிறீலங்காவின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு அமெரிக்கா தயக்கம் காட்டி நிற்கின்றது. அதுவே சிறீலங்காவுக்கு சாதகமானதும் கூட.

தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு இந்தியா 1987களில் முனைந்து தோல்வி கண்ட பின்னர், இந்தியாவும், மேற்குலகமும் இணைந்து ஒப்பரேசன் பெக்கன் என்ற நடவடிக்கை மூலம் அவர்களை அழித்ததற்கான காரணம் என்ன?

அன்று அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தமிழ் இனத்தின் விடுதலைப்போர் பாரிய பின்னடைவைச் சந்தித்த போதும், அதனை மேற் கொண்டவர்கள் பெற்றுக்கொண்ட நன்மை என்ன என்று சிந்தித்தால், நாம் எமக்கான வழியை கண்டறிய முடியும்.

அமெரிக்காவில் இடம்பெறும் அரச தலைவர் தேர்தலில் டிறம்ப் வெற்றியீட்டினாலும், பைடன் வெற்றியீட்டினாலும் அவர்களின் வெளிவிவகாரக் கொள்கைகளில் அதிகம் மாற்றம் ஏற்படப் போவதில்லை. மேற்குலகமாக இருந்தாலும் சரி இந்தியாவாக இருந்தாலும் சரி அவர்களுக்கு ஒரு இனத்திடம் இருந்து அரசியல், பொருளாதார மற்றும் பூகோள ஆதிக்க நலன் சார் நன்மை கிட்டும் போதே அந்த இனத்தின் தேவைகளை கண்டறிந்து உதவிகளை மேற்கொள்வார்கள்.

அதாவது விடுதலைக்காக போராடும் ஒரு இனம் தனக்கான உரிமைகளை பெறவேண்டும் என்றால் அந்த இனம் பிராந்திய அல்லது உலக வல்லரசுகளின் அரசியல், பொருளதார மற்றும் அறிவுசார் துறைகளில் அதிக அதிக்கத்தை கொண்டதாக இருக்க வேண்டும். இல்லையேல் அந்த இனம் யாருக்கு எதிராக போராடுகின்றதோ அந்த நாடு அல்லது இனம் பிராந்திய அல்லது உலக வல்லரசு நாடுகளுக்கு அச்சுறுத்தல் தரும் நாடுகளுடன் இணைந்து அச்சுறுத்தலாக மாறவேண்டும். இது தான் இன்றைய உலக ஒழுங்கு.

பல நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து தம்மை வளர்த்துக் கொண்ட பின்னர் தமக்கான ஒரு நாட்டை உருவாக்கிய இஸ்ரேலின் உருவாக்கம் என்பது இதில் முதலாவது வகை. 6 மில்லியன் யூத மக்கள் இஸ்ரேலில் வாழும்போதும், 12 மில்லியன் யூத மக்கள் அமெரிக்காவில் வாழ்கின்றனர். அமெரிக்காவின் பொருளாதார, அறிவியல் மற்றும் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் தகைமையில் அவர்கள் உள்ளனர். அணுகுண்டின் ஆக்கத் திற்குரிய கொள்கையை நிறுவியவரான ஐன்ஸ்ரினும் ஒரு யூத இனத்தவர் தான்.

## வேல்ஸ் இல் இருந்து ரஸ்

ரஸ்யாவுக்கு ஆதரவான நாடான யூகோஸ்லாவாக்கியாவிற்கு எதிராக போராடிய கொசோவோ, மொன்ரோநீக்கிரோ போன்ற நாடுகள் சுதந்திர நாடாக மலர்வதற்கான வழிகளை ஏற்படுத்தியது அவர்களின் எதிரி உலக வல்லரசின் எதிரியுடன் கைகோர்த்தது தான். இது இரண்டாவது வகை.

அதாவது தற்போதைய உலக ஒழுங்கில் நன்மை ஒன்றை வழங்குவதன் ஊடாகத் தான் உலகின் ஆதரவை பெறமுடியும் என்ற நிலை ஒன்று தோற்றம் பெற்றுள்ளது. தனது பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தான் 1980களில் இந்தியா தமிழீழ போராளிகளுக்கு ஆயுதம் வழங் கியது. அதன் பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் அதனை எட்டும் போது கண்துடைப்பாக 13ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டு வந்ததுடன், போராளிகளையும் அழிக்க முற்பட்டு நின்றது.

ஆனால் அன்றைய நிலைக்கும் தற்போதைய பூகோள பிராந்திய நெருக்கடிக்கும் அதிக வேறுபாடுகள் உண்டு. உலகின் எரிபொருள் தேவையின் மூன்றில் இரண்டையும், வர்த்தக விநியோகங்களில் 50 விகிதத்தையும் சுமந்து செல்லும் 60,000 கப்பல்கள் வருடம்தோறும் தென்னிலங்கையை கடந்தே இந்துசமுத்திரம் ஊடாக பயணிக்கின்றன. ஆனால் அதன் மையப்புள்ளியான அம்பாந்தோட்டையில் 99 வருட ஒப்பந்தத்தில் பெற்றுக் கொண்ட சீனாவின் துறைமுகம் உள்ளது. சீனாவின் பொருளாதாரத்தை தக்கவைப்பதற்கு இந்த வழங்கல் பாதை முக்கியமானது.

இதனை முறியடிப்பதற்காக இந்தியா உருவாக்க முனைந்த சேதுசமுத்திரத் திட்டமும் தோல்வியை கண்டதால், சீனாவின் பொருளாதார வளர்ச்சியை தடுக்க முடியாத நிலையில் இந்தியா உள்ளது. ஆனால் அமெரிக்காவின் எதிர்ப்புக்களையும் மீறி 2.5 றில்லியன் டொலர்கள் பெறுமதியான எரிபொருள் வளங்களைக் கொண்டதும், உலகின் அதிகளவு மீன்வளங்களைக் கொண்டதுமான தென்சீனக் கடலையும் கைப்பற்றியுள்ளது சீனா.

அமெரிக்காவின் 480 மில்லியன் டொலர் மிலேனியம் சலஞ்ச் உடன்பாட்டை அரசியல்மயப் படுத்தி தடைகளை ஏற்படுத்திய சிறீலங்கா அரசு அதே அளவு நிதியை தற்போது சீனாவிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளது. அது மட்டுமல்லாது பல உடன்பாடுகளில் கையொப்பமிடுவதற்காக சிறீலங்கா அதிபர் கோத்தபாயா ராஜபக்சா டிசம்பர் மாதம் சீனாவுக்கு செல்லவுள்ளார்.

இந்த நிலையில் தான் அமெரிக்கா தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. உயர்மட்ட

சீன அதிகாரிகளின் பயணத்தைத் தொடர்ந்து சிறீலங்காவுக்கு அவசர பயணம் ஒன்றை அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் மைக் பொம்பியோ மேற் கொள்ளவுள்ளதுடன், சீனாவுக்கு எதிராக அமெரிக்கா, யப்பான், அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் மேற்கொள்ளவுள்ள பாதுகாப்பு நடவடிக்கை உடன் பாட்டில் கையொப்பமிடுவதற்காக அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் மார்ச் எஸ்பர் இந்த மாதம் இந்தியா வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவங்களை உன்னிப்பாக அவதானித்தால் ஒன்று புரியும், சீனாவிற்கு எதிரான செயற்பாடுகளை அமெரிக்கா அதிகரிக்கும் போது அது சிறீலங்காவின் அரசியலில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும், 1987களில் அமெரிக்காவுக்கு எதிராக சிறீலங்காவை கையாண்ட இந்தியா, தற்போது அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட வேண்டிய நிலை உருவாகியிருந்தாலும், நீண்ட காலப்போக்கில் அது இந்தியாவையும் பாதிக்கும் என்பதை இந்தியா நன்கு அறியும். எனவே தான் அமெரிக்காவின் உடன்பாடுகளை சிறீலங்கா செயற்படுத்துவதை இந்தியா வெளிப்படையாக ஆதரிக்கவில்லை.

தற்போதைய இந்த உலக ஒழுங்கில் தமது விடுதலைக்காக போராடும் இனங்களுக்கு முன்னுள்ள இரண்டு தெரிவுகளில் நாம் எவ்வாறு செயற்படப் போகின்றோம் என்பதே இங்கு முன் வைக்கப்படும் கேள்வி.

சீனாவின் பக்கம் சிறீலங்கா செல்வது என்ற இரண்டாவது உத்தி என்பது சிறீலங்கா சார்ந்தது. ஆனால் புலம்பெயர் தமிழ் இனம் அவர்கள் வாழும் நாடுகளில் உள்ள அரசியல், அறிவியல் மற்றும் பொருளாதார நலன்களில் பங்குகொள்வதுடன், உலகம் எங்கும் உள்ள தமிழ் மக்கள் தமக்கு இடையிலான ஒரு வலையமைப்பை உருவாக்கி செயற்படுவோமாக இருந்தால் எம்மையும், எமது கோரிக்கைகளையும் புறக்கணிக்க முடியாத ஒரு சூழலை உலக மற்றும் பிராந்திய வல்லரசுகளிடம் நாம் உருவாக்க முடியும்.

• • •

# கிழக்கு மாகாண மக்கள்
# விழித்தெழும் நேரம் இது

தமிழ் தேசிய போராட்டத்தில் இழப்புகள் என்பது எண்ணிலடங்காது. கடந்த 35வருட காலத்தில் நாங்கள் பெற்றுக்கொண்டதைவிட இழந்தது அதிகம். வடகிழக்கு இந்த இழப்புகளில் இருந்து மீள்வதற்கான வழிவகைகள் இன்றி இன்றும் தடுமாறி வருவதை நாங்கள் உணர முடிகின்றது.

இந்த இழப்புகளில் அதிகமான இழப்புகளை கிழக்கு மாகாணம் எதிர்கொண்டிருந்தது. கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில், முஸ்லிம்கள், சிங்களவர்களினால் முன்னெடுக்கப்பட்ட இன ஒடுக்கு முறையிலும் தமிழர்கள் பல இழப்புகளை எதிர் கொண்டனர்.

கிழக்கு மாகாணம் என்பது, தமிழர் களின் பாரம்பரிய பிரதேசம். இன்று இலங்கையில் ஆதிக்குடிகளாக தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான பல ஆதாரங்கள் வெளிப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணம் முற்றுமுழுதாக தமிழர் களின் ஆளுகைக்குள் இருந்த மாகாணமாக இருந்த போதும், இன்று தமிழர்களின் இருப்பு கேள்விக்குறி யான மாகாணமாக இருந்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் தமிழர்களின் பாரம் பரிய பூமியான கிழக்கு மாகாணத்தினை நன்கு திட்ட மிட்ட வகையில் காலங்காலமாக அபகரிப்பதற்கு சிங்கள, முஸ்லிம்கள் எதற்காக இவ்வளவு ஆர்வம் காட்டுகின்றார்கள் என்பதை தமிழர்கள் சரியாக கவனிக் கத் தவறி விட்டனர் என்பதே உண்மையாகும். இதன் காரணமாகவே இன்று தமிழர் நிலங்களின் பெரும் பகுதிகள் அபகரிக்கப்பட்டு விட்டன. இதுவரைக்கும் தமிழர்கள் தங்களது பகுதிகளை பாதுகாப்பதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

இந்த அபகரிப்புகள் எதற்காக முன்னெடுக்கப் பட்டன, அவற்றினை தடுப்பதற்காக நாங்கள் என்ன நடவடிக்கைகள் முன்னெடுத்தோம் என்பதை பார்க்க வேண்டிய கட்டாயம் இருக்கின் றது.

கிழக்கு மாகாணம் என்பது கடல்வளம் ஒரு பகுதி யாகவும், நீர்வளங்கள் கொண்ட குளங்களை ஒரு பகுதி யாகவும்; நிலங்கள், காடுகள் என அனைத்து வளங்க ளைக் கொண்ட பகுதியாகவும் காணப்படுகின்றது.

இதன் காரணமாகவே கிழக்கு மாகாணத் தில் தமிழர்கள் வளமிக்க ஆட்சியை நடாத்தக் கூடியதாகயிருந்தது. அதன் காரணமாகவே கிழக்கு மாகாணத்தில் உள்ள வளங்களை கண்டியை ஆட்சி செய்த பல மன்னர்கள் தங்களது ஆளுகைக்குள் கொண்டு வந்தனர். அதன் பின்னர் இந்த நாட்டுக்கு வந்த வெள்ளைக்காரர்களும் கிழக்கினை தங்களது ஆளுகைக்குள் கொண்டுவந்து, ஆட்சி செய்துள்ளனர்.

இத்தனை வளங்கள் கொண்ட கிழக்கு மாகாண த்தின் எஞ்சியுள்ள தமிழர்களின் நிலங்களையும் தமிழர் கள் பாதுகாக்க தவறினால், எதிர்காலத்தில் தமிழர்கள் அடையாளமிழந்த நிலையில் செல்வது மட்டுமன்றி எதிர்கால சமூகம் வெறும் அடையாளத்தினை தொலை த்த வறுமையில் உள்ள சமூகமாக மாறும் நிலையும் உருவாகும்.

இன்று கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அதிகமாகவுள்ள பகுதியாக மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே காணப்படுகின்றது. திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் வளமிக்க காணிகள், வள மிக்க பகுதிகள் சிங்கள-முஸ் லிம்களினால் அபகரிக்கப் பட்டு விட்டன. இன்று ஒரு சில ஆலயங்களுக்கு மன்னர் களினால் பட்டயம் வழங்கப்பட்ட காணிகளே மீதமாக வுள்ளன. தமிழர்களின் இருப்பாக இருந்த காணிகள் அனைத்தும் திட்டமிடப்பட்ட வகையில் அபகரிக்கப் பட்டு விட்டன.

நாங்கள் எமது வளங்களையும், எமது காணி களையும் முறையாக பயன்படுத்தாது விட்டமையா

லேயே எமது வளங்களை ஏனைய சமூகங்கள் இலகு வில் அபகரிக்க முடிந்தது. தமிழர்கள் தங்களது வளங் களை முறையாக பேணாத காரணத்தினாலேயே இவ்வா றான நிலையேற்பட்டது. யுத்தத்தினை ஒரு காரணமாக கொண்டாலும், யுத்ததிற்கு பின்னரான காலத்தில் எமது

மட்டு. **நகரான்**

வளங்களை பாதுகாக்க என்ன நடவடிக்கையெடுத்தோம் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டிய நிலையில் இருக் கின்றோம்.

இன்று இந்தியாவும், சீனாவும் திருகோணமலை யில் காணிகளை கோருகின்றது என்றால், அவர்கள் பெருமளவான பணத்தினை இங்கு கொண்டுவந்து வீணாக்க அவ்வாறு கோரவில்லை. அவர்களுக்கு தெரியும் இங்குள்ள வளங்களைப் பயன்படுத்தி தமது நாட்டுக்கு கொண்டுசெல்ல முடியும் என்று ஆனால் அந்த மண்ணிலேயே பிறந்து வளர்ந்த நாங்கள் அது தொடர்பில் சிந்திக்க தவறும் நிலையே காணப்படுகி

ன்றது. அதனால்தான் நாங்கள் வளங்களை இழந்து கிழக்கு மாகாணத்தினை இழக்கும் நிலைக்குத் தள்ளப்ப ட்டுள்ளோம்.

இன்று புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகள் கொழு

விடுதிகளையும் அமைக்கும் நிலையினை மாற்றுவதற்கு எந்த தமிழரும் முயற்சிக்கவில்லையென்ற கவலை நீண்ட காலமாக இருந்து வருகின்றது.

இன்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் கள் அறுவடை செய்யும் நெல்லும், பெறப்படும் பாலும் தெற்கிற்கும் முஸ்லிம்களிடமும் செல்கின்றது. அதன் காரணமாக அவர்கள் தனவந்தர்களாகி காலப்போக்கில் தமிழர்களின் விவசாய நிலங்களையும் சொத்துகளையும் தங்கள் வசமாக்கும் நிலையே இருந்து வருகின்றது. விவ சாயிகளின் கஸ்டங்களை தங்களுக்கு சாதகமாக பயன் படுத்தி, தங்களது கைங்கரியத்தினை மிகவும் சூட்சு மமான முறையில் செயற்படுத்தி வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தினை எதிர்வரும் காலங் களில் பாதுகாத்து எஞ்சியுள்ள தமிழர்களின் இருப் பினை நாங்கள் பாதுகாக்கவேண்டுமானால், கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அதிகளவான முதலீடுகளை செய்ய வேண்டும். வடக்கில் இன்று அதிகளவான தமிழர்கள் பல்வேறு முதலீடுகளை முன்னெடுத்துள்ள நிலையிலும் கிழக்கில் அந்த நிலை மிகவும் குறைவா னதாகவே உள்ளது.

இன்று பல வளங்கள் தமிழர்களிடம் உள்ளது. அவற்றில் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் தமிழர்களின் வறுமையினை நீக்க முடியும். வேலை வாய்ப்பினை ஏற்படுத்த முடியும், தமிழர்களின் இரு ப்பினை பாதுகாக்க முடியும். எதிர்வரும் காலங்களில் அவற்றினை தமிழர்கள் செய்வார்கள்என்ற எதிர்பார்ப் புடன் இன்றும் கிழக்கு தமிழர்கள் உள்ளார்கள்.

• • •

# புதிய அனைத்துலக ஒழுங்கில் இந்துமா கடலின் முக்கியத்துவமும் ஈழத்தமிழர் உரிமைகள் பாதுகாப்பும்

- சூ.யோ. பற்றிமாகரன்

1945ஆம் ஆண்டில் 2ஆவது உலகப் பெரும் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, அனைத்து உலக நாடுகளின் மன்றம் நிறுவப்பட்டது முதல் ஐக்கிய அமெரிக்கா அனைத்துலக பொருளாதார நிறுவனங்களையும், இருதரப்பு பிராந்திய பாதுகாப்புக்கான அமைப்பாண்மைகளையும், தாராண்மைவாத அரசியல் விதிமுறைகளையும் கட்டியெழுப் பிப் பேணுதல் மூலம் தனது அனைத்துலகு குறித்த அக்கறைகளை வளர்த்து வந்தது. இந்தகட்டுப்படுத்தும் பொறிமுறைகள்கூட்டாக 'அனைத்துலக ஒழுங்கு முறை' என அழைக்கப்பட்டது.

அண்மைக் காலங்களில் வளர்ச்சியுற்றுள்ள உலக அதிகார மையங்கள் இந்த 'அனைத்துலக ஒழுங்குமுறை'க்கு சவால்களை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பாக ஆசியாவைப் பொறுத்தமட்டில் பனிப்போர் மூலம் சோவியத் இரஸ்சிய ஒன்றியத்தின் பாதுகாப்பு அமைப்பாண்மைகளை வலுவிழக்கச் செய்த அமெரிக்காவுக்குச், சீனமக்கள் குடியரசின் உலகப் பொருளாதார மேலாண்மை புதிய சவால்களை; அனைத்துலக பொருளாதார முறைமைகளிலும், அனைத்துலகப் பாதுகாப்புக்கான அமைப் பாண்மை களிலும் ஏற்படுத்தி வருகிறது.

அதேவேளை, இந்தியத் துணைக் கண்டத்தில் இந்திய நடுவண் அரசின் அதிகார எழுச்சி என் பது, ஒரு பெரும் நிலப்பரப்பின் பிராந்திய மேலாண்மை என்ற தளத்திலிருந்து தெற்காசிய நிலப்பரப்பின் வலுவாக மாறி, அதனையும் தாண்டி உலகச் சந்தையிலும், உலக அரசியலிலும் ஆசியா சார்ந்த மற்றொரு தீர்மானிக்கும் சத்தியாக-எழுச்சியாக உருவாகிய நிலைமையில் இந்தியா உலக நாடுகளின் மன்றத்தின் தீர்மானம் எடுக்கும் உரிமையிலும்; அதாவது அனைத்துலக நாடுகளின் மன்றத்தின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடாகவும் தன்னை உறுதிப்படுத்த முனைகிறது.

இந்நிலையில், இன்று உலக சமூகங்களையும், பொருளாதாரத்தையும், அரசியலையும், ஆன்மீகத்தையும் முற்றுமுழுதாக பத்து மாதத்தில் பந்தாடி முழு உலகையுமே நிச்சயமற்ற சமூக, பொருளாதார, ஆன்மீக அரசியல் உலகாக கோவிட் - 19 மாற்றி நிற்கிறது.

இந்த 'அசாதாரணத்தின் சாதாரணம்' என்ற இக் கட்டான உலக வாழ்வியல் நிலைக்குள் உலக நாடுகள் தங்கள் சமூக, பொருளாதார, அரசியல், ஆன்மீகக் கட்டமைப்புக்களை மறுசீரமைப்புச் செய்ய வேண்டிய அவசர காலநிலை காலத்தின் தேவையாக மாறியுள்ளது.

இந்த மறுசீரமைப்பில் சீனா ஏற்கனவே திட்டமிட்ட முறையில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் ஏற்படுத்தி வைத்துள்ள கடன் பொறிக்குள் உள்ள நாடுகள் சீனாவிடமே முழுதும் தங்கி நின்று நிதி உதவி பெற வேண்டிய இயல்பு நிலை தோன்றியுள்ளதால், உலகின் புதிய வல்லாண்மையாக சீனா பேரெழுச்சி கொள்ளும் என்பது பலத்த எதிர்வு கூறலாக உள்ளது. தனக்கு ஆசிய ஆபிரிக்க நாடுகள் வழியாக உலகச் சந்தை இணைப்பைத் தந்த தனது முன்னைய பட்டு வர்த்தகப் பாதையினை மீளவும் கடலிலும், தரையிலும் மீண்டும் தொடங்கும் சீனாவின் திட்டத்தால் 150 நாடுகளுக்குச் சீனா நிதிக் கடன் உதவிகளை பல்வேறு வழிகளில் செய்து; இன்று அவற்றின் தேசிய வருமானங்களில் குறிக்கப்பட்ட வீதம் சீனாவுக்கு வட்டியாகவும், இறக்குமதிப் பொருட்களுக்கும் சேவைகளுக்குமான விலைகளாகவும் செலுத்தப்படும் புதிய நிலையை உருவாக்கியுள்ளதால், சீனா மேலும் மேலும் நிதிப் பலம் பெறும் என்பது வெளிப்படையான உண்மை.

இது இதுவரை உலக வல்லாண்மைகளாக, பிராந்திய மேலாண்மைகளாக இருந்து வந்த நாடுகளுக்குப் புதிய அரசியல் சவாலாக மாறியுள்ளது. இதனால் இன்று மீளவும் புதிய அனைத்துலக ஒழுங்குமுறை ஒன்றை அமெரிக்கா உருவாக்க வேகமாக முனைவதும் இயல்பாகிறது.

இந்த முயற்சியில் இந்துமா கடலின் முக்கிய தளமாக உள்ள இலங்கைக் கடற்பரப்பில் அகலக்கால் வைத்துள்ள சீனா, அதனை மேலும் வலுப்படுத்த இவ் வருட மார்ச் மாதத்தில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவியையும், அக்டோபர் மாதத்தில் கோவிட் கால உதவி நிதியமாக 90 மில்லியன் டொலர் உதவியையும் வழங்கி சிறீலங்கா அதனது இறையாண்மை ஒப்பந்தங்களாகப் பெற்ற படுகடன்களுக்கு வட்டிகூட கட்ட இயலாது வங்குரோத்தாகும் அபாயத்தில் இருந்து காப்பாற்றி; அதன் பின்னணியில் சிறீலங்காவை தனது கடன் பொறிக்குள் மேலும் அகப்படுத்தியுள்ளது. ஏற்கனவே 2010இல் சீனாவுக்கான படுகடன் வட்டியைக் கட்ட இயலாத நிலையில் மகிந்த ராஜபக்ச அரசு தவித்த போது, அம்பாந்தோட்டையில்கடலோர 15000 ஏக்கரை தனதாக்கி; அங்கு தனது எக்ஸ்ஈம் வங்கி (EXIM Bank) மூலம் துறைமுகத்தின் முதலாம் பகுதியை அமைப்பதற்கு 361 மில்லியன் டொலரை முதலிட்டு கட்டியெழுப்பி, அத்துறைமுகம் செயற்படத் தொடங்கியது முதல் அதில் தன்னாட்சியாக 85 வீதத்தைக் கொண்டு திகழ்கிறது. இது தேவை ஏற்படும் காலங்களில் சீனா தனது போர்க் கப்பல்களை நிறுத்துவதை சிறீலங்காவின் இறைமையால் தடுக்க முடியாத நிலையினை ஏற்படுத்தி உள்ளதால், சிறீலங்காவை இறைமையும், தன்னாதிக்கமும் உள்ள தனிநாடாக; அனைத்துலக நாடுகளின் மன்றத்தில் உறுப்புரிமை உள்ளதாகக் கருத முடியுமா என்ற கேள்வியை 1956இற்குப் பின்னர் மீளவும் எழுப்பி உள்ளது.

1948 முதல் 1956 வரை பிரித்தானியக் கடற் படை திருகோணமலையில் கப்பல் நிறுத்தும் உரிமை கொண்டுள்ளது என இரஸ்சியா இலங்கைக்கான அனைத்துலக உறுப்புரிமையை தனது வீட்டோ அதிகாரம் கொண்டு இருமுறை தடுத்து நிறுத்தியது. மேலும் கொழும்பு நகர முதலீடுகளில் ஈடுபடும் சீனர் தலை நகரிலும் தனக்கான தன்னாட்சி வலயங்களை உருவாக்கி, இலங்கை அரசியலில் தான் தீர்மானம் எடுக்கும் சக்தியாக வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. இவை அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இந்துமா கடல் மேலான அவற்றின் மேலாண்மைக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி வருவதை யாரும் மறுக்க முடியாது.

இந்த நிலையில், தங்களது சந்தையினையும், இந்துமா கடல் மேலான மேலாண்மையையும் எவ்வித மாவது தக்கவைக்க வேண்டும் என்னும் நோக்கில் 55 பில்லியன் இறையாண்மை ஒப்பந்தங்களுடன் கூடிய படுகடன்களுக்கு ஆண்டொன்றுக்கு 2.9வீத தேசிய வருமானத்தை வட்டியாக வாரி வழங்கி மகிழ்ந்து கொண்டிருக்கும் ராஜபக்ச அரசினை நிதி மீட்பு செய்தாவது தங்கள் உறவையும், சிறீலங்கா வுடன் வளர்ப்பதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் பலவகைகளில் நிதி உதவிகளையும், கடன்களையும் தொடர்கின்றன. சீனாவின் கடனிலும், அமெரிக்காவின் பாதுகாப்புக்கான நிதிக் கடன்களிலும், இந்தியாவின் கலாச்சாரப் பேணுகைக் கடன்களிலும் கோவிட் – 19இற்குப் பின்னரான காலத்தைச் சிறீலங்கா தொடங்கியுள்ளது.

1948 முதல் இன்று வரை இலங்கைக்கு 2 பில்லியன் டொலர்களை நிதியளிப்புச் செய்துள்ள அமெரிக்கா, இன்று மிலேனியம் சலஞ்ச் கோப்பரேசன் (millennium challenge corporation) என்னும் பெயரில் 480 மில்லியன் டொலர்களையும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கென 39மில் லியன் டொலர்களையும் கொடுத்து உதவுகிறது. அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலர் மார்க் எஸ்பர் அவர்கள் இந்தோ பசுபிக் கடல் வழிப் பாதுகாப்பு அனைத்து நாடுகளுக்கும் முக்கியமானது என வலியுறுத்தி, இலங்கையையும் அதில் இணைத்து சிறீலங்காக் கடற்படைக்கு வலுப்பயிற்சிகளை அளிக்கவும் இணங்கியுள்ளார். இந்தச் சூழலில் இந்தியா, யப்பான், அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் நாற்கூட்டு இணைப்பாக இந்துக் கடல் மேலான தனது மேலாண்மையை உறுதிப்படுத்த அமெரிக்கா எடுக்கும் இந்தோ பசுபிக் பாதுகாப்பு முயற்சிகளிலும், சிறீலங்கா கடற்படையினை இணைப்பதற்கான முயற்சிகளும் அமெரிக்காவால் தொடரும் என்பது உறுதியாகிறது.

இந்தியா 1987இல் இந்திய-இலங்கை உடன்படிக்கை வழியாக ஈழத்தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு மிகக்குறைந்த தீர்வாக ஒற்றையாட்சியில் மட்டுப்படுத்தப்பட்ட நில மற்றும் நிர்வாகப் பொலிஸ் அதிகாரங்களை உடைய வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணசபை என்ற தீர்வை சிறீலங்காவின் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தமாக அமைக்க வைத்து அந்தப் பின்னணியில் எந்தப் பாதுகாப்புப் பிரச்சினையை சிறீலங்கா சந்தித்தாலும், தன்னிடமே முதலில் உதவி கோர வேண்டும் என்ற கட்டுப்படுத்தல் மூலம் தனக்கான பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் இந்துமா கடல் மேலான மேலாண்மையையும் நெறிப்படுத்திக் கொண்டது. ஆனால் இதுவரை நில மற்றும் பொலிஸ் அதிகாரப்பகிர்வு என்ற பேச்சுக்கே மதிப்பளிக்காமல் தனது நீதிமன்றத் தீர்ப்பு மூலம் வடக்கு-கிழக்கு மாகாணசபையையும் பிரித்துக் கொண்ட சிறீலங்கா, இந்திய-இலங்கை உடன்படிக்கையை எவ்வித அச்சமுமின்றி மீறியது. இந்தியா தனது நெறிப் படுத்தல்களை சிறீலங்கா ஏற்காத நிலையிலும், இந்திய இலங்கை நாடுகளுக்கு இடையிலான இவ்வாண்டு மெய்நிகர் உச்சி மாநாட்டில் தனது பிரதமர் நரேந்திர மோடி மூலம் புதிய அரசியலமைப்பு 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முன்னெடுக்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்தச் செய்தது. ஆயினும் அந்த உச்சி மாநாட்டில் எதைப் பேசினேன் என்பதையே தான் மறந்து விட்டதாகச் சிறீலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்சா அறிவித்துள்ளார். இது இந்தியாவை எதிர்க்கும், பகைக்கும் சிறீலங்காவின் உண்மை நிலையை மீளவும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்தப் புதிய சூழலில், தங்களின் வரலாற்றுத் தாயகத்தில் தங்களின் தேசியத் தன்மையுடன் தங்களுக்கு இயல்பாகவே உள்ள இறைமையின் அடிப்படையிலான தன்னாட்சி உரிமையுடன் வாழ்ந்து வரும் ஈழத்தமிழ் மக்கள் எவ்வாறு அனைத்து லகப் பிரச்சினையாக உள்ள தங்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பதே இன்று ள்ள கேள்வி.

இந்துமா கடலை மையப்படுத்திய இன்றைய உலக வல்லாண்மை மற்றும் பிராந்திய மேலாண்மைப் பிரச்சினைகளில் ஈழத்தமிழர்கள் தம்முடைய இந்துமா

தொடர்ச்சி 20 ஆம் பக்கம்

# ஐ.நாவில் ஈழத்தமிழர்களின் பங்களிப்பு

2009 ஆம் ஆண்டுக்கு பிறகு இலங்கை அரசு, தமிழரின் அரசியல் கட்சிகளை தங்களது பாதுகாப்புக் கவசமாக உலகிற்கு காட்டி, தமிழ் மக்களின் உரிமைகளையும், உயிர்களையும் பறித்தது. இப்போது நடைபெற்ற ஆட்சி மாற்றத்தில் குடும்ப ஆட்சி, இராணுவ ஆட்சி, வகுப்புவாத ஆட்சி, சர்வாதிகார ஆட்சி, சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சி, பிரிவினைவாத ஆட்சி, பாசிச ஆட்சி போன்ற ஆட்சிகள் பிறந்து வந்துள்ளன. பசில் இராசபக்சே கொடுத்த பணத்தால், ஈழத்தில் வடக்கு கிழக்கில் ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகள் பிரிந்து நின்று; நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்து பலவீனமாகின. இதனால் தமிழ் மக்கள் பேச்சுரிமையையும், நகர்வுரிமையையும் இழந்து உரிமையற்றவர்களாக தள்ளப்படுகின்றனர்.

தமிழர்கள் தங்களது தொல்லியல் அடையாளங்களை இழந்து நாடற்றவர்களாக மாற்றப்படுகின்றனர். தொல்லியல் தமிழின அடையாளங்கள் பறிக்கப்பட்டு வந்தேறிகளாக தமிழர்கள் உருவாக்கப்படுகின்றனர். வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழர்கள் திறந்த வெளி சிறைகளில் அடைக்கப்படுவதுபோல, இராணுவம், காவல்துறையினர், நீதிமன்றம் ஆகியவற்றின் பிடியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதனால் தேசியத் தலைவரின் உரத்த சிந்தனையின்படி ஈழத் தமிழர்களின் விடுதலை, புலம்பெயர்ந்த தமிழர்களது கரங்களில் இருக்கிறது என்பதை நம்புகிறோம். உள் நாட்டில் தமிழர்களை பிளவுபடுத்தி, அடக்கியாளும் சிங்கள பௌத்த பேரினவாத அரசு, புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களை பிரித்து வைக்க, கொலைசெய்ய, மிரட்டி வைக்க, குற்றப்படுத்த, பலவீனமாக்க அனைத்து முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

உலக நாடுகளின் ஆதரவோடு தமிழர்கள் தங்களது தமிழீழத்தையும், விடுதலையையும், உரிமையையும் பெறவேண்டிய நிலையில் வாழ்கின்றனர். உலக நாடுகளின் ஆதரவைப்பெற, உலக நாடுகளை ஒருங்கிணைக்கும் அமைப்பாக ஐக்கிய நாடுகளின் அவை இருக்கிறது. எனவே அந்த அவையில் ஈழத்தமிழர்கள் பல அமைப்புகளாக பணியாற்றுகின்றனர். உதாரணமாக: பசுமைத் தாயகம், btf. Ctc. Ustpac போன்ற தமிழ் அமைப்புகள் ஐ.நாவிற்குள் வந்து செல்கின்றன. ஆனால் தமிழர் இயக்கத்தின் வழியாக நாடுகடந்த தமிழீழ அரசு போன்ற 26 தமிழ் அமைப்புகளும், பாதிக்கப்பட்டவர்களும் மனித உரிமை போராளிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் பல்வேறு அமைப்பு சார்ந்த மக்களும் ஐ.நாவின் மனித உரிமை ஆணையத்தின் பொது அமர்வுகளில் வாய்மொழி உரைகளை நிகழ்த்துகின்றனர். அதற்கு வேண்டிய வாய்ப்புகளை தமிழர் இயக்கம் வழங்குகிறது.

இதனால் தமிழீழ உரிமை உயிரோடு ஐ.நாவில் வாழ்கின்றது. தமிழின அழிப்பு என்று ஐ.நாவில் உரக்கச் சொல்லி ஈழத்தமிழரின் நயன்மைக்காக (நீதிக்காக) போராடிக் கொண்டிருக்கின்றது. ஐ.நாவிற்குள் வர இயலாத தமிழ் அமைப்புகள் ஐ.நா விற்கு முன் உள்ள முருகதாசு திடலில் நிழல்பட கண்காட்சி, கண்டன கூட்டங்கள் நினைவு நாள் கொண்டாட்டங்கள் ஆகியவற்றை நடத்துகின்றன. இந்த ஐ.நாவின் பொது அமர்வுகள், பக்க அமர்வுகள், நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்தல், சிறப்பு அறிக்கையாளர்களை சந்தித்தல், பல நாட்டுத் தலைவர்களை சந்தித்தல் ஆகியவை நடைபெறுகின்றன. இந்த நிகழ்வுகளின் வழியாக வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழீழம்,

தமிழர் களின் தாயகம் என்றும், ஈழத்தமிழர்கள் தன்னாட்சி கொண்ட தேசிய இனம் என்றும், ஈழத்தில் சிங்களபௌத்த பேரினவாதஅரசால் இனப்படுகொலை

**முனைவர் ஆ. குழந்தை, சென்னை**

நடந்ததென்றும், அதற்கு பன்னாட்டு விசாரணை நடத்த வேண்டுமென்றும், பன்னாட்டு குற்ற வியல் நடுவர் மன்றத்தில் இனவழிப்பு செய்த இலங்கை அரசை நிறுத்த வேண்டுமென்றும், சிறப்பு அறிக்கை யாளரை இலங்கைக்கு அனுப்பி, நடந்த உண்மைகளை உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்றும், தமிழர்களின் தன்னாட்சி உரிமையை நிலைநிறுத்த வேண்டுமென்றும் தமிழர் இயக்கமும் அதன் இணை இயக்கங்களும் ஐ.நாவில் போராடிக் கொண்டிருக்கின்றன.

### முன்னிருக்கும் இயக்கப் பணிகள்

போராட்டம் ஒன்றுதான்; அதன் வடிவங்கள் பலவாகும் என்று தேசியத் தலைவர் கூறுவது போல, இனவிடுதலை என்னும் இலக்கு நோக்கி பல தளங்களில் பலவகையான போராட்டங்கள் நடைபெற வேண்டும். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் இலக்கு ஒருபோதும் மாறக்கூடாது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த ஓர் இலக்கை அடைய வேண்டுமென்றால், களச் செயல்பாடுகளும் அறிவார்ந்த செயல்பாடுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய முறையில் செயல்பட வேண்டும். தமிழீழ நாட்டையும், உரிமையையும், நன்மையையும் பெற வேண்டுமென் றால், கீழ்கண்ட செயற்பாடுகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

தமிழீழ நாட்டின் தன்னாட்சிக்காகவும், உரிமைக்காகவும் போராடி, தங்களது இன்னுயிரை ஈந்த அனைத்து ஈகியரையும், சிங்கள பௌத்த பேரினவாத அரசு செய்த இனப்படுகொலையையும், ஏமாற்றியதையும், துரோகத்தையும் முன்னிறுத்தி, தமிழீழம் என்ற ஒற்றை இலக்குடன் செயல்பட வேண்டும்.

*1. ஈழத்தமிழர்களது வரலாற்றில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளை நினைவுபடுத்தி கொண்டாட வேண்டும்.*

*2. அடுத்த தலைமுறையினர்களாகிய குழந்தைகளுக்கு தமிழ்மொழி, ஈழத்தமிழ் வரலாறு, விடுதலை வரலாறு, கலை, பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றை சொல்லிக் கொடுக்க வேண்டும்.*

*3. ஈழத்தமிழர்கள் பல்வேறு அமைப்புகளாக பிரிந்து சண்டைபிடிப்பதை நிறுத்த வேண்டும். தங்களது வீரத்தையும் அறிவையும் தமிழர்கள்முன் நிலை நிறுத்துவதைவிட சிங்கள பேரினவாதத்திற்குமுன் நிலைநிறுத்த வேண்டும். இந்தச் சண்டை நமது எதிரிகளிடம் நம்மவரை காட்டிக் கொடுப்பதாகவும், நன்மை நோக்கிய பயணத்தை தடுத்து நிறுத்துவதாகவும் இருப்பதை நாம் மறுக்கவும்-மறக்கவும் முடியாது.*

*4. ஈழத்தமிழர்களிடையே பிரிவினைவாதம் என்ற பலவீனம் இலங்கை அரசுக்கு பலமாக மாறுகின்றது. இந்த பிரிவினையைப் பயன்படுத்தி சிங்கள பௌத்த பேரினவாத அரசு தமிழீழத்தில் உள்ள தமிழர்களையும், புலம்பெயர்ந்த தமிழர்களையும் பிரித்து, பலவீனப்படுத்துகின்றது. அதை எதிர்கொள்வதற்கான மாற்று வழிமுறைகளைக் கையாண்டு முறியடிக்க வேண்டும்.*

*5. தமிழர்கள் வாழும் நாடுகளில் ஒன்றிணைந்து இன அழிப்புக்கான ஆதாரங்களையும், தரவுகளையும் ஆவணப்படுத்தி அந்தந்த நாட்டு ஆட்சியாளர்களிடம் தொடர்ந்து கொடுத்து, தமிழர்களுக்கு நடந்தது இனஅழிப்பு என்று இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை எடுக்கவைக்க வேண்டும். ஈழத் தமிழர்கள் சார்பாக எட்டு நபர்கள் கொண்ட குழுவை அமைத்து 'அரசு சந்திப்பு' (State Visit) செய்யவைக்க வேண்டும். இந்தக் குழு, நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் சந்திக்க வேண்டும்.*

*6. இன அழிப்பினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு பொருளாதார உதவி செய்ய ஐரோப்பிய ஒன்றியதின் நாடாளுமன்றத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்த, ஒரு திட்டக் குழுவை அமைத்து பெல்சியத்திலுள்ள புருசெல்சில் பணிசெய்ய அனுப்ப வேண்டும்.*

*7. தமிழ்ப் பள்ளிக் கூடங்களை நடத்துவது போல, தமிழ்க் கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் நடத்த வேண்டும். அவ்வாறு நடத்த முடியாத போது, தமிழர்கள் வாழும் நாடுகளில் உள்ள அரசு பல்கலைக்கழகங்களில் தமிழாய்வுத் துறைகளை உருவாக்க வேண்டும்.*

*8. தமிழர்களுக்கு புரியவைப்பதைபோல, சிங்களவர்களுக்கும் புரியவைக்க சிங்கள பகுத்தறிவாளர்களை அறிவுடனும் ஆதாரத்துடனும் நாடவேண்டும்.*

*9. தமிழ்ச் சட்டத்தரணிகள் பன்னாட்டு நடுவர் மன்றத்தில் தமிழின அழிப்பை ஆவணப்படுத்தி வழக்காக 10, 000 வழக்குகளைப் பதிவுசெய்ய வேண்டும். அதற்கு போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாக்குமூலங்களை பதிவு செய்து, பன்னாட்டு குற்றவியல் நடுவர் மன்றத்தின் சட்டத்தரணிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.*

*10. ஐ.நாவில் உள்ள பல்வேறு அமைப்புகளில் தமிழர்கள் ஊடுருவி, தங்களுக்கு நடந்தது இனஅழிப்பு என்று பதிவு செய்ய வேண்டும்.*

*11. வளர்ச்சி என்ற பெயரில் பல்வேறு நாடுகள் பேரினவாத இலங்கைக்கு பணம் கொடுப்பதையும், அதை வாங்கி தங்களது வகுப்புவாத அரசியலுக்கும் தமிழின அழிப்புக்கும் பயன்படுத்தப்படுவதை தோலுரித்து காட்ட வேண்டும்.*

*12. உலகமயமாக்கலின் பின்புலத்தில் மண் விடுதலைக்காக போராடும் நாம் கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்ற நம்மை பலப்படுத்தும் காரணிகளை அந்த விடுதலையை நோக்கி வளர்த்து பலப்படுத்த வேண்டும்.*

### ஐ. நாவில் நமது பணி

ஐ.நாவில் கதைத்து உரிமை பெற முடியாதென சிலர் தவறான கருத்தை பரப்பி வருகின்றனர். இது நமது

தொடர்ச்சி 20 ஆம் பக்கம்

# தமிழர்களுக்கு வரலாறு உணர்த்திய – உணர்த்திக் கொண்டிருக்கின்ற பாடம்



முனைவர் கு.அரசேந்திரன்

தமிழ், நம் தாய்மொழி. இது, பன்னிரெண்டுகோடித் தமிழ் மக்களால், பேசப்படுகின்ற பழமையான மொழி. இம்மொழிக்குத் தாய் நிலங்களாகத் தமிழ் நாடும், தமிழீழமும் உள்ளன. மொழி ஆராய்ச்சியின் அடிப்படையில், இத்தமிழ் மொழியை உலகம் செம் மொழிகளில் ஒன்றாக ஏற்றுக் கொண்டுள்ளது.

இலத்தீனம், கிரேக்கம், எபிரேயம், சீனம், சமற்கிருதம் ஆகியன குறிப்பிடத்தகுந்த செம்மொழிகள். தமிழை, இங்குக் குறிப்பிட்ட செம்மொழிகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தால், தமிழ் இச் செம்மொழிகளுக்கும் மூத்த மொழியாக இருக்கின்ற உண்மை தெரியவரும். அப்படியானால், தமிழ் செம்மொழிகளில் ஒன்று அன்று. அது, செம்மொழிகளுக்கும் மூலமான மொழி. ஆதலால், அதனை உயர்தனிச் செம்மொழி என்று உரைப்பதே பொருத்தம் என்று மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் ஆய்ந்து நூல் எழுதியுள்ளார்.

தமிழ் மக்களுக்குத் தமிழ் பற்றிய இத் தகுதி பெருமைக்குரியதுதான். ஆனால், உலகம் தமிழிற்கு இந்தத் தகுதியை கொடுத்திருக்கின்றதா என்பதும், தமிழன் இந்தத் தகுதியால் பெருமை பெற்றானா என்பதும், நம் முன் நிற்கும் கேள்விகள்.

தமிழின் சிறப்பு, தமிழ் அறிஞர்கள் இடையில் மட்டும் பேசப்படுவதாக உள்ளது. தமிழர்கள், இந்தத் தமிழின் தகுதியை அறிவதும் இல்லை; பேசுவதும் இல்லை. உலகமோ, பெயருக்குத் தமிழைக் குறிப்பிடுகின்றது. ஆனால், உலக அரங்கில் உலகம் தமிழைச் சிறப்பிப்பதில்லை. கண்முன் நிலை கொண்டுள்ள இந்த இயல்பான போக்கினைத் தமிழர்களாகிய நாம் மாற்ற வேண்டும்; தமிழ் மக்களுடைய கடமையாக இது விரிய வேண்டும். செல்வாக்குள்ள மொழிகள் பலவற்றிற்கும் நாடுகள் உள்ளன. அதன் கார ணமாக அந்தந்த மொழிகள் உலகில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. தமிழ் மக்களும் இச் செல்வாக்குப் பெற்ற மொழிகளின் பின்னால், ஓடுவதைப் பெருமையாகக் கருதுகின்றனர். தமிழ், மிகப்பெரிய ஆற்றல் வாய்ந்த மூலமொழியாக இருந்தாலும், அது தமிழ்நாட்டிலும், தமிழீழத்திலும்கூட உயிர்ப்புடன், மதிப்புடன் விளங்கவில்லை.

தமிழ்நாடு இந்தியாவிற்குள்ளும், தமிழீழம் சிங்களத்திற்குள்ளும் ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னான வரலாற்றுச் சூழலில் சிக்கிக் கொண்டு விட்டன. வரலாறில் லாத இந்தி மொழியும், வரலாறு இல்லாத சிங்கள மொழியும் தமிழர்களை அடக்கி ஒடுக்கித் தமிழ் மொழியைச் சிதைப்பதை அரசக்கடமையாகச் செய்து வருகின்றன. உலக அரசுகளும் இந்த இரு அரசுகளுக்கும் கண்ணை மூடிக் கொண்டு துணை போகின்றன. ஆட்சி அதி காரங்களின் முன், இரு நிலத் தமிழர்களும் மீள முடியாமல், தங்கள் மொழியை மீட்க முடியாமல் சொல் லொணாத் துன்பத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

இந்தி, சமற்கிருத திணிப்புகளை எதிர்த்துத் தமிழ்நாட்டுத் தமிழ் மக்களும், சிங்களத் திணிப்பை

எதிர்த்துத் தமிழீழத் தமிழ் மக்களும் கடந்த அறுபது, எழுபது ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். இந்தி கற்றும், சிங்களம் கற்றும் நாம் வாழ்ந்தால் என்ன என்று நினைக்கின்ற தமிழ் மக்களும் இவ் இரு நிலத்திலும் உள்ளனர். இத்தகைய போக்கு பெருகினால், எதிர்காலத் தில் இவ் இரு நிலத்திலும் தமிழ் இல்லாமல் போய் விடும். எனவே வயிற்றுப்பாட்டுக்காகத் தமிழர்கள் இந்தி, சிங்களம், ஆங்கிலம் மற்ற மற்ற மொழிகள் எனப் பலவற்றைக் கற்றாலும், தமிழ் தான் தங்களின் அடையாளம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்; தமிழர்கள் தமிழை வளர்க்க வேண்டும். அவ்வாறு தமிழை வளர்க்கத் தவறி னால், தமிழ்நாடும், தமிழீழமும் எதிர்காலத்தில் தமிழர் நிலங்களாக இல்லாமலே போய் விடும். இவ்விரு நிலத்து மக்களும் எதிர்காலத்தில் இவ் விரு நிலத்திலும் வேறு வேறு இனங்களுக்கு அடிமை யாகி வாழ வழியின்றிப் போய்விடுவர்.

உலக வரலாற்றில் விழித்துக் கொண்ட இனங் களே மீண்டு எழுந்து நிலை பெற்றுள்ளன. அந்த வகை யில், தமிழ் மக்கள் யாவரும் தங்கள் மொழியின் மாட்சி மையை வரலாற்று அடிப்படையில் ஊன்றிக் கற்று, அம் மொழிவழி தங்கள் வாழ்வை மீட்டெடுத்துக் கொள்ள வேண்டும். உலக மொழிகள் பலவற்றை ஈன்ற நம் தாய் மொழியாகிய தமிழைச் செம்மொழிகள் பேசும் மக்கள் மட்டும் அல்லாமல் உலகின் பிறபிற மொழிகளைப் பேசுகின்ற மக்களும் கற்க விரும்புகின்ற நிலையை வரலாற்றில் உருவாக்க வேண்டும். இது, பிற மொழிக ளுக்கோ பிற இனங்களுக்கோ எதிரான முயற்சி அன்று. உலகப் பெரும் சொத்தாகிய தமிழினைக் கற்றுக் கொள்ள வேண்டிய ஓர் அறிவார்ந்த தேடல் உலகத் திற்கு ஏற்படும் வண்ணம் தமிழர்களின் பணிகள் அமை தல் வேண்டும். அப்பணிகளில் முதன்மையான பணி, இவ்விரு நிலங்களையும் வரலாற்றில் சிக்கியுள்ள சிற்றி னங்களின் கையிலிருந்து மீட்பதுதான். தன்னுரிமை பெற்ற நிலங்களாக இந் நிலங்களை மீட்டெடுப்பதைக் கனவிலும் மறவாதிருக்க வேண்டும். அந்தப் பணியின் பின்னர்தான் தமிழிற்கும், தமிழர்க்கும் நிலையான வாழ்வு ஏற்படும். இதனை உலகெங்கும் பரந்து வாழும் பன்னிரெண்டு கோடித் தமிழ் மக்களும் உணர வேண்டும்.

உலக அரசுகள் இந்தியாவுடனும், இலங்கை யுடனும் தொடர்பு கொள்கின்ற போது, இந்தியை யும், சிங்களத்தையும் மனதில் கொண்டே செயற்படுகின்றன. இந்தியாவில் வாழும் பத்துக் கோடித் தமிழர்களையும், ஈழத்தின் ஏறத்தாழ இருபத்தி ஐந்து இலக்கம் தமிழர் களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களின் மொழி, நாகரிக, பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு, வாழ்வி ற்கு எந்தச் சிறு உதவியையும் செய்வதில்லை. உலக அரசுகளுக்கு அரசியல் ஆதாய, வணிக நலன்கள்தான் முதன்மையானது; அவர்களுக்கு ஞாயம், அறம், தருமம் என்று எதுவும் இல்லை என்று 27 ஆண்டுகளுக்கு முன் நம் தமிழீழத் தேசியத் தலைவர் அறிந்து உரைத்தார். எனவே அதிகாரம் யார்கையில் இருக்கி ன்றதோ அவரின் பக்கம்தான் உலக அரசுகளின் செயலும் அமையும்.

புலம்பெயர் தேசத்தில், தமிழீழப் போராட்டத் தின் காரணமாகப் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஏறத் தாழ பதினைந்து இலக்கத்திற்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றனர். சிங்கள மக்கள் இவ்வளவான தொகையில் புலம்பெயர் தேசங்களில் வாழவில்லை. ஆனாலும், தமிழ் மக்கள் வாழ்கின்ற புலம்பெயர் தேச த்தில் உள்ள அரசுகளும் இந்திக்கும், சிங்களத்திற்கும் கொடுக்கின்ற மதிப்பினைத் தமிழிற்குக் கொடுப்ப தில்லை. நம் கண்முன் தெரிகின்ற இந்த உண்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழர்களுக்கு அரசுகள் கிடைக்கின்றவரை உலகம் தமிழ் மக்களை, தமிழை ஏறெடத்துப் பார்க்காது என்பதை ஒவ்வொரு நொடியும் தமிழ் மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆங்கிலேயர் வருமுன் தமிழீழத் தமிழ் மக்க ளும், தமிழ்நாட்டுத் தமிழ் மக்களும் தன்னுரிமை பெற்ற வர்களாகவே தங்கள் தாய்நிலத்தில் வாழ்ந்து வந்தனர். ஆங்கிலேயர் இந்நிலங்களைக் கைவிட்டுச் சென்ற பிறகு இவ்விரு நிலத்துத் தமிழ் மக்களின் குடுமிகள் இந்தியர், சிங்களர் கைகளில் சிக்கிக் கொண்டன. இந்தியாவும், இலங்கையும் பெற்ற விடுதலை என்பது, தமிழ் மக்களுக் கான விடுதலை அன்று. இந்தியர், சிங்களர் விடுதலை போலவே தமிழர் விடுதலையும் வரலாற்றில் நிகழ்ந்தே ஆகவேண்டும்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் சொந்தத் தாயக த்தில் வாழ்ந்த தமிழீழ மக்கள், சிங்கள அரசினால் மட்டும் அல்லாமல், இந்திய அரசினாலும், உலக அரசுக ளாலும் அழித்தொழிக்கப்பட்டனர். உலகில் 12கோடித் தமிழ் மக்கள் வாழ்ந்தாலும், ஒன்றேகால் கோடிச் சிங்க ளர்களுக்கு உலகம் துணை செய்தது; செய்து வருகின்றது. இந்த வரலாற்றுக் கொடுமையைக் கண்முன் கண்ட பிறகாவது தமிழீழ மக்களும், தமிழ் நாட்டு மக்களும் நாம் சிங்கள அரசின் கீழும், இந்திய அரசின் கீழும் தொடர்ந்து வாழலாம் என்று நினைப்பது மிகப் பெரிய அறியாமையாகும்; அடிமை மனப்பான்மையாகும். தமிழ் வாழவும், தமிழ் இனம் வாழவும் தமிழர் கள் அனைவரும் இன விடுதலையையும், நாட்டு விடுதலை யையும் இரு கண்களாகக் கொள்ள வேண்டும்; இரு தமிழ்ப் பேரரசுகளை மீட்டெடுக்க வேண்டும். இது, வரலாறு நமக்கு உணர்த்திய - உணர்த்திக் கொண்டிரு க்கின்ற பாடம்.

• • •

# ஈழத்தமிழினத்தின் நீதித் தேடலில்

## இளையோரும் வரைகலை வடிவமைப்பும்

பாலி பாலவதனன்

ஆக்கபூர்வமான, புத்தம்புதிய முறைகளைப் பயன் படுத்தி மாற்றங்களைத் தோற்றுவிக்கும் செயற்பாடு களில் கவனஞ் செலுத்துகின்ற, எண்ணிம நிறுவன மான ரெம்பிளோவின் (TEMPLO) இணை தாபகராக இலண்டனைச் சேர்ந்த பாலி பாலவதனன் விளங்கு கிறார்.

காத்திரமான அரசியல் மாற்றத்தை தோற்று விப்பதற்கு, வரைகலை வடிவமை ப்பை (design) புதிய பரிமாணங்களுக்குக் கொண்டு செல்ல முடியுமா எனப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு 'ரெம்பிளோ' (TEMPLO) என்ற இந்த நிறுவனம் 2013 இல் தாபிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் அவை, பசுமை அமைதி (Green Peace), புலம்பெயர்ந்தோர்க்கான உதவி நிறுவனம் (Migrant Help), பன்னாட்டு மன்னி ப்புச்சபை (Amnesty International), காலநிலை மாற்றத்துக்கான குழு (Climate Change Committee) போன்ற உலகப் புகழ்பெற்ற அமைப்புகளுடன் இணைந்து இந்த நிறுவனம் பணி யாற்றி வருகிறது.

இலக்கின் 100ஆவது இதழுக்காக பாலி பாலவதனன் பிரத்தியேகமாக அளித்த ஆங்கில நேர் காணலின் மொழியாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி:**

**சிறீலங்காவில் வாழும் தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தில் வரை கலை வடிவமை ப்பில் (graphic design) உங்களுக்கு இருக்கின்ற நிபுணத்துவத்தை நீங்கள் பயன்படுத்தி வந்திருக் கிறீர்கள். இதே நோக்கத்துக்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற பன்னாட்டு அமைப்புகள் சிலவற்றுடனும் நீங்கள் இணைந்து பணியாற்றி வருகிறீர்கள். இந்த அனுபவத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**பதில் :**

ஏழு வருடங்களாக இந்தத் தளத்தில் நாங்கள் பணியாற் றிக்கொண்டு வருகிறோம். அத்துடன் இந்தத் தளத்தில் பணிபுரியும் அமைப்புகளிற் பல, குறிப்பிட்ட நிலப்பி ரதேசங்களுக்காக மட்டும் பணிபுரிபவை என்பதுடன், பல விடயங்களில் அவை சமரசம் செய்து விடுகின்றன. ஆகவே எமது நீதிக்கான தேடலில் நாங்கள் எந்த அமைப்புடன் பணிபுரிய வேண்டும் என்பதை மிகக் கவனமாக நாங்கள் தெரிவு செய்கிறோம்.

இந்தத் தளத்தில், இதுவரை நாங்கள் இணைந்து பணி யாற்றிய அமைப்புகளைப் பார்க்கும் போது, யஸ்மின் சூக்காவின் (Yasmin Sooka) தலைமையில் இயங்குகின்ற உண்மைக்கும் நீதிக்குமான பன்னாட்டுத் திட்டம் (International Project for Truth and Justice – ITJP) என்ற அமைப்புடனான எமது பயணம் குறிப்பிட்டுச் சொல் லப்பட வேண்டியது. இந்த அமைப்பில் ஒரு திறந்த மனநிலை காணப்படும் அதே வேளையில் நாம் கதைத் துப்பேசி விட்டுக் கொடுத்துச் செயற்படக்கூடிய ஒரு இறுக்கமற்ற இளகியநிலை காணப்படுகிறது. எமது தனித்துவம் மிக்க திறன்களைப் பொறுத்தவரையில், எமக்கிடையே ஒருவரையொருவர் மதிக்கின்ற பண்பு இங்கே அதிகமாகக் காணப்படுகிறது என்பதோடு மட்டுமன்றி, எமக்கிடையேயான உறவுகள் நீண்ட கால மாகத் தொடர்வதால் ஒவ்வொருவரும் செயற்படும் முறைகளையும் அவரவர் ஆற்றல்களையும் ஏற்று, மதித்து நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நாங்கள் மேற்கொண்ட செயற்பாடுகளில் மிக அதிக தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்வு என்றால், அது 'சித்திரவதையை நிறுத்து' (Stop Torture campaign) என்ற பரப்புரையாகும். இந்தப் பரப்புரையை ஆரம்பித்து வைக்க நாங்கள் உதவியாக இருந்தோம். இந்தப் பரப்புரையில் நாம் முன்னெடுத்த வழமைக்கு மாறான அணுகு முறை, ஐக்கிய நாடுகள் அவையையும் கடந்து, விசாரணைகளை மேற்கொண்டு, உண்மைகளைக் கண்டறிவதற்கு மேற்குறிப்பிட்ட (ITJP) அமைப்பைத் தூண்டியது. இவற்றுடன் பிரபல்யமான ஒருவரது ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வு, 'Wired magazine' என்ற பெயருடன் இணையத்தளம் மற்றும் அச்சு ஊடகமாக அமெரிக்காவிலிருந்து வெளியிடப்படும் சஞ்சிகையில் ஒரு ஆக்கம், மற்றும் மாயா (M.I.A.) என்ற பிரபல பாடகியால் வெளியிடப்பட்ட ஆவணப் படத்தைத் திரையரங்குகளில் திரையிடல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அதிலிருந்து இன்னும் பல செயற்பாடுகளை நாம் முன்னெடுத்திருக்கிறோம். அவற்றுள் சித்திரவதை முகாம்களைச் சித்தரித்தல், காணாமல் ஆக்கப்பட்ட வர்களை நினைவுகூர எவரும் பதிவேற்றம் செய்யக் கூடிய ஒரு இணையத்தளம், 'சோஆஸ்' (SOAS) என்ற இலண்டன் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட 'பொது மக்கள் மீது தொடுக்கப்பட்ட போர்' என்ற தலைப்பில் கண்காட்சி, இலங்கை இராணுவம் மேற்கொள்ளும் சித்திரவ தைகளை அடையாளங்கள் மூலம் சித்தரித்தல், விசாரணையாளர்களுக்கு உதவும் முகமாக கூகிள் செயலி யின் (Google Earth) உதவியோடு வரையப்பட்ட திரிகோணமலை சித்திரவதை முகாம் பற்றிய வரை படம், சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களின் உதவியுடன் சித்தரிக்கப்பட்ட வவுனியா யோசெப் முகாமிலுள்ள சித்திரவதைக்கூடங்கள் தொடர்பான வரைபடம், சிறீலங்காக் கடற்படையின் தற்போதைய கட்டமைப்பு, நாடாளுமன்றத்தின் கட்டுபாட்டுக்கு உட்படாத கோட்டாபயவின் செயலணிகள் என்பவை உள்ளடங்கும்.




கடந்த காலங்களில் நாங்கள் பணியாற்றிய அல்லது இணைந்து பணியாற்றிய பெரிய அமைப்புகள் உண்மை யில் எப்படி இயங்குகின்றன என்று நாம் கற்றுக் கொண்ட விடயங்கள், இந்த இணைந்த செயற்பாடு வெற்றிகரமாக அமைந்ததற்கான காரணமாக இருக்க லாம். உதாரணமாக, Global Witness, இலண்டன் பொருளி யல் கல்லூரி, ஐக்கிய நாடுகள் போன்ற புகழ்பூத்த அமைப்புகளுடன் 'ரெம்பிளோ' (TEMPLO) பணியாற்றி யிருக்கிறது.

சிறீலங்காவில் வாழுகின்ற தமிழ் மக்களுக் கான நீதிக்காகப் போராடுகின்ற புலம்பெயர் அமைப்பு களைப் பொறுத்தவரையில், எனது அவதானிப்பு என்னவென்றால், இவை மிகவும் மந்தகதியிலேயே செயற் படுகின்றன. அத்துடன் இப்படிப்பட்ட முன்னெடுப்புகளுக்கு அதிக நிதியைச் செலவிட இந்த அமைப்புகள் தயாராக இருப்பதில்லை என்பதுடன், புத்தாக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் முன் வருவதில்லை. இது மிகவும் ஓர் கசப்பான உண்மை யாகும்.

**கேள்வி:**

**ஈழத்தமிழ் மக்களின் நீதிக்கான போரா ட்டத்தை புலம்பெயர்ந்து வாழும் தமிழ் இளை யோரே எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற கருத்தைப் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் ஏகமனதாக ஏற்றுக் கொள் கின்றனர். இந்தக் கருத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**பதில் :**

கொள்கையளவில் இது உண்மைதான். புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் இளையோர் இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். 'மனித உரிமைகள்' என்ற வட்டத்துக்கு வெளியே வந்து, ஏனை யோருடன் இணைந்து பணிபுரிய பெரும்பாலான இளையோர் இன்னும் தயாராக இல்லை என்பதே நடைமுறையில் நாங்கள் அவதானித்த விடயமாகும். இது பண்பாடு மற்றும் திறன்கள் மட்டில் இருக்கின்ற இடை வெளியோடு தொடர்புபட்டது. பாரம்பரியமாக மேற்கொள்ளப்படும் தொழில்களான சட்டத்துறை, கல்வித்துறை, ஊடகத்துறை போன்றவற்றுடன் ஒப்பி டும் போது, இத்துறைகள் 'தாழ்ந்தவை' என்ற மனப் பாங்கும் இதற்கு இன்னொரு காரணமாகும். ஒரு மாற்றத்தைத் தோற்றுவித்து, உலகம் எம்மை நிமிர்ந்து பார்க்கும் நிலையை ஏற்படுத்துவதற்கு, இருக்கின்ற ஆற்றல்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, எமது போராட் டத்துக்கு வெளியில் நிற்பவர்களும் உள்ளேவர

தொடர்ச்சி 21ஆம் பக்கம்

# சிறீலங்கா அரசு பன்னாட்டு சமூகத்தின் கண்காணிப்பிலிருந்து மறைந்து போகாது தடுப்பது எப்படி?

**– யஸ்மின் சூக்காவுடன் ஒரு நேர்காணல் –**

தென்னாபிரிக்க நாட்டைச் சேர்ந்த யஸ்மின் சூக்கா (Yasmin Sooka), கடந்த பல ஆண்டுகளாக சிறீல்காவில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக உரத்துக்குரல் கொடுத்து வரும் ஓர் மனித உரிமை ஆர்வலர் ஆவார். அவரது தலைமையில் இயங்குகின்ற உண்மைக்கும் நீதிக்குமான பன்னாட்டுத் திட்டம் (International Project for Truth and Justic – ITJP) என்ற அமைப்பு, சிறீலங்காவின் இறுதிப்போரின் போதும், அதன் பின்னரும் அங்கே மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தி பன்னாட்டுச் சமூகத்தில், தமிழ் மக்கள் சார்பாகக் குரலெழுப்பி வருகிறது. கடந்த ஆண்டு (2019) மே மாதம் சிறீலங்காவில் போர் முடிந்து 10 வருடங்கள் கடந்த நிலையில், இலக்கு அவருடன் ஒரு நேர்காணலை மேற்கொண்டிருந்தது. அந்த நேர் காணலின் ஒரு பகுதியை கீழே தருகிறோம்:

**கேள்வி:**

**சிறீலங்காவில் உள்நாட்டுப் போர் நடை பெற்று, 10 ஆண்டுகள் கடந்துவிட்ட இத் தருணத்தில், அந்த நாட்டில் நடைபெற்ற போரிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளும் பயணத்தில், உலகம் பூராவும் இருக்கின்ற பல்வேறு தமிழ் அமைப்புகள் இது வரை மேற்கொண்ட முயற்சிகளை நீங்கள் எவ்வாறு ஆய்வு செய்கிறீர் கள்?**

**பதில் :**

உண்மையில் இவ்விடயம் தொடர்பாகப் பல பக்கங்களைப் பார்க்கலாம். புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் நீங்கள், மிகவும் சக்திவாய்ந்த ஒரு சமூகமாக இருக்கிறீர்கள். ஆனால் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஒருவர் மற்றவருடன் இணைந்து பணியாற்றத் நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? என எனக்குத் தெரியவில்லை. யார் பெயரெடுப்பது என்று, பொதுவாக அமைப்புகளிடையே போட்டி மனப் பான்மை இருப்பதாக எனக்குப்படுகிறது. உண்மையில் இப் படிப்பட்ட மனப்பாங்கு எமது பொதுவான இலக்கை அடையும் செயற்பாட்டை பாதிக்கக் கூடிய ஒன்றாகவே இருக்கிறது. இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றச் செய்வதே எங்களது பொதுவான இலக்கு என்று வைத்துக் கொண்டால், என்னைப் பொறுத்தவரையில், புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள், தாம் வாழுகின்ற நாடு களில் உள்ள அரசுகள் சரியான நடவடிக்கைகளை முன் னெடுப்பதற்கு அவற்றின் மீது இன்னும் பலமான அழுத்தத்தைப் பிரயோகிக்கலாம். ஆனால் அவர்கள் தங்களுக்கு இருக்கும் இந்த சக்தியைப் பிரயோகிக்கிறார் களா? அல்லது தங்களுக்கு அப்படி ஒரு சக்தி இருக்கிறது என்பதை இனங்கண்டு கொள்கிறார்களா? என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

உதாரணமாக போர் மிகவும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், ரொறொன்ரோ போன்ற ஒரு மாநகரத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்யக்கூடிய ஆற்றலும், வல்லமையும் அவர்களுக்கு இருந்தது. அப்படியென்றால் தாம் வாழும் நாடுகளிலுள்ள கனேடிய, பிரித்தானிய, அமெரிக்க அரசுகள் மீது இன்னும் அதிகமான அழுத்தத்தை அவர்கள் ஏன் பிரயோகிக்கவில்லை என்று கேட்பது நியாயமானதொன்றாகவே எனக்குத் தெரிகிறது. உண்மையில் ஐ.நாவுக்குப் போய் ஒளிப் படங்களை எடுத்தால் மட்டும் போதாது. இந்த அமைப் புகள் தாங்கள் செய்ய வேண்டிய செயற்பாடுகளை உண்மையில் செய்தார்களா என்பது எனக்குத் தெரிய வில்லை.

மற்றைய விடயம் என்னவென்றால், ஒரு கட்டத்தில் புலம்பெயர் அமைப்புகள் சிறீலங்கா அரசு டன் பேச்சு வார்த்தை முயற்சிகளில் ஈடுபட்டன.அந்த

நேரத்தில், அந்த அரசுக்கு அவர்கள் போதிய அழுத்தத்தை கொடுத்தார்களா என்பது தெரியவில்லை. அரசு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளைச் சரியாகச் செய்ததா என்று பார்க்க வேண்டும். அமைப்புகள் அனைத்தும் ஒன்றாக வந்து, ஆக்கபூர்வமாகச் செயற்படுவதென்றால், மீண்டும் ஒரு முறை ஐ.நாவில் ஒரு வெற்றுத் தீர்மானம் மேற்கொள்ளப்படுவதைத் தடுப்பதற்கும், ஐ.நா தனது பணியைச் செவ்வனே செய்வதை உறுதிப்படுத்தவும் நாங்கள் செய்ய வேண்டிய 5 விடயங்கள் எவை என ஆய்ந்து பார்க்கலாம். அவரவர் வாழும் நாடுகளிலுள்ள அரசுகளுக்கு அழுத்தம் கொடுப்பதோடு மட்டும் நின்று விடாது, நாம் ஜெனீவாவுக்குப் போவ தன் நோக்கம் என்ன? நாங்கள் அங்கே செய்ய வேண்டிய கருமங்கள் எவை? எனவும் ஜெனீவாவில் இந்தத் தளத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் அறிந்திருக்கிறார்களா என்பதும் எனக்குத் தெரியாது.

உதாரணமாக, 2011ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியை நீங்கள் மீட்டுப் பார்த்தால், அக்காலப் பகுதியில் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சமர்ப்பித்த ஆவணங்கள் அசாதாரணமானவையாகும். உண்மையில் அக்காலப்பகுதியில் ஐ.நாவில் செயற்பட்ட தமிழ் மக்களுக்கான குழுக்களிடமிருந்து, மற்றைய நாடுகளிலுள்ள மற்றைய போராட்டங்கள் தொடர்பாக நான் மேற்கொள்ளக் கூடிய பல விடயங்களை அந்த அமைப் புகளிடமிருந்தே நான் கற்றுக் கொண்டேன். இப்போது அப்படிப்பட்ட ஆவணங்களை எவர் தயாரிக்கிறார்கள் என்ற வினாவை நீங்கள் எழுப்பலாம். தீர்மானத்தின் ஏனைய விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தக் கூடிய ஒரு வாய்ப்பை உண்மைக்கும் சமாதானத்துக்கு மான பன்னாட்டுத் திட்டம் என்ற எங்கள் அமைப்பு உருவாக்கியிருக்கிறது.

உதாரணமாகக் காணிப்பிரச்சினைக்கு என்ன நடந்தது? உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு எண்ணிக்கையான தமிழ்மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பியிருக்கிறார்கள்? இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஆய்ந்து, தரவுகளைச் சேகரிக்கும் செயற் பாட்டை தற்போது எவருமே முன்னெடுப்பதாகத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில், நீங்கள் ஜெனீவாவுக்குச் சென்று அங்கு ஐ.நாவின் தீர்மானத்தைப் பற்றிக் கதைக்கப் போகிறீர்கள் என்றால், சிறீலங்கா அரசு வாக்களித்த எதனையுமே செய்யவில்லை என்று அங்கு நீங்கள் சொல்ல விரும்பினால், அதற்கான உரிய ஆவணங்களைத் தயாரிக்க வேண்டும். அதாவது உரிய தரவுகளை ஒன்றிணைத்து அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஐ.நா அவையில் முன்வைக்க வேண்டும்.

ஆரம்ப காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வரைகலைச் செயற்பாடுகளை நீங்கள் பார்த்திருந்தால், அங்கே காட்டப்பட்டபடி, வரைகலைத் தரவுகளை கொண்டுசென்று அந்த வரைகலைத் தரவுகளைக் காட்டி, எல்லா இடங்களும் இராணுவமயமாக்கப்பட்டிருக் கின்றன என்று சுட்டிக்காட்டலாம். அப்படிப்பட்ட செயற் பாடுகள் எதுவுமே தற்போது நடைபெறவில்லை. உண்மை யில் அடுத்த தடவை நடைபெறும் கூட்டத் தொடரில் ஐ.நாவின் நிகழ்ச்சி நிரலில் சிறீலங்கா இடம் பெற வேண்டும் என்றால், அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து இப்படிப்பட்ட வேலைகளைகளில் ஈடுபட வேண்டும்.

எனவே இப்படிப்பட்ட செயற்பாடுகள் முன் னெடுக்கப்படாவிட்டால், சிறீலங்கா பன்னாட்டுச் சமூகத் தின் கண்காணிப்பலிருந்து மறைந்து போகக் கூடிய ஆபத்து இருக்கிறது. ஐக்கிய நாடுகள் அவையில் இப்படிப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதால், என்ன பயன்? என்று பலர் கேட்கிறார்கள். உண்மையில் சிறீலங்காவை உலகின் நிகழ்ச்சி நிரலில் வைத்திருப்பது என்பது சிறீலங்கா பன்னாட்டுச் சமூகத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது பொருளாகும். சிறீலங்கா சரியாகச் செயற்படுகின்றதா? என ஏனைய உறுப்பு நாடுகள் தீர்ப்பிடுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட செயற்பாடுகளைத் தான் அந்த அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும்.

அடுத்தது என்னவென்றால், தமிழ் அமைப்பு கள் ஐக்கிய நாடுகள் அவையின் மேல் இன்னும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சிறீலங்கா தொடர்பாக இதுவரை நடைபெற்ற மக்கள் தீர்ப்பாயங்கள்

## விராஜ் மென்டிஸ்

**(தற்போது ஜேர்மனியில் வதியும் விராஜ் மென்டிஸ், சிங்கள இனத்தைச் சேர்ந்த முற் போக்குச் சிந்தனை கொண்ட ஒரு ஊடகவியலாளர், மனித உரிமை செயற்பாட்டாளர் என்பது மட்டுமன்றித் தீர்ப்பாயங்களை முன்னெடுப்ப தற்காக கடுமையாக உழைத்தவர். ஈழத்தமிழ் மக்களின் தன்நிர்ணய உரிமைக்காக எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்தே போராடி வருபவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.).**

ஈழத்தமிழ் மக்கள் மீது சிறீலங்கா மேற்கொண்ட இனப்படுகொலை தொடர்பாக, போர்க்குற்றத் தீர்ப்பாயத்தை முன்னெடுப்பது என்ற எண்ணத்தின் ஆரம்பப்புள்ளி, ஜேர்மனியின் பிரேமன் *(Bremen)* நகரத்தில், *2009* ஜூன் மாதத்தில் நடைபெற்ற ஒரு சந்திப்பில் இடப்பட்டது. அப்போது நாங்கள் எதிர் கொண்டிருந்த மிகவும் கொடூரமான இனவழிப்பை எதிர்கொள்வதற்காக சிறீலங்காவின் அமைதிக்கான அயர்லாந்து ஆர்வலர்கள் குழாமைச் சேர்ந்தவர்கள் *(Irish Forum for Peace in Sri Lanka)*, பிரேமன் பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்பைச் *(International Human Righrs Association in Bremen)* சார்ந்த ஆர்வலர்களுடன் ஒரு சந்திப்பை மேற்கொண்டார்கள். இப்படிப்பட்ட ஒரு பின்புலத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படக் கூடிய செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கென, தமிழ் மக்களது போராட்டத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தியதன் காரணத்தினால், இலங்கையை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட, சிங்கள இனத்தைச் சார்ந்த செயற்பாட்டாளர்களும், புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்திலிருந்தும் அயர்லாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளிலிருந்தும் வந்திருந்த செயற்பாட்டாளர்களும் ஒன்றாகச்சந்தித்தார்கள். பன்னாட்டு சமூகத்தின் எந்தவித மான எதிர்ப்பும் இன்றி நடைபெற்று முடிந்த நிகழ்வுக ளைக் கண்டு புலம்பெயர்ந்த தமிழர்கள் முற்றிலும் அதிர்ச்சிக்குள்ளாகி இருந்ததை நாம் உணர்ந்து கொண் டோம். மேற்கொள்ளப்பட்ட படுகொலை தொடர்பாக உலகி ன் முக்கிய ஊடகங்கள் அனைத்தும் அமைதி காத் தன. எட்டு மாதங்களாகப் புலம் பெயர்ந்த நாடுகளில், தமிழர்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எவையுமே கவனத்தில் கொள்ளப் படவில்லை. மிகவும் உணர்வுபூர்வமாக அமைந்திரு ந்த இந்தச் சந்திப்பில், இந்த இனவழிப்புப் போரின் எதார்த்தத் தன்மையை உலகின் கவனத்துக்குக் கொண் டுவர வேண்டும் என்று நாம் திடசங்கற்பம் பூண்டோம்.

தமது மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இந்த மோசமான படுகொலையைக் கண்டும், எந்தவித

கவலையையும் தெரிவிக்காது, முழு மனித குலமுமே தம்மைத் தனியே விட்டுவிட்டதாக, இன்னொரு வகை யில் சொல்லப்போனால் தாம் மனித குலத்தின் ஓர் பகுதியேயல்ல என்பது போல் நடத்தப்பட்டதாக, தாயகத்திலும் புலம் பெயர்ந்தும் வாழ்ந்த ஈழத்தமிழ் மக்கள் உணர்ந்ததை, தொடர்ச்சியாக நடைபெற்று வந்த கலந்து ரையாடல்கள் மூலமாக நாம் தெளிவாகப் புரிந்து கொண்டோம். அதேவேளையில், மனித குலத் தின் இன்னொரு பகுதி, அது ஒரு சிறிய குழுவாக இருந் தால் கூட, உண்மையில் 'பாரிய அநீதி தமிழ் மக்களு க்கு இழைக்கப்பட்டிருக்கிறது' என்ற உண்மையை ஏற்றுக்கொள்வதற்கான முதல் அடியை எடுத்து வைக் கத் தயாராக இருக்கின்றது என்ற செய்தியை நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களு க்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் சொல்ல வேண்டும் என நாம் சிந்தித்தோம்.

அந்த வகையில், புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் மக்கள் சமூகத்துக்கு முற்றிலும் வெளியே இருந்து,

இந்த முயற்சி எடுக்கப்படுகிறது என்பதை நாங்கள் வலியுறுத்தினோம். சிங்கள இனத்தவர்கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஆர்வலர்களால் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. உரோம் நகரைத் தளமா கக் கொண்டு இயங்கும் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தைத் *(Permanent People's Tribunal – PPT)* தொடர்பு கொள்வதே இவ்விடயத்தில் சிறந்த முன்னெடுப்பாக இருக்கும்

### தமிழில் ஜெயந்திரன்

என்று முனைவர் அன்டி ஹிகின்பொட்டம் *(Dr. Andy Higginbottom)* எமக்குச் சுட்டிக்காட்டினார். வியட்நாமில் முன்னெ டுக்கப்பட்ட 'ரஸல்- சாத்ர' *(Russell/Sartre)* தீர்ப்பா யத்தின் பாரம்பரியத்தின் வழியில், தொடர்ந்து செயற்படும் இத்தீர்ப்பாயம், உலக அதிகார சக்திகளின் செல்வாக்குக்கு அப்பாற்பட்டது என்றும், அதேநேரம், அறநெறிக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்ளவல்லது என்றும் முனை வர் ஹிகின்பொட்டம் வாதிட்டார். நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தைச் சேர்ந்த பேராசிரியர் பிரான்சுவா ஹூட்டாட் *(Professor Francois Houtart)* என்பவரை நாம் சந்திப்பதற்கான ஒழுங்குகளை இலங்கை சமாதானத்து க்கான அயர்லாந்து மன்றத்தைச் சேர்ந்த முனைவர் ஜூட்லால் பெர்னாண்டோ செய்துதர, பேராசிரியர் ஹூட்டாட், நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின்மைய ஏற்பா ட்டாளரைச் சந்திக்க எமக்கான ஒழுங்குகளைச் செய்து தந்தார்.

இந்த செயன்முறைக்கு எம்மை இட்டுச் சென்ற, ஒரு மிக ஆழமான கலந்துரையாடலை மேற் கொள்வதற்காக, முனைவர் ஜான்னி தொஞ்ஞோனி யைச் *(Dr.Gianni Tognoni)* சந்திக்கும் நோக்குடன், நானும் அஜித் ஹேரத்தும் *(Ajith Herath)* மிலான் நகரத்துக்குச் சென்றோம். நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான நம்பகமான சூழலை இலங்கை சமாதானத்துக்கான அயர்லாந்து மன்றமும், பிரேமன் பன்னாட்டு மனித உரிமைகள் அமைப்பும் இணைந்து மேற் கொண்டன. சிறீலங்காவுக்கான மக்கள் தீர்ப்பா யத்தின் முதல் அமர்வுக்கு வேண்டிய நிதியும், வளங் களும் தமிழர் அல்லாத அமைப்புகளிடமிருந்தே வர வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தினோம். ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு நடைமுறை உறுப்பினராக அயர்லாந்து இருந்ததனாலும், ஆரம்பத்தில் சிறீலங் காவில் சமாதானத்தை அது ஊக்குவித்ததாலும், காலனீ யத்துக்கு எதிரான வரலாற்றை அது கொண்டிருந் ததன் காரணத்தினாலும் அதன் தலைநகரான டப்ளின் நகரத்தில் *(Dublin)* தீர்ப்பாயத்தின் முதல் அமர்வு நடை பெற்றது.

தீர்ப்பாயத்துக்கான ஒழுங்குகளை மேற் கொள்ளும் பொறுப்பை முனைவர் ஜூட்லாலும் இலங்கை சமாதானத்துக்கான அயர்லாந்து மன்றமும் மேற்கொள்ள, அதற்குத் தேவையான கணிசமான அளவு ஆவணங்களை தயார் செய்யும் பொறுப்பை, பிரேமனைச் சேர்ந்த நாங்கள் எடுத்துக் கொண்டோம். இனப்படுகொலை நடைபெற்றது என்ற தீர்மானத்தை, தீர்ப்பாயத்தில் உள்ள நடுவர்கள் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்குப் போதியளவு ஆதாரங்கள் அந்த நேரத்தில் *(2010இல்)* எம்மிடம் இருக்காதபடியால், நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் வழிகாட்டலில், இனப்படு கொலைக் குற்றச்சாட்டை முன்வைப்பதை நாங்கள் தவிர்த் திருந்தோம். ஆகவே 'போர்க்குற்றங்களும்', 'மனித குலத்துக் கெதிரான குற்றங்களும்' இழைக்கப்ப ட்டன என்ற குற்றச்சாட்டை முன்வைப்பதோடு, நாங்கள் நிறுத்திக் கொண்டோம். இருப்பினும், இனவழிப்பிலி ருந்து உயிர் தப்பியவர்களிடமிருந்தும், 'இனப்படு கொலைக்கு எதிரான தமிழர்கள்' என்ற அமைப்பிடமிரு ந்தும் இரண்டாவது அமர்வுக்குத் தேவையான ஆதாரங் களைத் திரட்டுவது என்பதையும் உறுதி செய்தோம்.

பிரேமனில் *2013*ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது அமர்வில், இனவழிப்பு நடைபெற்றது என்ற குற்றச்சாட்டை நாங்கள் முன்வைத்த தோடு, அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா ஆகிய நாடுகள் இந்த இனப்படுகொலைக்கு உடந்தையாக இருந்திருக்கின்றன என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்தோம். பாஷனா *(Bashana)*, அஜித், ஷிரோமன், நிக்கோ, பில் *(Phil)* ஆகிய மனித உரிமைச் செயற் பாட்டாளர்களின் மிகக் கடுமையான உழைப்பில் ஒழுங்கு செய்யப்பட்ட ஆவணங்கள், போரிலே உயிர் பிழைத்தவர்களால் கொடுக்கப்பட்ட மிகவும் வலுவான சான்றுகள், அன்டி ஹிகின் பொட்டம் மற்றும் கரன் பாக்கர் *(Karen Parker)* ஆகிய இருவரும் முன்வைத்த மிகச் சிறப்பான வழக்கு வாதங்கள் போன்றவற்றின் காரணமாக, 'உண்மையில் இன வழிப்பு நடைபெற்றிருக்கிறது' என்ற முடிவை மேற்படி தீர்ப்பாயம் மேற்கொண்டதுடன்; அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா ஆகிய நாடுகள் இனவழிப்புக் குத் துணைபோயிருக்கின்றன என்ற குற்றச்சாட்டை நிரூபிக்க இன்னும் அதிகமான சான்றுகள் தேவை என்ற தீர்மானத்தையும் தீர்ப்பாயம் மேற்கொண்டது.

ஆனால் இவ்வளவு செயற்பாடுகளுக்குப் பின் னரும், இனவழிப்பு நடைபெற்றது என்பதை பன்னா ட்டுச் சமூகம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. மியன் மார் ரோகிங்யா முஸ்லிம் மக்கள் மீது இனவழிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# விடுதலையை நோக்கிய பயணம்
## – ஒரு புதிய பார்வை

**திருமிகு சத்யா சிவராமன்**

சத்யா சிவராமன், டெல்லியை தளமாக கொண்டு இயங்கும் ஓர் ஊடகவியலாளர் என்பதுடன் ஒரு பொது சுகாதார ஆர்வலரும் ஆவார்.

தமிழில் **ஜெயந்திரன்**

எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தேறிய இரண்டாம் உலகப்போரின் முடிவும் அதனைத் தொடர்ந்து ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் நிலை கொண்டிருந்த ஐரோப்பியக் காலனியக் கட்டமைப்புகள் படிப்படியாக செயலிழக்கச் செய்யப்பட்ட நிகழ்வும், தெற்காசியா உள்ளிட்ட பிரித்தானிய ஆட்சியின்கீழ் அது வரை இருந்த பல புதிய சுதந்திர 'நாடிய அரசுகள்' *(nation – states)* தோற்றம் பெற வழிவகுத்தன.

அதைவிட அண்மையில், எண்பதுகளின் இறுதியில், ஏற்பட்ட சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் காரணமாக மீண்டும் உலக சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல புதிய நாடுகள் உருவாக்கம் பெற்றன. இவற்றின் விளைவாக, *1945*ஆம் ஆண்டு வெறும் *51* நாடுகளாக இருந்த ஐக்கிய நாடுகளின் உறுப்புரிமை இன்று *195* ஆக விரிவடைந்திருக்கிறது.

இவ்வாறாக புதிதாக உருவாகிய நாடுகள் பலவற்றின் சுதந்திரத்தை நோக்கிய பயணம் இலகுவாக இருக்கவில்லை. அமைதியான போராட்டங்களினூடாகவும் சில வேளைகளில் ஆயுதப் போராட்டங்களினூடாகவும், மிகக்கடுமையான துன்பங்களுக்குப் பின்னரும் ஒப்பிட முடியாத ஈகங்களுக்குப் பின்னருமே இந்த நாட்டு மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தலைப்பட்டனர். இன்றோ, நாடுகளின் தன்-நிர்ணய உரிமை தற்காலப் பன்னாட்டுச் சட்டத்தில் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒரு விடயமாகவே மாறிவிட்டது.

இருப்பினும், வரலாறு இப்படியிருக்க, சுதந்திரத்துக்கான அல்லது பிரிந்து செல்வதற்கான நியாயமான பல போராட்டங்கள், பன்னாட்டுச் சமூகத்தின் அங்கீகாரத்தையோ அல்லது ஆதரவையோ இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாகும். நாம் வாழுகின்ற இக்காலத்தைப் பொறுத்தவரையில், சுதந்திரமடைவதன் தேவையை நிலை நிறுத்தி ஒரு புதிய நாட்டை உருவாக்குவதற்கு பல தடைக்கற்களைக் கடக்க வேண்டியிருக்கிறது.

எந்த 'நாடிய அரசுகளிடமிருந்து' சுதந்திரம் கோரப்படுகின்றதோ, அந்த அரசுகள் அப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதே இங்குள்ள முக்கியமான தடைக்கல் என்பது மிகத் தெளிவாகத் தெரியும் ஒரு விடயமாகும். இந்த நாடிய அரசுகளில் இருக்கின்ற பெரும்பான்மையான இனத்துவ அல்லது பண்பாட்டுக் குழுக்கள் ஒரு நிலப்பகுதியை விட்டுக் கொடுப்பதையோ அல்லது தன்னாட்சியை வழங்குவதையோ துரோகச் செயலாக பார்ப்பதன் காரணத்தினால், இப்பிரச்சினைகள் எந்தவித தீர்வுமின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நாடு என்ற எண்ணக்கரு எப்படி ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டுடன் நெருக்கமாகப் பிணைந்திருக்கிறது என்பதைக் கருத்திலெடுப்பதும், இங்கு முக்கியமானதாகும். இவ்விடயத்தை பின்னர் பார்க்கலாம்.

இரண்டாவதாக, மிகப் பெரிய அணு ஆயுத வல்லமையைக் கொண்ட நாடுகள் பலவற்றை தன்னகத்தே உள்ளடக்கிய பன்னாட்டுச் சமூகம், தத்தம் நாடுகள் தங்கள் சொந்த, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தி, தாம் விரும்பும் பொழுது மட்டுமே நாடுகளுக்குள்ளிருக்கும் பல்வேறு குழுக்களின் தன்-நிர்ணய உரிமைக்கு ஆதரவளிக்க முன்வருகின்றன. உதாரணமாக, கொசோவோவையும், தெற்கு சூடானையும் எடுத்துக் கொண்டால், இந்த இரு நாடுகளும் மேலை நாட்டு அதிகார சக்திகளின் ஆதரவுடன் விடுதலையை வென்றெடுத்திருக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட ஒரு சலுகை, புவிசார் அரசியலை மையப்படுத்திய விடயங்களை மட்டும் காரணங்காட்டி, பாலஸ்தீனம், காஷ்மீர். தமிழீழம் போன்ற, நீண்ட காலமாகவே நடைபெற்று வருகின்ற விடுதலைப் போராட்டங்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது என்பது அவதானிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

தற்காலத்தில் நடைபெற்று வருகின்ற 'நாடிய' சுதந்திரப் போராட்டங்கள் தொடர்பாக பன்னாட்டுச் சமூகம் கடைப்பிடிக்கின்ற அலட்சிய மனப்பான்மைக்கு பொதுவாகக் கவனத்திற் கொள்ளப்படாத இன்னொரு மூன்றாவது காரணமும் உண்டு. தொடர்ந்து உலகமயமாகிக் கொண்டிருக்கும் தற்கால உலகில், பணம், தகவல் மற்றும் தொழில்நுட்பம் என்பவை விரைவாக ஒரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு நகர்ந்து கொண்டிருப்பதன் காரணத்தினால், நாடுகளுக்கு இடையே இருக்கின்ற எல்லைகளுக்கான வரையறைகள் மறைய,

புதிய சுதந்திர நாடுகளை உருவாக்குவதற்கான ஆர்வம் உலகளவில் அதிகமாக இல்லாமற் போய்விடுகிறது.

இன்று, பெருநிறுவன முதலீட்டாளர்களைப் பொறுத்தவரையில், நாடுகளோ, பண்பாடுகளோ, ஏன் அங்கு வாழும் மக்கள்கூட இவர்களுக்கு முக்கியமல்ல. அவர் களுக்கு முக்கியமானவை பல்வேறு விதமான 'சந்தைகள்' மட்டுமே. பல விதங்களில் வேறுபட்டிருக்கும் இச்சந்தைகள் அனைத்தும் பொது விதிமுறைகளாலும் பொதுவான ஆட்சிப் பொறிமுறைகளாலும் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு குடையின்கீழ் கொண்டுவரப்படுவதையே இப் பெருநிறுவனங்கள் விரும்புகின்றன. மனித உரிமைகள் பற்றியோ சனநாயகம் பற்றியோ இப் பெருநிறுவனங்கள் அலட்டிக் கொள்வதில்லை. தமது வணிக செயற்பாடுகளை எவ்வளவுக்கு இலகுவாக மேற்கொள்ள முடியும் என்பதே; அதாவது எவ்வளவு அதிக இலாபத்தை எவ்வளவு குறுகிய நேரத்தில் ஈட்ட முடியும் என்ற ஒரே ஒரு விடயம் மட்டுமே இப் பெருநிறுவனங்களினது முக்கிய நோக்கமாகும்.

அதுமட்டுமன்றி உலகின் பல பகுதிகளிலும் இப் பெருநிறுவனங்கள் பொருண்மிய பலத்திலும், அரசியல் செல்வாக்கிலும் உலகின் நாடுகள் பலவற்றுக்குச் சமமாகவும் சில வேளைகளில் அவற்றைவிட மேலும் பலமான நிலையிலும் இருப்பது புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகும். ஓர் உதாரணத்தைப் பார்த்தோமென்றால், மடிக்கணினிகள் *(Laptops)*, திறன்மிகுபேசிகள் *(iphones)* போன்றவற்றை உற்பத்தி செய்யும் அப்பிள் நிறுவனம் *(Apple Inc.)* உலகிலேயே முதன் முதலாக ஒரு டிரில்லியன் *(trillion)* அமெரிக்க டொலர்களை சந்தை மூலதனமாகக் *(market capitalization)* கொண்ட ஒரு பெருநிறுவனம் என்ற நிலையை எட்டியது. தொடர்ந்து, *2019* டிசம்பரில், அதன் மதிப்பு *1.3* டிரில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்தது. இந்த மதிப்புயர்வை சரியாகப் புரிந்து கொள்வதாயின், உலகிலேயே *14* நாடுகள் மட்டுமே அப்பிள் நிறுவனத்தின் சந்தை மூலதனத்தைவிடப் பெரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியை *(GDP)* கொண்டிருக்கின்றன. இது அவுஸ்திரேலியாவின், ஸ்பெயின் நாட்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தி மதிப்பான *1.4*டிரில்லியன் டொலர்களைவிடச் சற்றுக்குறைவானதாகும்.

'நாடிய' சுதந்திரத்திற்காகப் போராடுபவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ ஒரு வெற்றிகரமான அணுகுமுறையைக் கொண்டிருப்பதற்கு இந்த புவிசார் மூலதனத்தின் ஆற்றல் தொடர்பான உண்மையைக் கருத்தில் கொள்வது அவசியமானதாகும். நாடிய விடுதலை அமைப்புகள் ஆகக் குறைந்தது தங்களது இலக்கை அடைவதற்கு, பெருநிறுவனங்கள் எப்படி இயங்குகின்றன என்பதையும், அவை செலுத்தும் ஆதிக்கத்தின் இரகசியங்கள் எவை என்பதையும் கவனமாக ஆய்வு செய்ய வேண்டும்.

தாம் விரும்பும் இலக்கை அடைய வேண்டுமென்றால், தற்போது இருப்பதைவிட ஆக்கபூர்வமாகவும், அதிக செயற்றிறன்மிக்க முறையிலும் செயற்படுவதற்கு, இந்த விடுதலை அமைப்புகள், இப்பெரு நிறுவனங்கள் எவ்வாறாக மேலாண்மை *(management)* செய்கின்றன என்பதைத் தெளிவாகக் கற்றுக் கொள்ள முன்வர வேண்டும். ஒரு நாட்டை ஒழுங்கமைக்கும் செயற்பாட்டைக் கவனத்தில் எடுத்தோமானால், தற்போது, குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தையும், தரவுகளையும் அடிப்படையாகக்கொண்டே முடிவுகளை மேற்கொள்ளுகின்ற நடைமுறைகள் மேலாண்மை செய்யப்படும். இக் காலகட்டத்தில், அப்படிப்பட்ட செயற்பாடுகள் இந்தப் பெரு நிறுவனங்கள் கொண்டிருக்கின்ற அதி நவீனமயப்படுத்தப்

பட்ட பொறிமுறைகள் வழியாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்னும் உண்மை தெளிவாகப் புரிந்து கொள்ளப் பட வேண்டும்.

இங்கு கற்றுக்கொள்ளப்பட வேண்டிய இன்னொரு பாடம் என்னவென்றால், நிலம், நிலப்பகுதி போன்றவை முன்னர்வகித்தபங்கு, இன்று பொருண்மிய வளர்ச்சியை நிர்ணயிக்கின்ற நிதி, தொழில்நுட்பம், மனித வளங்கள் போன்ற வேறு வடிவங்களைக் கொண்டிருக்கும் மூலதனத்தால் ஈடுசெய்யப்பட்டிருக்கின்றது என்பதாகும். இன்றைய உலகில் பெருநிறுவனங்களாக விளங்குகின்ற நிறுவனங்களைப் பார்க்கும்போது, இவற்றில் எதுவுமே மனைகளை வாங்கிவிற்கும் நிறுவனங்கள் அல்ல *(real estate)*. மாறாக, மென்பொருட்களை *(softwares)* உருவாக்கி, மிகவும் செயற்றிறன்மிக்க

தொடர்ச்சி 22 ஆம் பக்கம்

# உயிர்ந்தோர் நினைவோடு
## இலக்கிற்காய் ஒன்றிணைவோம்

அ.தனசீலன்

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர் 11 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் ஈழத் தமிழினம் இன்னமும் அதன் தாக்கத்திலிருந்து மீளுவதாக இல்லை. விடுதலையின் வாசலில் வந்து நிற்பதாக நம்பிய எங்களது மக்களுக்கு 2009இல் முள்ளிவாய்க்கால் வரை நிகழ்ந்தேறிய சம்பவங்கள் மனங்களைவிட்டு அகலாத ரணங்களாக இன்னமும் இருந்து கொண்டே இருக்கின்றன. அடுத்த ஆண்டிற்கான ஒரு வருடப் பயண வழி காட்டலை, நெறிப்படுத்தலை ஒவ்வொரு ஆண்டு மாவீரர் நாளின் போதும் தமிழீழத் தேசியத் தலைவரிடமிருந்து பெற்று வந்த எங்களது மக்கள் இன்னமும் சரியான தலைமைத்துவ வழி காட்டலுக்காக காத்திருக்கின்றார்கள். இந்தக் காத்திருப்பு நியாயமானதே. இன்னொரு வகையில் நோக்கின் முள்ளிவாய்க்காலின் பின்னர் இதுவரை அந்த நம்பிக்கையை யாரும் கொடுக்கவில்லை என்பதே யதார்த்தமான உண்மை. தலைமைத்துவ ஏற்பு என்பது திணிப்புக்குரியது அல்ல. அல்லது பேச்சின் பால் ஏற்படுவதும் அல்ல. அது தீர்க்கமான தொடர் செயற்பாடுகளால் ஏற்படுத்தப்படுவது. அந்தச் செயற்பாடுகளால் மனங்கள் வெல்லப்படுவது.

இருபத்தியோராம் நூற்றாண்டின் மிகக் கொடூரமான இனவழிப்பை மேற்கொண்டவர்கள் தங்களுக்குள் இருக்கும் அனைத்து வேறுபாடுகளையும் கடந்து எங்கள் விடயத்தில் ஒருமித்த நிலைப்பாடுகளுடனேயே உள்ளார்கள். ஆனால் அந்தக் கொடிய இனவழிப்புக்கு உள்ளானவர்கள், எங்களுக்குள் கலந்து பேசி இனத்திற்காக ஒருமித்த நிலைப்பாடுகளுடன் நிற்க வேண்டியவர்கள், ஆயிரம் காரணங்களோடு கூறுபட்டுக் கிடக்கின்றோம். தாயகம், தமிழகம், புலம்பெயர் தேசங்களெங்கும் இதே நிலமைகளே தொடர்கின்றன. எமது மக்களின் உரிமைகள் வெல்லப்பட வேண்டுமென்பது மட்டுமே எங்களது இலக்காக இருக்க வேண்டும். இந்த ஒற்றைக் காரணத்துக்காகவே ஆயிரமாயிரம் மாவீரர்களும் பல்லாயிரக்கணக்கான எங்களது அன்பு மக்களும் உயிரீந்து போனார்கள். எங்களோடு நெஞ்சு நிமிர்த்திப் போராடிய தோழர்களதும் தோழிகளதும் குடும்பங்கள் நிர்க்கதியாய் தூக்கி நிமிர்த்த உரிய ஆதரவின்றி துவண்டு கிடக்கின்றார்கள். முள்ளிவாய்க்கால்வரை மரியாதையோடும் அக்கறையோடும் கவனிக்கப்பட்டு வந்த முள்ளந்தண்டுக்கு கீழ் இயங்க முடியாதவர்கள் உள்ளிட்ட மாற்றுத் திறனாளிகள் மனமுடைந்து கிடக்கின்றார்கள். எமது விடுதலை அமைப்பால் கவனிக்கப் பட்டு வந்த அனைத்துத் தேவைக்குரியவர்களும் இன்று உரிய கவனிப்பற்று இருக்கின்றார்கள். ஆயுதப் போராட்டத்துக்கு பின்னான தனது பணியென்பது இந்தப் போராட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிப்பது தான் எனத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கூறியிருந்தார். மூச்சுக்கு முந்நூறு முறை அவரது பெயரை உச்சரிக்கும் நாம் இதனை எந்தளவுக்கு நெஞ்சிலேற்றிச் செயலாற்றி இருக்கின்றோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சமாதானம் என்று சொல்லப்பட்ட காலப்பகுதியில் நான் வன்னி சென்ற போது, எமது விடுதலை அமைப்பின் பணியகம் ஒன்றில், எமது மக்களின் நாளாந்த தேவை களைக் கண்டறிந்து அதனை திட்டமிட்டு உரிய முறையில் தீர்த்து வைப்பதே அரசியலென்ற கருத்துப் பட தமிழீழத் தேசியத் தலைவரின் கூற்றொன்று என் சிந்தையை நிறைத்தது. அப்போது தான் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் ஏன் அரசியல் பிரிவின்கீழ் செயற்படுகின்றதென்ற தெளிவையும் நான் பெற்றுக் கொண்டேன். இந்த நோக்கிலிருந்து அண்மையில் வெளிப்பட்ட தாயக தேர்தல் முடிவுகளையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். முள்ளிவாய் க்காலுக்குப் பின்னர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எங்களது மக்களை திட்டமிட்ட, ஒருங்கிணைக் கப்பட்ட முறையில் தூக்கி நிறுத்த ஒட்டு மொத்தப் பார்வையில் நாம் தவறிவிட்டோம். எப்போதுமே பரந்துபட்ட மக்களின் ஆதரவும் பங்கெடுப்புமின்றி போராட்டங்கள் வெற்றி பெறுவதில்லை.

புலனாய்வாளர்களின் கழுகுப் பார்வை க்குள் எமது தாயக தேசம் சிக்குண்டு சுயமாகவும் சுதந்திரமாகவும் எதனையுமே செய்யமுடியாத இந்தக் காலகட்டத்தில், சுயமாகவும் சுதந்திரமாகவும் இயங் கக் கூடிய தளமாக புலம்பெயர் நிலங்கள் மட்டுமே காணப்படுகின்றன. இந்தப் புலம்பெயர் நிலங்களில் எங்கள் தாயகமும் தாயகத்து மாந்தர்களும் தந்த வாழ்க்கையையே பெரும்பாலான நாம் வாழ்ந்து வருகின்றோம். இப்போதிருக்கின்ற சூழமைவில் புலம்பெயர் நிலங்களில் வாழ்கின்ற நாங்கள் தான் இலக்கு நோக்கிய எங்களது இலட்சியப் பயணத்தை காத்திரமாக முன்னகர்த்த முடியும். அதற்கு புரிந்துணர்வு, பரஸ்பர நம்பிக்கை, கலந்தாய்வு, கூட்டுச் சிந்தனை, கூட்டுச் செயற்பாடு, எங்களைப் பின்வைத்து இலக்கை முன்வைக்கின்ற மனப்பான்மை மிகவும் இன்றியமையாதது. இதற்கெல்லாம் அடிப்படையாக மாறி மாறிச் சேறடிக் கும் அணுகுமுறையை நாம் அடியோடு களைதல் வேண்டும். "நான் பெரிது நீ பெரிதென்று வாழாமல் நாடு பெரிதென்று வாழுங்கள்" என்ற தமிழீழத் தேசியத் தலைவரது சிந்தனையை உச்சரிப்பதோடு மட்டும் நின்று விடாது, அதனை உளமார ஏற்று செயலாற்ற வேண்டும்.

களத்தில் நின்று களப்பணியாற்றியவர்களுக்கும் புலம்பெயர் தேசங்களில் தாயகப்பணி ஆற்றியவர்களுக்கும் வெவ்வேறான ஆற்றல்களும், ஆழுமைகளும், அனுபவங்களும் உண்டு. முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான கவனங்களோடு நாம் அனைவரும், தங்களது இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களையும், உயிரீந்த மக்களையும் நெஞ்சிருத்தி எமக்கிடையில் இருக்கின்ற அனைத்து வேறுபாடுகளையும் கடந்து இலக்கிற்கான பயணத்தில் நாம் ஒன்றிணைய வேண்டும். எதிரி வேகமாகவும், விவேகமாகவும் எமது தாய் நிலத்தை அபகரித்து எமது பண்பாடுகளை, தொல்லியல் சின்னங்களை அழித்து எமது கல்வி, பொருளாதாரம், வாழ்வியல் அனைத்தையும் நிர்மூலமாக்கி வருகிறான். இதனை முடிந்தவரை தடுத்து நிறுத்தி இலக்கு நோக்கிய எங்கள் பயணத்தை வேகப்படுத்த வேண்டுமாயின் நாம் செயற் பாட்டில் ஒன்றிணைய வேண்டும்.

நாம் ஒரு தொன்மையான தனித்த தேசிய இன மென்பதையும், எமக்கான தேசம் உண்டு என்பதையும் நாம் உளமார நம்ப வேண்டும். அப்போது தான் தன்னாட்சிக்கான எங்களது பயணத்தை நாம் நம்பிக்கையோடு தொடர முடியும். மக்களுக்கான உண்மை அரசியலை தங்களது சுயநலன்களைக் கடந்து எங்களது அரசியல் செய்வோர் முன்னெடுக்க வேண்டும். ஈழத்தமிழினத்தின் உரி மைகளை வென்றெடுக்க உலகத் தமிழர்களின் பேராதரவை நாம் பெற்றாக வேண்டும். புலம்பெயர் நிலங்களிலுள்ள மிகப் பலம் பொருந்திய எங்களது இளையவர் களை அவர்களுக்குரிய வகையில் நாம் உள் வாங்கி, இலக்கை நோக்கிய இலட்சியப் பயணத்தில் அவர்களையும் பங்குபெறச் செய்ய வேண்டும். இவற்றை எல்லாம் காலந் தாழ்த்தாது நாம் முன்னெடுக்க வேண்டுமானால், எங்களுக் கிடையிலான பிணக்குகளில் கிடைத்தற்கரிய நேரங்களை செலவிடுவதை விடுத்து பயனுள்ள வகையில் தேசப் பணியாற்ற முன் வருவோம். எமக்கான பலங்களை நாம் இனங் கண்டு ஒன்றிணைத்து அறிவை ஆயுதமாகக் கொண்டு எமது இலட்சியப் பயணத்தை உறுதியோடு நாம் தொடர வேண்டும்.

• • •

### சிறீலங்கா அரசு ... தொடர்ச்சி...

அதிகமான அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் அவையைப் பார்த்து, துறைசார்ந்த ஆற்றல்களை வளர்க்க வேண்டும் என்ற கதையை ஐ.நா நிறுத்தி, சிறீலங்கா தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றதா? எனக் கண்காணிக்க வேண்டும் என்று அதற்கு அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும்.

கடந்த சில மாதங்களாக மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையிலிருந்து சிறீலங்காவில் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக, உதாரணமாக பெண்கள் நிக்காபை அணிய முடியாது இருப்பது தொடர் பாக எந்தவிதமான அறிக்கை ஸ்ரீயும் இதுவரை வெளி யிடப்படவில்லை.

இப்படிப்பட்ட விடயங்களையே ஐ.நா பேச வேண்டும் என நீங்கள் எதிர்பார்ப்பீர்கள். ஆனால் அவர்களோ எதையும் பேசாது மௌனமாக இருக்கிறார்கள். ஆகவே என்னைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட செயற்பாடுகளையே புலம் பெயர்தமிழ் அமைப்புகள் முன்னெடுக்க வேண்டும். வெவ்வேறு புலம்பெயர் தமிழ் அமைப்புகள் ஒன்றாகச் சந்தித்து எமது மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொள்ள நீங்கள் என்ன செய்யப்போகிறீர் கள்? நாங்கள் என்ன செய்யலாம் என்று உரையாட வேண்டும். புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இப்படிப்பட்ட உரையாடல்களில் ஈடுபடாமல் போனால், சிறீலங்கா பன்னாட்டுச் சமூகத்தின் கண்காணிப்பிலிருந்து மறைந்து போய் விடும்.

ஏனென்றால், மனித உரிமைகள் ஒரு முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் ஒரு மோசமான காலகட்டத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பல அரசுகளைப் பொறுத்தவரையில், பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் நீங்கள் இணைந்து கொண்டால், உங்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய அந்த அரசுகள் தயாராக இருக்கின்றன. இந்தப் போட்டியில் மனித உரிமை விடயங்கள் தொலைந்து போகக்கூடிய ஆபத்து இருக்கிறது. இவ்விடயங்களில் எதிர்வரும் காலங்களில் நாங்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

• • •

# மக்களுக்காகப் பேசுவதும் மக்களைப் பேச வைப்பதும்

ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக நிறை வேற்று அதிகாரம், சட்டவாக்கம், நீதித்துறை, ஊடகங்கள் என்பன அமைந்துள்ளன. முதல் மூன்றும் அரசாங்க கட்டமைப்புகளுடன் சம்பந்தப்பட்டவை. எனவே அவற்றிடமிருந்து நேர்மை, வெளிப்படைத்தன்மை, உண்மை என்பவைகளை எதிர்பார்க்க முடியாது.

ஆனால், ஊடகம் என்பது செய்தி – தகவல் - விமர்சனம் என்பவற்றோடு கருத்துருவாக்கம், கருத்துப் பரிமாற்றம் என்பவற்றை உள்ளடக்கியதால், இதனை ஜனநாயகத்தின் காவல் நாய் *(watch dog)* என்பர்.

அதனால், ஊடகம் எப்போதும் காய்தல், உவத்தலின்றி உண்மையை உண்மையாகக் கூறுவதாக *(நடுநிலை என ஒன்றில்லை)* இருக்க வேண்டும். அதே சமயம், மக்களின் கருத்துகளுக்கும், விமர்சனங்களுக்கும் இடமளிப்பதாகவும் இருக்க வேண்டும். இதன் காரணமாக, கருத்துகள் புனிதமானவை, விமர்சனங்கள் சுதந்திரமானவை என்பது ஊடகங்களுக்கான வேதவாக்கியமாக உள்ளது.

"உன்னுடைய கருத்துகளை நான் ஏற்றுக் கொள்ளவில்லை; ஆனால் அந்தக் கருத்தைச் சொல்வதற்கு உனக்குள்ள உரிமையை நான் எனது உயிரைக் கொடுத்தாவது நிறைவேற்றுவேன்" என பிரபல பிரெஞ்சுத் தத்துவஞானி வொல்டயர் *(Voltaire)* தெரிவித்த கூற்று எந்தளவுக்கு ஊடகங்களால் பேணப்படுகிறது என்ற கேள்வி இன்று அவசியமாகிறது.

கருத்துகளைக் கூறும் சுதந்திரம், அச்சமின்றியும் சலுகைகளை எதிர்பாராதும் இயங்கும் நெறிதளம், சமூகத்தை மாற்றியமைக்கும் வல்லமை என்பவை ஊடகங்களின் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டுமென யுனெஸ்கோவின் உலக ஊடக நாள் பிரகடனங்கள் சுட்டியுள்ளன.

இதனால், சமூக மற்றும் அரசியல் மாற்றத்துக்கான சாரதிகளாக ஊடகங்கள் செயற்பட வேண்டும். *(Media as drivers of change)* என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதில் முக்கியமானதாக ஊடக சுதந்திரமானது, மனித உரிமைகளின் மூலைக்கல் - அதாவது ஆதாரத்தூண் *(Press freedom is a cornerstone of human rights)* என்று வரையப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் உள்நாட்டுப் போர்களும், நாடுகளுக்கிடையேயான போர்களும் அதிகரித்துள்ள கடந்த/நிகழ்கால கட்டத்தில், போருக்குப் பின்னரான செயற்பாடுகளில் *(Role of media in post conflict countries)* ஊடகத்தின் வகிபாகம் எவ்வகையாக அமைய வேண்டும் என்பது பற்றி பல்வேறு அரங்குகளில் பேசப் படுகிறது.

சில நாடுகளின் போர்களின்போது அல்லது மனித உரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகளின் போது சில ஊடகங்கள் அவற்றை துணிகரமாக அம்பலப்படுத்தி அல்லது கள நிலைவரத்தை துல்லியமாக எடுத்துக்காட்டி வரலாற்றை மாற்றியமைத்ததை இங்கு சுட்ட வேண்டும். இவை அனைத்தும் கடந்த அரை நூற்றாண்டுக்குள் இடம் பெற்றவை.

1972ஆம் ஆண்டு நடைபெற்ற வியட்நாம் போரில் எரிகுண்டுக்கு இலக்காகி உடம்பில் ஆடை யேதுமின்றி கைகளை மேலே தூக்கியவாறு ஓலமிட்டுக் கொண்டு வீதியால் ஓடிய ஒன்பது வயதுச் சிறுமி கிம் புக் என்ப வரை எவரும் மறந்திருக்க முடியாது. இதனை ஒளிப்படத்துடன் செய்தியாக்கினார் நிக் உற் என்ற ஊடகவியலாளர். இந்தப் படமே அமெரிக்க யுத்தவெறி முகத்தை பகிரப்படுத்தி அந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

1993இல் அமெரிக்க இராணுவ சார்ஜன்ட் வில்லியம் கிளிவ்லான்ட் என்பவரின் சடலத்தை சோமாலியர்கள் கயிறுகளால் பிணைத்துக் கட்டி மொகாடி நகரம் வழியாக இழுத்துச் சென்றதை 'ரொறன்ரோ ஸ்டார்' பத்திரிகையின் செய்தியாளர் போல் வாற்சன் செய்தியாக்கி அந்த யுத்தத்துக்கு முடிவு கட்டினார்.

**திரு எஸ். திருச்செல்வம்**

நேற்றோ படையினர் 1999இல் கொசோவாவில் தரையிறக்கப்பட்டவேளை, ஐரோப்பாவில் நாட்டாண்மை செலுத்திய அமெரிக்க நுழைவுக்கு ஊடகங்களின் பலமே துணையானது. 2018இல் அமெரிக்க ட்ரம்ப் நிர்வாகத்தில் நடந்த சம்பவம் இன்னொன்று. அங்கு எல்லை தாண்டிச் சென்ற மெக்சிகோவினரை தண்டிக்கும் வகையில் பெற்றோருடன் வந்த குழந்தைகளைத்

தனிமைப்படுத்தி காப்பகங்களுக்கு அனுப்பினார் ட்ரம்ப். இந்த மனித உரிமை மீறலின்போது குழந்தையொன்று தன்னிடமிருந்து பிரிக்கப்படும் தாயின் காலைப் பிடித்து கதறியழும் காட்சியை, யான் முறே என்ற ஊடகவியலாளர் வெளிப்படுத்தி அந்த அட்டூழியத்தை நிறுத்தச் செய்தார்.

இந்தப் பின்னணியில் இலங்கையில் தங்கள் மண்ணினதும் மக்களினதும் விடுதலைக்காக போராடியவர்கள் மீது சிங்கள பௌத்த பேரின வாதம் மேற்கொண்ட/இன்றும் மேற்கொள்ளும் இன வதை, இன ரீதியான தாக்குதல், இனச்சுத்திகரிப்பு, இனவழிப்பு என்பவைகளைத் தடுக்க முடியாத நிலை எமது ஊடகங்களுக்கு ஏன் ஏற்பட்டது என்பதை ஆழமாக மீள் நோக்க நேரிடுகிறது.

முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் உறை நிலைக்கு கொண்டு செல்லப்பட்டு ஒரு தசாப்தம் முடிந்துள்ளது. அந்தப் பேரவலம் நடைபெற்ற வேளை, அங்கிருந்த மனிதநேய அமைப்புகளும் வெளிநாட்டுப் பணியாளர்களும் சிங்கள அரசினால் வெளியேற்றப் பட்டனர்.

சாட்சிகளற்ற சூழலை உருவாக்கிய சிங்கள தேசத்துக்கு, மக்களை மீட்பது என்ற நாமத்தில் வகை தொகையின்றி அவர்களைப் படுகொலை செய்வதும், காணாமலாக்குவதும் சுலபமாயிற்று. மன்னார் ஆயராக விருந்தவரால் தெரிவிக்கப்பட்ட உறுதியான எண்ணிக்கைகூட காணாமலாக்கப்பட்டு விட்டது.

போராட்டக் காலத்தில் சில சம்பவங்களை மட்டும் அவ்வப்போது உலக ஊடகங்களுக்குத் தெரிவித்து வந்த மருத்துவப் பணியாளர்களின் தகவல் களை, அவர்களை கைதுசெய்த பின்னர் அவர்களின் கட்டாய 'ஒப்புதல் வாக்கு' ஊடாக பொய்யாக்கியது அரச இயந்திரம்.

தமிழர்வசம் பத்திரிகைகள், வானொலிகள், தொலை க்காட்சிகள் இருந்தும் சிங்களதேச ஊடகங்களின் பொய்யுரைகளை முறியடிக்க முடியாமல்போனது ஏன் என்ற கேள்வி இன்றும் உள்ளது. நடந்தவைகளையும் நடப்பவைகளையும் விடுத்து இனி என்ன நடக்க வேண்டுமென வலுவான பகுப்பாய்வுச் சிந்தனையை தமிழினம் மேற்கொள்ள வேண்டும்.

உண்மை வீட்டுவாசலுக்கு வருவதற்கு முன்னர் பொய் ஊரைச் சுற்றி வந்துவிடும் என்பது போன்று, தமிழ் தேசிய விடுதலை உணர்வும், அதற்கான செயற்பாடுகளும் புலம்பெயர் தமிழரிடையே இன்று எழுநிலையிலுள்ள போதிலும், சிங்கள பௌத்த பெரும் தேசியம் அதனையும் மீறி சர்வதேச வட்டகையில் பொய்ப் பரப்புரைகளை விதைத்து பயிராக்கி வருகிறது.

புலம்பெயர் தமிழர் பல அமைப்புகளாகவும், குழுக்களாகவும் சிதறுண்டு அவர்களின் கொள்கைப் பாதை குன்றும் குழியுமாகி வருவது சிங்களத் தரப்புக்கு வாய்ப்பாகியுள்ளது. இதனால் பேரினவாதத்தின் அரூபக் கரங்கள் தமிழர் சமூகத் துள் புகுந்து மேலும் பிளவுகளை வியாபிக்கச் செய்துள்ளது.

இதனால், தமிழரால் தமிழருக்கென நடத்தப்படும் ஊடகங்கள் - முக்கியமாக புகலிடத் தமிழர் ஊடகங்கள் ஆற்ற வேண்டிய முக்கிய பணி நோக்கப்பட வேண்டும். புற்றீசல்போல் தோன்றியுள்ள சமூக ஊடகங்களை முதலில் நேர்படுத்தி ஒழுங்கமைக்க வேண்டும்.

ஒன்றுபட்ட, பிளவுபடாத, ஒத்த கருத்துடைய தமிழ்த் தேசிய தளத்தில் நிற்கும் தமிழர் ஊடகங்களை ஒன்றிணைக்கும் அனைத்துலக ஊடக அமைப்பொன்று இன்று அவசியமாகிறது.

தாயக உறவுகளின் வாழ்வுரிமை, வாழ்வாதாரம் இரண்டையும் சமதளத்தில் எடுத்துச் செல்லும் கருத்தாதரவு சிந்தனைக்குழாமொன்று இதற்காக உருவாக்கப்பட வேண்டும்.

தளமும் வளமும் கொண்ட தமிழர் ஊடகப் பரப்பு, தாம் வாழும் நாடுகளில் அனைத்துலக மொழிகளில் பரப்புரைகளை மேற்கொள்வதோடு, அங்கு வாழும் மற்றைய இன மக்களின் சமூக அமைப்புகளுடன் இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தி, அவர்களையும் உள்வாங்க வேண்டும்.

மக்களுக்காகப் பேசுவதும் மக்களைப் பேச வைப்பதுமே ஊடகத்தின் தலையாய பணி.

• • •

# தமிழர் தொல்குடி வரலாற்றுத் தேடல் - நேற்றும் இன்றும்!



புலவர் **நல்லதம்பி சிவநாதன்**

***முன்னுரை:***

*கடந்த நாற்பதாண்டுகளுக்கும் மேலாகத் தமிழர் தொல்குடி வரலாற்றுத் தேடலிலும், அது பற்றிய தெளிவாக்கக் கருத்தியல் அணுகு முறைக ளிலும், ஆய்வுலகச் செல்நெறி, செய்நெறி செயற்பாடு களிலும் ஈர்ப்போடு ஈடுபட்ட ஒருவனாக இக் கட்டு ரைத் தொடரினை எழுத முற்படுகின்றேன்!*

*ஒரு பொறியியற் கட்டட தலைமைத்துவ மேலாண்மைத்துறைத் தொழிலனுபவத்தோடு மட்டு மன்றி, ஒரு மொழி, கலை, கவிதை, இலக்கிய, வாழ்வி யல் வரலாற்று மாணவனாகவும், படைப்பாளியாக வும், புலமைத்துவப் பற்றாளனாகவும், அரங்க, கலை ஆற்றுகையாளனாகவும், தமிழர் சமுதாயப் பங்காளியாகவும் கடந்த ஐந்து–ஆறு தசாப் ஸ்ரீதங்க ளாக இயங்கிய அனுபவத்தோடு – குமுறல் – ஆழ் கடலுக்குள் என்னுயிர் முன்னோர் 'சத்தியம் சாகாது', 'காவியச் சலங்கைகள்' ஆகிய படைப்புகளின் நூலா சிரியனென்ற உரிமையோடும் இக்கட்டுரையின் கருப் பொருளையும், பேசுபொருளையும் அணுக முயல் கின்றேன்!*

*எல்லாவற்றிற்கும் மேலாக எனது முன் னோர் மீது நான் கொண்ட மாறாத பற்றும் நம்பிக்கை யோடு... இந்தியாவின் முக்கிய பகுதிகள்... தென் கிழக்காசியாவின் சில முக்கிய நாடுகள் மற்றும் ஒருசில ஆபிரிக்க, அரேபிய நாடுகளென யான் செய்த பயணங்களினூடும்.. தமிழர் தொல்லியல் வரலாற்று த்துறையில் நீண்டகால இலக்கிய வரலாற்று வாழ் வியல் பண்பாட்டு ஈடுபாடும், அகழாய்வு அனுபவ மும், அறிவாற்றலும் கொண்ட அறிஞர் பெருமக்களு டன் நான் ஏற்படுத்திக் கொண்ட உறவு நிலையி னூடும், நான் பெற்ற பயில் நெறிப் பட்டறிவும்தான் என்னை எனது பின்னணியில் நின்று வழிநடத்துகி ன்றது என்பதனை நான் ஈண்டு பதிவு செய்ய விரும்பு கின்றேன்!*

*இலக்கிய நுகர்வும், வாழ்வியல் நுழைவும், பண்பாட்டுப் பதிவுப் புரிந்துணர்வு மற்ற ஓர் ஆய்வுப் புலத்தினை விட்டு மேலோங்கி எழுந்து, இன்று உலகப் பரப்பில் வியாபித்து நிற்கின்ற தமிழர் தொல்குடி வரலாற்றுத் தேடலை உச்சி மோந்து வரவேற்கின்ற ஒரு பூரிப்புடன் எனது எழுத் தோவியத்தை வரைய முனைகின்றேன்!*

*எமது முன்னோரின் கல்லோவியங்களைச் சொல்லோவியங்களோடு இணைத்துப் பார்க்கின்ற செப்பேடுகளை எமது முன்னோர் செப்பிய ஏடுகளு டன் ஒப்பீடு செய்ய வல்ல உய்த்துணர்வும் உள ஈடு பாடும் கொண்ட ஓர் ஆய்வுலகச் சமுதாயம் இன்று உதயமாகியு ள்ளது கண்டு உணர்வு பொங்கி நிற்கி ன்ற ஒருவனாக எனது எழுத்தினை இங்கு பதிவு செய்கின்றேன்!*

*சங்க இலக்கியங்களிற் பொதிந்து கிடக்கும் எமது முன்னோர் அறிவியல் சான்றுகளை பலவோர் உண்மைத்துவத்தைச் செல் நெறியினை – புலமைத்துவச்சொல் நெறியினை–இனங்காணுகின்ற ஓர் தொல்லியலின் சிந்தனை யாக்கத்தைக் கண்டு சிலிர்த்து நிற்கும் ஒருவனாக எனது விரல்களை நகர்த்துகின் றேன்!*

*எனது இளமைக் காலத்தில் எனது தாயக வாழ்வின் போது எமது மூதாதையர்கள், முன் னோர்களின் வரலாறு பற்றியும், வாழ்வியல் பண் பாட்டு விழுமியங்கள் பற்றியும் பேசியும், எழுதியும், கற்றும், கற்பித்தும் வந்த அனைவரும் தங்கள் கருத் தியற் கோட்பாடுகள் யாவற்றையும் மேற்குலக ஆய்வாளர்கள், அறிஞர்களின் சிந்தனைச் செல் நெறியை அடித்தளமாக வைத்தே கட்டியெழுப்பி வந்ததை நான் அறிந்தும், தெரிந்தும், உணர்ந்தும் வந்துள்ளேன்!*

*எமது வாழ்வியல் பண்பாட்டு வழிபாட்டு மரபுகளை இலக்கிய செழுமைகளை ஒரு 'அநாக ரீகப் பழங்குடி'யின் நம்பிக்கையாகப் படம் பிடித் துக் காட்டிய ஒரு கல்விக் கொள்கையை நேரிற் சந்தித் தவன் நான்!*

*ஆனால் இன்றோ நீரிலும் நிலத்திலும் பாரின் திசைகள் அனைத்திலும் படர்ந்து, பரவி, ஊடுருவி நிற்கின்ற உயரிய நாகரீகத்தின் – பழங்குடிப் பூர்வீகத்தின் வாரிசுகள் நாமென நெஞ்சு நிமிர்த்தி நிற்கின்ற ஓர் ஆய்வுலகத்தினை அரவணைக்கின்ற அற்புத அனுபவத்தின் பூரிப்பில் நிற்கின்றேன்!*

*கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக இலண்டனிலிருந்து இயங்கி வருகின்ற தமிழவையின் 'தேடலும் கூடலும்' என்னும் இணையவழி மெய் நிகர் அரங்கில் சமகால அறிவியல், தொல்லியல், பண்பாட்டு, வாழ்வியல் பரப்புகளை ஓர் ஒப்பியல் அணுகுமுறையில் யாம் உரைத் தொடர்களை நிகழ்த்தி வருவதன் விளைவாக தொல்லியற் களப் பணி யும், கல்விப் பணியும், ஆய்வுப் பணியும் ஆற்று கின்ற ஆளுமைகளையும், அனுபவங்களையும் கேட்டும், உணர்ந்தும் வருகின்றோம்.*

*'உய்த்துணர்வையும்' , மெய்ப்பொருள் காணும் 'மெய்யறிவையும்' துணையாகக் கொண்டு தமது இலக்கிய நுகர்வின் புலமைத்துவப் பண்புக ளோடு வரலாற்றுத் தரவுகளை, தகவல்களை உற்று நோக்க வல்ல பலரைச் சந்திக்கின்ற அவரோடு கூடிச் சிந்திக்கின்ற வாய்ப்பினை இன்றைய தொழில் நுட்ப மும் 'கொரோனா' முடக்க நிலையும் எமக்கு அளித் துள்ளது!*

*இன்னல்கள் – இழப்புகளின் மத்தியி லும் – நன்மைகளையீட்டலாமென்ற இச் சூழலில் – 'தமிழர் தொல்குடி வரலாற்றுத் தேடல் நேற்றும் இன்றும்' என்னும் இக்கட்டுரைத் தொடரை எழுத விளைகின்றேன்!*

*இவை எனது தனிப்பட்ட மற்றும் சமுதாய அனுபவங்களின் பிரதிபலிப்பாகவும் எனது தேடல் களின் தெளிவுரையாகவும் அமையுமென்று உறு திபட நம்புகின்றேன்!*

***சத்தியம் சாகாது – அது***
***தீயிலும் வேகாது!***
***நித்தியமாயிருக்கும் – அது***
***நீதியின் வழிநடக்கும்!***
***-சத்தியம் சாகாது நூலிலிருந்து***
***"அன்பே தமிழ்! அதிலே தமிழ்!"***

***எனது பார்வையில் தமிழர் தொல்குடி வரலாற்றுத் தேடல் - நேற்றும் – இன்றும்***
***புலவர் நல்லதம்பி சிவநாதன்***
***(தேடல் 1)***

**பகுதி 01**

*1970களின்பிற்பகுதியில்ஒருபொறியியற் பட்டப்படிப்பு மாணவனாகக் கல்வி பயின்ற காலங்களில் தமிழர் தொல்குடி வரலாறு வாழ்வியல் பற்றிய தேடலில் ஆழமான ஈடுபாட்டுடன் இயங்கிய அனு பவம் எனக்கு உண்டு!*

*அக்காலங்களில் இலண்டனிலுள்ள நூலக ங்கள் மற்றும் இவை பற்றிய ஆய்வு நூல்கள், கட்டுரைகள், சொற்பொழிவுக் குறிப்புகள் எனப் பலவகையான உசாத் துணை மூலங்களை தேடித் தேடி அலைந்து தகவல் களையும், தரவுகளையும் சேகரித்து வந்திருக்கின்றேன்!*

*கிழக்குலகத்திலும், மேற்குலகத்திலும் தமிழர் தொல்குடி சார்ந்த தகவல்களையும், தரவுகளையும் தேடுகின்ற போதெல்லாம் எனக்கு பலவித ஏமாற்றங் களும், விரக்தியும், வேதனையுமே விளைந்த கணங்கள் பற்பல!*

*'திராவிடம்' என்ற சொற்பதத்தினுள் தமிழர் தொல்குடி வரலாறு தொடங்கியும், தொக்கியும் நின்றதே யொழிய தமிழர் தொன்மையைத் துலக்கிய வெளியீடுகள் மிக மிக அரிதாகவே அக்கால கட்டத்தில் எனது கண்களுக்கும், காதுகளுக்கும் எட்டின எனலாம். அதுவும் தொழில்நுட்பம் பெரிய அளவில் விரிவடை யாத ஒரு காலத்திலேயே நான் எனது தேடலை அறிவி யல் ரீதியாக ஆரம்பித்திருந்தேன்.*

*நான் இலண்டனிலே பொறியியற் கல்வியை மேற்கொண்ட காலங்களில் 'கணினி' என்பதே ஒரு 'நெல் ஆலை' இயந்திரம் போலக் காட்சி தந்தது. அதனுடைய பயன்பாடு மற்றும் அறிவியலில் அதன் வகிபாகம் இவற்றினை முழுமை யாகக் கண்டு கொள்ள முடியாத ஒரு சந்ததியாகவே நாம் அப்போது எமது கல்விப் பய ணத்தை ஆற்றி வந்தோம்.*

*மேலும் அக்காலத்தில் கைத் தொலைபேசியின் பாவனையும் எம்மிடையே அறிமுகமாகியிருக்க வில் லை. வெளிப்ப டையாகக் கூறினால், பணப் புழக்கமும் கூட அன்றிலிருந்த எமது வாழ்க்கைச் சூழலில் மிக மிக அரிதாகவேயிருந்தது.*

*'Pablic Telephon Booth' அதாவது 'பொது மக்கள் தொலைபேசிக் கூண்டுகள்' தான் எமக்கான தொடர்பு சாதனமாக இருந்து வந்தது. ஒரு தேவை குறித்தும் உறவு குறித்துமே தொலை பேசித் தொடர்பாடலை நாம்*

**தொடர்ச்சி 20ஆம் பக்கம்**

# சர்வதேச அல்லது கலப்பு நீதிமன்ற விசாரணையை நான் கோரி வருகிறேன்

டாக்டர் **மனோகரன்**

ஓய்வு பெற்ற வைத்தியரும் 2006 ஜனவரியில் திருமலையில் படு கொலை செய்யப்பட்ட ஐந்து மாண வர்களில் ஒருவரான ரஜிகரின் தந்தை யுமான திரு மனோகரன் அவர்கள், நீதிக்குப் புறம்பான பாரிய மனித உரிமை மீறலுக்கு நீதிகோரி கடந்த 14 ஆண்டுகளாகப் போராடிவருகிறார். அவரது இந் தக் காத்திரமான தொடர் முயற்சி தொடர்பாக இலக்கின் நூறாவது சிறப்பிதழுக்காக செவ்வி கண்டோம்.

**கேள்வி:**

**தாயகத்தில் மருத்துவராக மனிதநேயப் பணியாற்றிய நீங்கள், உலக மன்றில் மனித உரிமை கோரிப் போராட நேர்ந்த 14 ஆண்டுகளைப் பற்றி விளக்கமாகக் கூற முடியுமா?**

**பதில் :**

2006 ஜனவரி மாதம் 2ஆம் திகதி எனது மகன் உட்பட ஐவர் சிறீலங்கா அதிரடிப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். தங்களைத் தாக்க வந்த விடுதலைப்புலிகளின் கைக்குண்டு வெடித்ததில் ஐவர் கொல்லப்பட்டனர் என்பதே இராணுவப் பேச்சாளரின் கருத்து. அதற்கு உட னடியாகவே நான் மறுப்புத் தெரிவித்திருந்தேன். பின்னர் வைத்தியசாலைக்கு நான் சென்ற போது அங்கு படையினர் என்னைத் தடுத்தனர். அதனையும் தாண்டி நான் உட்சென்று ஒரு மருத்துவத் தாதியின் உதவியுடன் பிரேத அறைக்குச் சென்றேன். அங்கு என்னுடைய மகன் உட்பட ஐவரின் சடலங் களையும் கண்டேன். எனது மகனின் உடலிலிருந்த காயத்தை வைத்து எனது அறிவுக்கெட்டியவரை அவர் துப்பாக்கியால் அண்மையிலிருந்து சுடப்பட்டிருந்ததை நான் உணர்ந்து கொண்டேன்.



அவ்வேளையில் எனது கைபேசி மூலம் அதனைப் படமெடுத்துக் கொண்டேன். இறந்த வர்கள் விடுதலைப்புலிகளென ஒப்பமிடுமாறு பொலிசார் கேட்டனர். அதனை மறுத்து மறு நாள் நீதிபதியின் பிரேத பரிசோதனையைஅடுத்து அண்மையிலிருந்து துப்பாக்கியால் படுகொலை செய்யப்பட்டது தெரிய வந்தது. மரண விசாரணை யின்போதுஇந்தப்படு கொலையை செய்தது அதிரடிப்படையினர் தான் என்பதை உறுதிப் படுத்தினேன். மற்றைய இளைஞர்களின் பெற் றோர்களிடமும் பிரேத பரிசோதனை செய்த வைத்தியரிடமும்பெற்றுக் கொண்ட தகவல்களி ன்படி ஐந்து மாணவர்களின் மரணமும் திட்ட மிட்டு மேற்கொள்ளப்பட்ட கொலையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் பின்னர் இது தொடர்பான தகவல்களைச் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைக் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச மனித உரிமை அமைப்புக்களுக்கு அறிவித்திருந்தேன்.

எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் நாட்டைவிட்டு வெளியேறும்படி தொலைபேசியிலும் கடிதம் மூலமாகவும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ்விடயத்தை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மதிப்புக்குரிய கோபி அனானின் கவனத்துக்கு கொண்டு சென்றேன். அதன்படி எனது பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி இராணுவத் தளபதிக்கும், சிறீலங்கா அரசாங்கத்துக்கும், பொலீஸ்மா அதிபருக்கும் அறிவித்திருந்தார். அச்சுறுத்தல்கள் தொடர்ந்த நிலையில், 2006 டிசம்பரில் நாட்டைவிட்டு குடும்பத்தோடு வெளியேறி னேன். 2007இல் சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் உதவியோடு ஜெனீவாவில் எனது மகனின் படுகொலையை பதிவு செய்துள்ளேன். ஐ.நாவின் மனித உரிமைச் சபையில் எனது மகனின் படுகொலை சம்பந்தமான விவரங்களை பகிரங்கமாகச் சொல்லியுள்ளேன்.

அதன்பின் அதற்கான அறிக்கையை தொடர்ச்சியாக மனித உரிமைச் சபையில் சமர்ப்பித்து, நீதிகோரி வருகின்றேன். 2015இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறீலங்கா அரசாங்கமும் ஐ.நா மனித உரிமைச் சபையில் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இது சம்பந்தமான செயற்பாடுகள் யாவும் மார்ச் 2021வரை பிற்போடப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் சிறீலங்கா அரசாங்கத்திடமிருந்து நீதி கிடைக்காதென்ற காரணத்தால், மனித உரிமை ஆணையாளரிடம், சர்வதேச விசார ணை அல்லது கலப்பு நீதிமன்ற விசாரணையை நான் எழுத்து மூலம் கோரி அதற்கான தொடர் அழுத்தத்தைக் கொடுத்து வருகிறேன்.

**கேள்வி:**

**இன்றைய நிலையில் எமது 5 இளையோரின் தலைமுறையை அழித்தது தமிழின அழிப்பே என்று தனியாக நின்று வாதாடி, அதனை முன்னேற்றகரமான கட்டத் துக்கு நகர்த்தி உள்ளீர்கள். இது சம்பந்தமான உங்களது அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுங்களேன்?**

**பதில் :**

இந்த நிகழ்வு இடம்பெற்ற காலம் யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டு, சர்வதேச அனுசரணை யுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அதேநேரம், சிறீலங்கா ஆயுதப்படையினரே எங்கள் தமிழ் இளைஞர்கள் மீது குண்டுத் தாக்குதலை நிகழ்த்தி விட்டு - மிகவும் அண்மித்த தூரத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோ கம் மேற்கொண்டு - இவர்களைப் படுகொலை செய்ததை இனவழிப்பின் ஒரு அங்கமாகவே நான் பார்க்கிறேன். அண்மித்த தூரத்திலிருந்த நிராயுதபாணிகளை கைது செய்து, நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவதற்கான வாய்ப்பிருந்தும், அவர்களைப் படுகொலை செய்ததை இனப்படுகொலையாகவே நான்கருதுகின்றேன். இதேவேளை அவ்விடத்தில் 500இற்கு மேற்பட்ட மூவின மக்களும் கூடியிருந்தார்கள். அதில் தமிழ் இளைஞர்களை மட்டும் தெரிவு செய்து, படுகொலை செய்ததை இனவழிப்பென்றே நான் கருதுகின்றேன்.

14 ஆண்டுகளுக்கு மேலாக இன்று வரை எதுவித தீர்ப்பும் வழங்கப்படாமல் இழுத் தடிப்புச்செய்வது பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள், நிகழ்த்தியவர்கள் பெரும் பான்மையினரான சிங்களவர்கள் என்பதால் மட்டுமே. பல தமிழ் இளைஞர்கள் குற்றமிழைத்தவர்களென சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு எந்தவித விசாரணைகளுமின்றி பல்லாண்டுகளாக சிறையில்வாடுகின்ற போதும், இந்த 5 மாணவர்களுக்கு எதிராக குற்றமிழைத்த அதிரடிப்படையைச் சேர்ந்த 13 படையினரையும் விசாரணையை முடிவுக்கு கொண்டு வராமல் விடுதலை செய்து, வெளியே சுதந்திரமாக நடமாட அனுமதித்திருப்பதும் இனவழிப்பின் ஓர் அங்கமே. மேற்குறிப்பிட்ட சகல காரணங்களை வைத்தும் இதனை நான் இனவழிப்பின் ஒரு அங்கமாகவும், மனித உரிமை மீறலாகவும் கருதியே இந்த வழக்கை முன்னெடுத்து வருகிறேன்.

**கேள்வி:**

**ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட உறவுக ளைத் தொலைத்து நிற்கும் எம்மக்களுக்கும், தாயகத்திலுள்ள சமூக நிறுவனங்களுக்கும் நீங்கள் கூற விரும்புவது என்ன?**

**பதில் :**

தங்கள் உறவுகளை நீதிக்குப் புறம்பான வகையில் இழந்த மக்கள் வாய்மூடி மௌனமாக இருப்பது மேலும் மேலும் இனவழிப்புத் தொடரவே வழிவகுக்கும்.

**தொடர்ச்சி 21 ஆம் பக்கம்**

# பலஸ்தீனம் ஏன்பது இழக்கப்படும் ஒரு இலக்கல்ல

கடந்த சில வருடங்களாக பலஸ்தீனம் மீதான தனது பிடியை மேலும் மேலும் இறுக்கி வருகின்றது இஸ்ரேல். பலஸ்தீனர்களின் இழப்புக்கள் என்பது யாருமே கணிக்க முடியாதவாறு உயர்ந்து செல்கின்றது. அனைத்துலக சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரிக்க முடியாத நகரமாக இஸ்ரே லின் தலைநகரம் ஜெருசலம் உருவெடுத்துள்ளது. பலஸ்தீன நிலங்கள் உத்தியோகபூர்வமாக இஸ்ரேலுடன் இணைக்கப்படுகின்றன. அத்துமீறிய குடியேற்றங்கள் அதிகரித்துச் செல்கின்றன. காசாவின் நிலை என்பது கவலையும், பயங்கரமும் நிறைந்தது. இஸ்ரேலின் இந்த கையகப்படுத்தல்களில் உலக நாடுகளின் பங்கும் உண்டு.

பலஸ்தீன மக்களின் பொருளாதாரம் அழிக்கப்படுகின்றது. தடுக்கப்படாத படுகொலைகளும், மக்கள் நடமாடுவதற்கான கட்டுப்பாடுகளும், சிறைகளிலும், சோதனைச் சாவடிகளிலும் பாலியல் ரீதியான வன்முறைகளும், தொடர்ந்து இடிக்கப்படும் பலஸ்தீன மக்களின் வீடுகளும் அங்கு தொடர்கதை. மேற்கு ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் பலஸ்தீன மக்களின் பேச்சுரிமை, நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளது. அரபு உலகத்திற்கும், இஸ்ரேலுக்கும் இடையிலான உறவுகளும் மலர்கின்றன.

அது மட்டுமல்லாது, சமூகப் பிரச்சினைகளும் பலஸ்தீனத்தில் அதிகம், அரசுகளின் அழுத்தம், மக்களிடையான பிரச்சினை, சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வு, குடும்ப பிரச்சினைகள், அரசியல் சீர்கேடுகள், கையாலாகாத அரசியல் தலைமைகள்; இவற்றை எல்லாம் மீறித்தான் பலஸ்தீனர்கள் தமது போராட்டத்தை தொடர்கின்றனர்.

இவ்வளவு பிரச்சினைகளிலும் அவர்கள் தமது கொள்கைகளை கைவிடவில்லை. 100வருட ங்களுக்கு மேலாக தமது நாட்டுக்காக போராடு கின்றனர். தாம் இழந்ததை ஒருநாள் மீளப் பெறு வோம் என்ற நம்பிக்கை அவர்களிடம் இன்றும் உள்ளது.

ஆயுதப் போராட்டம் மீதே அதிக கவனத்தை உலகம் செலுத்தும் போதும், பலஸ்தீனர்கள் பல வடிவங்களில் தமது போரட்டங்களை முன்னெ டுத்து வருகின்றனர். தொழிலாளர்போராட்டம், புறக்கணிப்புப் போராட்டங்கள், அரசியல் மற்றும் சமூக பேரணிகள், உணவு தவிர்ப்பு போராட்டம், இடிக்கப்பட்ட வீடுகளின் சாவிகளை அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் போராட்டம், சமூக மற்றும் கலாச்சார குழுக்களை புலம்பெயர் தேசங் களிலும், இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் உரு வாக்குதல், உலக நாடுகளிடம் தமது அரசியல் கோரிக்கைகளை முன்னெடுத்தல், உள்ளூர் மற்றும் மீள்உருவாக்கும் பொருளா தாரத்தை கட்டியமைக் கும் போராட்டம் போன்றவற்றை ஒவ்வாரு நாளும் தமது கடமையாக அவர்கள் மேற்கொள்கின்றனர்.

**தமிழில்: பிரபா**

---

காலாச்சார துறையின் ஊடாகவும், எதிர்ப் புகளை அவர்கள் காண்பிக்கின்றனர். கல்வியாளர் களும், புத்திஜீவிகளும், அனுபவம் வாய்ந்த அதிகாரிகளும், அரசியல் கொள்கைகளையும், இலக்குக ளையும் வகுத்து கொடுப்பதால் மக்களின் போரா ட்ட ங்கள் உயிர்ப்புடன் உள்ளது.

இந்த விடுதலைப் போருக்கு எவ்வளவு மக்கள் தமது உயிர்களை, உழைப்புக்களை, நேரத்தை, வாழ்வாதாரங்களை, முயற்சிகளைவிலையாக கொடுத்துள்ளார்கள் என்பதைகணிப்பிடுவதுகடின மானது. இழப்புக்களை சந்தித்தவர்களின் விபர ங்கள் அமைதிப் பேச்சுக்களின் போதுகூட பதிவு செய்யப்படவில்லை. அமைதி உடன்பாடுகளில் பலஸ்தீனமும் அதன் அதிகாரிகளும் புறக்கணிக் கப்படுவதுண்டு. அதன் மூலம் அங்கு புறக்கணிக்க ப்படுவது பலஸ்தீன மக்களின் நிலம், உரிமை, சுதந் திரம், அரசியல் மற்றும் பூகோள முக்கியத்தும்.

மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க ஊடகங்கள் பலஸ்தீன மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்கவே செய்கின்றன. பலஸ்தீனம் என்ற சொல் லைப் பயன்படுத்தியற்காக கனேடிய வானொலி அண்மையில் மன்னிப்பு கேட்டதே இதற்கு சிறந்த உதாரணம். ஏனெனில் பலஸ்தீனம் என்ற ஒரு நாடு இல்லை. அதனால் தான் மன்னிப்புக் கோரியதாக கூறுகின்றது கனேடிய வானொலி. பலஸ்தீனம் என்ற செல்லை பிரச்சனைக்குரிய சொல்லாக இவர் கள் பிரச்சாரம் செய்வதால்தான் அது உலகின் புதிய ஒழுங்கில் இருந்து மறைக்கப்படுகின்றது.

முன்னைய காலனித்துவ ஆட்சிகளில் பூர்வ குடிமக்கள் அழிக்கப்பட்டது போலவே பலஸ்தீன த்திலும் நடக்கின்றது. படுகொலைகள் மற்றும் அரச பயங்கரவாதங்கள் மூலமே அவை நிகழ்த்தப்பட்டன. அமெரிக்காவில் வாழும் கறுப்பு இனத்த வர்களின் வாழக்கையும் அவ்வாறானதே; அதனை 1903 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட *The Souls of Black Folk* என்ற நூலில் டுபொய்ஸ் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனம் என்பது பிரச்சனைக்குரிய சொல்லாக உலகம் எங்கும் பரப்பப்பட்டுள்ளது. இஸ்ரேலின் காலனித்துவத்திற்கு அமெரிக்காவும், பிரித்தானியாவும் உதவி வழங்கி வருகின்றன. அரபு நாடுகளும் அதற்கு ஆதரவை கொடுக்கின்றன. கனேடிய ஊடகமோ அல்லது பஹரைனோ பலஸ்தீனம் என்ற சொல்லை அழிக்க முற்படும் போது, நாம் பலஸ்தீனம் என்ற பெயரை உரத்து கூறவேண்டும். அதுவே எம்மை முன்நோக்கி நகர்த்தும்.

அவர்கள் நினைப்பது போல பலஸ்தீனம் என்பது அழிந்துபோகும் சொல் அல்ல. அது இழக்கப்படும் ஒரு இலக்கல்ல, பலஸ்தீன மக்கள் பலஸ்தீனத்திற்காக போராடுவார்கள். சுதந்திரம் அருகில் இல்லாதபோதும், வன்முறைகளும், கால னித்துவமும் அவர்களின் ஆன்மாவை அழித்து விடாது என்பதை அவர்கள் இந்த உலகத்திற்கு காண்பிப்பார்கள்.

போரில் பலஸ்தீனம் அவர்களுக்கு தொல் லையாக இருக்கலாம், ஆனால் உணர்வுகளில் அவர் கள் உயர்வானவர்களாகவே இருப்பார்கள். உலக ஒட்டத்தில் தம்மை பதிவு செய்ய வேண்டும் என்றால், பலஸ்தீனியர்கள் போராடிக்கொண்டே இருக்க வேண் டும்.

பலஸ்தீன மக்களின் உயிர்களை பதிவு செய்ய வேண்டுமெனில், பலஸ்தீனம் என்ற நாடு உருவாக வேண்டும். இது ஒரு முடிவல்ல, நாடு என்ற அந்தஸ்துடன் உலக ஒழுங்கில் இணைந்து கொள்வ தற்கான முயற்சி. இதற்காக எண்ணிக்கை யற்ற மக்கள் போராடினார்கள், போராடி வருகின்றனர். உண்மை யான விடுதலை, சுதந்திரம், காலனித்துவமற்ற வாழ் க்கை அதுவே அவர்களின் இலக்கு.

***நன்றி: மார்க் முஹாநட் அயாஸ், அல்ஜசீரா.***

• • •

## சிறீலங்கா தொடர்பாக ... தொடர்ச்சி...

விடயத்தை பன்னாட்டுச் சமூகத்தின் பெரும் பகுதி ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில், ஈழத் தமிழ் மக்கள் மீது இனவழிப்பு நடைபெற்றது என்பதை பன்னாட்டுச் சமூகம் இன்னும் என்ன காரணத்தினால் ஏற்க முன்வரவில்லை என்னும் வினாவை புலம்பெயர் தமிழர்கள் எழுப்ப வேண்டும். பன்னாட்டுச் சமூகம் இனவழிப்பை ஏற்றுக் கொள்வது என்பது ஒரு அரசியல் விடயம் என்பதை புலம்பெயர்தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதே பன்னாட்டுச் சக்திகளே சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடையக் காரண மாயிருந்தன என்பதையும் தமிழ் மக்கள் சார்பில் இன வழிப்புக்கு எதிராகப் போரிட்ட தமிழீழ விடுத லைப்புலிகளை 'பயங்கரவாதிகள்' என முத்திரை குத்தின என்பதோடு, மக்களை அழிப்பதற்கான ஒரு போரை முன்னெடுக்க சிறிலங்கா அரசுக்கு முற்று முழுதான உதவிகளையும் வழங்கின என்பதை யும் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இப்படியாகச் செயற்பட்ட பன்னாட்டுச் சக்திகள் தாமே ஆரம்பித்த ஒரு போர், இனவழிப்புக்கு இட்டுச் சென்றது என்ற விடயத்தை இலகுவில் ஏற்றுக் கொள்ளப்போவ தில்லை. ஈழத்தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இன வழிப்புக் கூட்டில் தம்மைக் கறைப்படுத்திக் கொள்ளாத சக்திகளை இனங்கண்டு, அவற்றின் துணையுடன் ஈழத்தமிழ் மக்கள் மீது இன்றும் தொடருகின்ற இனவழிப்பைத் தடுத்து நிறுத்த புலம்பெயர் தமிழ்மக்கள் விரைவாக முன்வர வேண்டும்.

• • •

## ஐ.நாவில் ஈழத்தமிழர் ... தொடர்ச்சி...

அறியாமையை வெளிப்படுத்துகிறது. ஐ.நாவில் மட்டும் அல்ல, வாய்ப்புகள்உள்ளஇடங்களைநாம்பயன்படுத்தி, உரிமைக்காக போராட வேண்டும். ஐ.நா மனித உரிமை ஆணையம் இலங்கைக்கு கொடுக்கப்பட்ட காலம் வரும் மார்ச் திங்களோடு முடிவடைகிறது. வருகின்ற 46ஆவது மனித உரிமை கூட்டத் தொடரில் இலங்கை அரசு ஐ.நா மனித உரிமை ஆணையம் கொடுத்த பரிந்துரைகளை செயல்படுத்தியதா? இல்லையா? என்ப தற்கு பதில் கூறவேண்டும். ஆனால் நாம் செய்ய வேண் டிய பணிகளை இங்கு பட்டியலிடுகிறேன்.

***1. இலங்கை அரசு செயற்படுத்தவில்லை என்பதை தரவுகளுடன் நிரூபிக்க வேண்டும். இனப்படுகொலை செய்தது, செய்கிறது, செய்யும் என்று புள்ளி விபரங் களுடன் பதிவு செய்தாக வேண்டும்.***

***2. பொது அமர்வுகளிலும், பக்க அமர்வுகளிலும் நாம் பதிவுசெய்கின்ற கருத்துகள் முரண்பட்டதாக இருக்கக் கூடாது. அதுபோல, அங்கு வருகின்ற அமைப்புகள் முரண்பட்டு நிற்காமல் விட்டுக்கொடுத்து, இணைந்து செயற்படுகின்ற மனநிலையை பெற்றிருக்க வேண்டும்.***

***3. ஈழமண்ணில் நடைபெறுகின்ற மனித உரிமைமீறல் செயல்பாடுகளையும், படுகொலைகளையும், மிரட்டல் களையும், துன்புறுத்துதல்களையும் பேரினவாத செயல் பாடுகளையும் அவற்றால் பாதிக்கப்பட்டவர்களும் அவற்றை பார்த்தவர்களும், கேட்டவர்களும் அவற்றை தரவுகளுடன்பதிவுசெய்துஐ.நாவிற்குள்பதிவுசெய்கின்ற அமைப்புகளிடமும் சிறப்பு அறிக்கையாளர்களிடமும் இங்கிலாந்து, பிரான்சு, கனடா போன்ற நாடுகளின் தூதர கங்களில் பதிவுசெய்ய வேண்டும்.***

***4. இனப்படுகொலையை சந்தித்த நாடுகளின் ஆட்சி யாளர்களையும், பிரதிநிதிகளையும் ஐ.நாவிலோ அந்தந்த நாடுகளிலோ சந்தித்து ஆதரவை திரட்ட வேண்டும்.***

***5. ஆங்கிலம், பிரெஞ்சு, இசுபானியா ஆகிய மொழி களில் கதைக்கத்தெரிந்த, புலமைபெற்ற 16 அகவை (வயது) நிறைவுற்ற இளைஞர்கள் ஐ.நாவிற்கு வர வேண்டும் அல்லது அனுப்பபட வேண்டும்.***

***6. ஐ.நாவிற்குள்ளேயோ வெளியேயோ 'இனப்படு கொலை' என்ற ஒற்றைச் சொல்தான் ஓங்கி ஒலிக்க வேண்டும்.***

***7. விடுதலைப்போருக்கு முன், போரின் பொழுது, போரு க்குபின் சிங்கள பாசிச இராணுவத்தால் பாதிக்கப்பட்ட வர்கள் கடிதங்களாக உலக குற்றவியல் நடுவர் மன்றத் திற்கு - அந்த நடுவர் மன்றத்தின் சட்டத்தரணிக்கு நேரடி யாக அல்லது தமிழர் இயக்கம், உரிய வழிமுறை ஊடாக இந்த சனவரிக்குள் அனுப்ப வேண்டும்.***

***8. பேராசிரியர்கள், அறிஞர்கள் ஈழத்தில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை தரவுடன் கட்டுரைகளா கவும், நூலாகவும், ஆவணமாகவும் ஐ.நாவிற் குள், நமக்கு ஆதரவு தருகின்ற நாடுகளிடமும், இங்கிலாந்து, பிரான்சு, கனடா ஆகிய நாடுகளின் ஆட்சியாளர்களிடமும், தூதரக ங்களிடம் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.***

***9. ஊடகங்கள் வழியாக தமிழர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, பொருளாதார ஆதரவு தருதல், மக்கள் வந்து பணிசெய்ய அனுப்புதல் ஆகியவற்றை செய்ய தூண்ட வேண்டும்.***

***10. கால அளவை முடிவு செய்து, பாதிக்கப்பட்டவர் களின் வாக்குமூலங்களை பதிவுசெய்து உலக குற்றவியல் நடுவர் மன்றத்திற்கு அனுப்ப தனி நபர்கள் அல்லது இயக்கங்கள் முன்வந்து செயல்பட வேண் டும்.***

***11. நாம் செல்ல முடிந்த ஐ.நாவின் அனைத்து அமைப்புக் குள் (செனீவா, அமெரிக்கா), ஐரோப்பிய பாராளு மன்றத்திற்குள் (புரூசல்சு) நாம் சென்று நமது இன விடுதலைக்காக குரல் எழுப்புவது, விளக்கம் தருவது, சிங்களவர்கள் முன்வைக்கும் தவறான தரவுகளைச் சுட்டிக்காட்டி, உண்மையான தரவுகளைக் கொடுக்க வேண்டும்.***

இவ்வாறு செயல்பட்டால், நமது இனத்தின் விடுதலையை வென்றெடுக்க பாதை அமைக்கலாம். இ லக்கு நோக்கிய நமது போராட்டங்களைத் தொடரலாம்.

• • •

## புதிய அனைத்துலக ... தொடர்ச்சி...

கடல் மேலான ஆதிபத்திய இறையாண்மையையும் அதனை மதியாது ஈழத் தமிழர்களின் பிரதிநிதித்து வமின்றி நடாத்தப்படும்- எந்த இந்துமா கடல் அமை திக்கான அல்லது நடுநிலைக்கான முயற்சியும் பலனளி க்காது என்பதையும் உலக மக்களுக்கும், நாடுகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டும். ஈழத்தமிழர்களின் பிரதிநிதி த்துவம் இடம் பெறாவிட்டால், சிறீலங்கா இந்துமா கடலைப் பேரப் பொருளாக்குவதைத் தடுக்க இயலாது என்பதையும், உலகுக்கு எடுத்துரைக்க வேண்டு ம்.

இவ்விடத்தில் ஈழத்தமிழர்கள் தங்கள் வாழ்வா தாரமாக உள்ள இந்துமா கடலில் நடைமுறை தன்னாதிக்கம் செலுத்திய 1978 முதல் 2009 வரையான 31 ஆண்டு காலத்திலும் இந்துமா கடலில் வல்லாண் மைப் போட்டிகள் தவிர்க்கப்பட்டதையும், ஈழத்தமி ழர்களின் இந்துமா கடல் மேலாண்மையின் பின்ன டைவே இந்திய அமெரிக்கப் பிரச்சினைகளின் இன் றைய நிலைகளின் தொடக்கமாகவும்-தொடர்ச்சியா கவும் அமைகிறது என்பதையும் உலகுக்கு விளக்க வேண்டும். எந்த இறைமையும் மக்கள் சார்ந்ததே தவிர , தேர்தல் வழி தெரிவான பிரதிநிதிகள் அதனைச் சரிவர நிறைவேற்றாத இடத்தில் அவ்விறைமை மக்க ளிடமே மீண்டுவிடும் என்பதையும் உலக அரசியல் அறிவியல் தெளிவாக எடுத்துரைக்கிறது.

அந்த வகையில், உலக நாடுகள் ஈழத் தமிழர் களுக்கு அளிக்கக் கூடிய சிறப்புப் பிரதி நிதித்துவம் வழியாகவே இன்றைய புதிய அனைத்துலக ஒழுங்கு முறை சிறப்படையும் என்பதை ஒற்றுமையாக ஓரணி யில் தாயகத்திலும், உலகெங்கும் ஈழத்தவர் தங்கள் பலமே தமக்கான ஒரே பேரம் பேசும் ஆற்றலாக உள்ளது என்ற உணர்வுடன் எடுத்துரைக்க வல்ல கட்ட மைப்புக்களை உருவாக்க வேண்டும். இதுவே ஈழத் தமிழர் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான புதிய பலத்தை ஈழத்தமிழர்களுக்கு உருவாக்கும்.

• • •

## தமிழர் தொல்குடி ... தொடர்ச்சி...

மேற்கொள்வதுண்டு.

இச்சூழலில் எமது தாயக நிலங்களான இலங்கை, இந்தியாவில் கூட தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு எம்மிடம் அப்போது பெரிய அளவில் பணக் கையிருப்பு இருப்பதில்லை. எம்மில் பலர் இரவு வேலை செய்தே கல்விப் படிப்பினை மேற்கொள்ளவேண்டிய சூழலில் இருந்திருக்கிறோம். தவணைக் கட்டணம் கட்டுவதென்பதே ஒரு பயங்கர அனுபவமாகக் கண்ட பிறநாட்டு மாணவர்கள் நாம். வாடகை அறையின் பலத்த விதிமுறைகளுக்கு உட் பட்டு, ஒரு தொலைக்காட்சி கூடப் பார்க்க முடியாத ஒரு மாணவச் சந்ததியில் வாழ்ந்தவர்களுள் நானும் ஒருவன்.

குளிப்பதற்கும் கூடிக்குலாவுவதற்கும் எமது கல்வி நிறுவனங்களின் வசதி வாய்ப்புக ளைப் பயன்படுத்தியே எமது மாணவ வாழ்க்கையை நாம் ஓட்டிக் கொண்டிருந்தோம். எனவே இவ்வாறான ஒரு சூழலில் தான் நான் எனது தேட ல்களை ஆரம்பித்தேன் எனலாம்.

எனினும் இவ்வாய்வுத் தேடலைத் தொடர்ந் தும் ஒரு பல்கலைக்கழக வளாகம் கட்டமைக்கப் பட்ட ஆய்வு அணுகுமுறையில் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டாமையினால் நான் அவ்வப்போது எனக்குக் கிடைத்த தகவல்களையும், தரவுகளையும், குறிப்புகளாகவும், குறுங்கட்டுரைகளாகவும் பதிவு செய்து கொண்டே வந்தேன்.

இதன் மத்தியில் எனது பொறியியற் பட்டப்படிப்போடு எனது தமிழ் மொழி, கலை, கவிதை, இலக்கியம், பண்பாடு, தாயகம் சார்ந்த எனது பணிகளையும், பங்களிப்புகளையும், படைப்பாக் கங்களையும் ஆற்றி வந்ததன் விளைவாக எனது தமிழர் தொல்குடி வரலாற்றுத் தேடலை முழுமையான ஒரு மனக்குவிப்போடு தொடரும் சூழல் என்னைச் சுற்றி உருவாக்கம் பெறவில்லை.

1979இல் எனது பொறியியற் படிப்பு நிறைவு க்கு வந்த போது, நான் நீர்ப்பாசனப் பொறி யியலிலும் ஒரு மேலதிக பட்டப்படிப்பினை மேற்கொண்டு அதனை நிறைவு செய்துவிட்டு 1981இல் லிபியாவிற்கு பொறியியல் – நிலவியல் சார்ந்த தொழில் வாய்ப்பி னைப் பெற்றுப் பயணித்தேன். லிபியாவில் ஒரு பல்லினக் கலாச்சார சூழலில் நான் பெற்ற அனுபவங் களைத் தொடர்ந்து 1983இன் இறுதிப் பகுதியில் இலண்டனிற்கு மீண்டும் வந்த போது எனது தேட லைத் தொடரும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

தொடர்ச்சியாக இது பற்றிய வாசிப்புகளை மேற்கொண்டதன் விளைவாக மேன்மேலும் பல நூற்றுக் கணக்கான குறிப்புகளையும், குறுங் கட்டுரை களையும் பதிவு செய்து கொண் டே வந்தேன்.

**தொடரும்....**

## அமெரிக்கா, இந்தியா ... தொடர்ச்சி...

அனைவரையும் உள்வாங்கிய பொருளாதார அபிவிரு த்தியை ஏற்படுத்தும் இலக்கை நோக்கமாக கொண்டே இந்த வேண்டுகோளை ஏற்றோம்" எனவும் அவர் கொழு ம்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள நேர்காணலில் கூறியிருந்தார்.

அமெரிக்கத் தூதுவரின் இந்தக் கருத்துக்கு கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் அடுத்த நாளே பதிலடி ஒன்றைக் கொடுத்தது. "இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பேட்டியொன்றின் போது இராஜதந்திர நடைமுறைகளை மீறியுள்ளார்" என இலங்கைக்கான சீனத் தூதரகம் குற்றம் சாட்டியுள் ளது. மூன்றாவது நாடொன்றின் தூதுவர் இலங்கை -அமெரிக்க உறவுகளை வெளிப்படையாக கேள்விக் குட்படுத்தியுள்ளார் எனவும் சீனத் தூதரகம் தெரிவி த்துள்ளது. இது இலங்கையை மையப்படுத்திய சீன - அமெரிக்க ஆதிகப் போட்டியாக ஒன்று இடம் பெறு வதை வெளிப்படுத்தியது.

இதேவேளையில், அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இம்மாத இறுதியில் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருப் பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அமெரிக்கா பக்கமா அல்லது சீனாவின் பக்கமா என்பது இந்த விஜயத்தின் போது அம்பலமாகும். "பொம்பியோவின் விஜயத்தின் போது எம்.சி.சி மற்றும் சோபா உடன்ப டிக்கை தொடர்பான தனது நிலைப்பாடுகளை இல ங்கை மாற்றாது. அமெரிக்காவின் விருப்பங்களுக்கு அடிபணியாது" என அரசாங்கத்தின் உயர்மட்ட தரப்பை சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கை எடுக்கப்போகும் அணுகுமுறை என்ன? அது சீனாவின் பக்கம் சாய்வ தற்கான வாய்ப்புக்களே அதிகமாகவுள்ளது போலத் தெரிகின்றது. அப்படியானால், அமெரிக்காவும், இந்தி யாவும் என்ன செய்யப்போகின்றன.

• • •

## ஈழத்தமிழினத்தின் நீதித் ... தொடர்ச்சி...

நாம் வழிவகை செய்ய வேண்டும் எமது ஆற்றல்க ளைப் பகிர்ந்துகொள்ள நாம் பயமின்றியும் திறந்த உள் ளத்துடனும் செயற்பட வேண்டும்.

உலகுக்கு எமது வரலாற்றை உரத்துச் சொல்லி, அரசியல்வாதிகள், அரசுகள், கொள்கை வகுப்பாளர்கள் போன்றவர்கள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண் டும். நாம் மேற்கொள்ளும் பரப்புரைக்கு எண்ணிம உலகிலுள்ள அனைத்துத் தளங்களையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இச்செயற்பாடு ஆங்கிலத்தில் *'Branding'* என அழைக்கப்படுகிறது. இந்த உத்தி மூல மாக புள்ளிகள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து, அனைத்து அரசியற் கட்டமைப்புகளையும் ஊடறுத்து, எல்லைகள் எல்லாவற்றையும் கடந்து சென்று, காட்சி களால் கதை சொல்லி, உண்மையை ஆணித்தரமாக வெளிக்கொண்டுவர வேண்டும்.

தமது வரலாற்றை உலகுக்கு எடுத்துச் சொல்ல திரைப் படம், கலை, வரைகலை வடிவமைப்பு, நகைச்சுவை, இசை போன்ற பல்வேறு விடயங்களை, யூத மக்கள் எப்படிப் பயன்படுத்தினார்கள் என்பது இவ்விடயத் தைப் பொறுத்தவரையில் தலைசிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. ஸ்பீல் பேர்க் *(Spielberg)* என்பவரது *'ஷின்லரின் பட்டியல்' (Schindler's list)* என்ற திரைப்படம், டானியேல் லீபர்ஸ்கின்ட் *(Daniel Libes-kind)* உருவாக் கிய யூத அருங்காட்சியகம், ஹிட்லரின் சித்திரவதைமுகாம்களில்யூதமக்கள்கொல்லப்பட்டதை நினைவு கூர பேர்லினில் அமைக்கப்பட்டுள்ள அருங் காட்சியகம் என்பவற்றையெல்லாம் சிந்தித்துப் பாருங்கள். வெவ் வேறு ஊடகங்கள் வாயிலாகச் செய்தியைப் பரப்பும் போது, பாரம்பரிய தளங்களுக்கு அப்பால் அதிகமா னோரைச் செய்தி போய்ச் சேர்ந்து, வேண்டிய தாக்கத்தை அது ஏற்படுத்துகின்றது.

**கேள்வி:**
**தமிழரது பிரச்சினை தொடர்பான மனித உரிமைகள் சார்ந்த பணியில் பெரியவர் களுக் கும், இளையோருக்கும் இடையே பரம் பரை இடைவெ ளியை இனங்காண்கிறீர்களா? இந்த இடை வெளி எப்படி நிரப்பப்படலாம் எனக் கருதுகிறீர்கள்?**

**பதில் :**

தமிழ் மக்களின் நீதிக்கான தேடலில், பெரிய வர்களின் அறிவும், அனுபவமும் காத்திரமானது என்ப துடன் இது இழக்கப்படக்கூடாது என்பது எனது கருத்து. இவ்விடயத்தை தற்கால நவீன உலகுக்குப் பொருந்தக் கூடிய வகையிலும், எல்லோரையும் சென்று சேரக்கூடிய வகையிலும், இதனை முன்னெடுத்துச் செல்லும் பணி இளை யோ ரையே சார்ந்தது. இந்த நீதிக்கான தேடலில், புதிய திறன்களையும், புதிய துறைகளையும் இணைத்து எவ்வாறு விவேகமாக செயற்படலாம் என்பது இளை யோரின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

**கேள்வி:**
**ஈழத்தமிழ் மக்களின் நீதிக்கான பய ணத்தில் தமிழ் மக்கள் எடுத்து வருகின்ற முயற்சிகள் பயனுள்ள விளைவுகளைத் தரவேண்டுமாயின், எண்ணிம உலகை சரியாகவும், விவேகமாகவும் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். இந்தக் கருத்தை நீங் கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

**பதில் :**

இது முற்றிலும் உண்மை தான். எமது வரலா ற்றை எடுத்துச் சொல்லவும், உலகுக்கு இவ் விடயங்கள் போய்ச் சேர்வதை உறுதிப்படுத்தவும் இது மிகவும் முக்கியமானது. சிறீலங்காவை உலகின் முன் நிறுத்து வதற்கு, தனியே மாயா என்ற பாடகியில் மட்டும் நாங்கள் தங்கியிருக்க முடியாது. இன்னும் பல புதிய வழிமுறைகளை நாம் இனங்காண வேண்டும்.

புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழ்ச்சமூகம், தற்காலத்துக்குப் பொருத்தமான முற்றிலும் புதிய அணுகுமுறைகளை இனங்காண வேண்டும்.ஈழத் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடூரங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து, ஆவணப் படுத்தி வைப்பதற்கு தொழில்நுட்பத்தைப் பயன் படுத்துவதையும், எமக்கான பரப்புரையைச் செய்வதற்கு எண்ணிமத் தளங்கள் அனை த்தையும் பயன்படுத்துவதையும், ஐக்கிய நாடுகள் அவை யின் மனித உரிமை ஆணையகத்துக்கு வெளியேயுள்ள அனைவரையும் ஒன்றிணைப்பதற்கு சமூகவலைத் தளங்களை புத்திசாதுர்யத்துடன் பயன்படுத்துவதையும் இது குறிக்கிறது.

ஒரு சிலர் மட்டும் வாசிக்கின்ற, எழுத்து வடிவி லான அறிக்கைகளை மட்டும் தயாரிப்பதோடு நின்று விடாது, உண்மையான மாற்றத்தை தோற்றுவிக்க நாம் முயல வேண்டும். தமிழ் மக்களின் நீதிக்கான போராட் டத்துக்கு உலக சமூகம் மனமுவந்து தனது ஆதரவுக் கரங்களை நீட்டக் கூடிய ஒரு சூழலை நாம் விரைவாக உருவாக்க வேண்டும்.

• • •

## சர்வதேச அல்லது ... தொடர்ச்சி...

எனவே இதனை இல்லாதொழிக்க துணிச்சலாக முன்வந்து ஐ.நா சபையில் நீதி கேட்டு முறைப்பாடு செய்ய வேண்டும். வழக்குகளை முன்னெடுக்க முடியா மலிருக்கும் சாதாரண பொதுமக்களுக்கு தேவையான சட்ட ஆலோசனைகளையும், ஒத்தாசைகளையும் வழங்க எமது சமூக முன்னேற்ற நிறுவனங்களும், மனித உரிமை அமைப்புக்களும் முன்வந்து காத்திரமாக செய லாற்ற வேண்டும்.

**கேள்வி:**
**எமது அரசியல்வாதிகளுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

**பதில் :**

எமது அரசியல்வாதிகளின் கடமைகளில் முதன்மையானது இப்படியான உறவுகளை இழந்த மக்களை உரிய முறையில் அணுகி, அவர்களுக்கான நீதியை ஐ.நா வரை சென்று பெற்றுக் கொடுக்க வேண்டியதே. தேர்தல் காலத்தில் வீடு வீடாகச் சென்று உங்களுக்கான ஆதரவினைக் கோருகின்ற நீங்கள் அவர்களது துயர்துடைப்புப் பணிகளுக்காகவும் வீடு வீடாகச் சென்று உதவி புரிவதே சிறந்ததென நான் கருதுகின்றேன். உங்கள் பதவிகளுக்காக நேரத்தை செலவிடும் நீங்கள் மக்கள் பணிக்காக அந்த நேரத்தை செலவிடுவது நல்லதென்பதே எனது கருத்து.

**கேள்வி:**
**புலம்பெயர்தேச தமிழர் மனித உரிமை அமைப்புக்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

**பதில் :**

புலம்பெயர்ந்து செயற்படும் தமிழ் மனித உரிமை அமைப்புக்கள்; பாதிக்கப்பட்ட எங்களது மக்களு க்காக ஒன்றிணைந்து செயற்றிட்டங்களை உருவாக்கி சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களை வெளிக் கொண்டுவர வேண்டும். தாயகத்தில் இயங்கும் மனித உரிமை அமைப்புக்கள் சுயாதீனமாகச் செயற்பட

முடியாதிருப்பதால், புலம்பெயர் தேசங்களில் உங்க ளைச் சூழவுள்ள சர்வதேச மனித உரிமை அமைப் புக்களை அணுகி தாயகத்தில் எங்கள் மக்கள் அனு பவிக்கும் மனித உரிமை மீறல்களையும் இன்னல்க ளையும் உயர் மனித உரிமை அமைப்பான ஐ. நா மனித உரிமைச் சபைக்கு அவைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

**கேள்வி:**
**மனித உரிமைகளுக்கான போராட்ட த்தில் அரசுகளே பெரும்பாலும் மனித உரிமைகளை மீறுகின்றன. இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை என்னும் அரசுகளின் அரசியல் கூட்டு எப்படி சமநீதி வழங்குமென எதிர்பார்க்கலாம்?**

**பதில் :**

ஐ.நா பாதுகாப்புச் சபையில் உள்ளது போல், வீட்டோ அதிகாரம் ஐ.நா மனித உரிமைச் சபையில் பாவிக்க முடியாது. எனவே எமது மனித உரிமைக் கோரலை தொடர்ச்சியாக அழுத்தமாக முன்னெடுக்கும்

போது, நிட்சயமாக நியாய மான தீர்வு மனித உரிமை ஆணையாளரால் வழங்கப்படுமென்பதே எனது திட மான நம்பிக்கையாகும்.

• • •

## விடுதலையை நோக்கி ... தொடர்ச்சி...

வகையில் பொருட்களையும், சேவைகளையும் வழங்குகின்ற அமசோன் *(Amazon)*, கூகிள் *(Google)*, அப்பிள் *(Apple)*, முகநூல் *(Facebook)* போன்ற பெரு நிறுவனங்களாகும்.

சாத்தியமிக்க ஒரு புதிய நாட்டை உருவாக்கும் பயணத்தில், நிலப்பகுதியை மீட்டெடுப்பது என்பது ஒரு புதிய நாட்டை அமைக்கின்ற செயற்பாட்டில் ஒரு சிறிய பகுதி மட்டுமே என்பதுதான் இதன் பொருளாகும். அதிக நிலப் பரப்பைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காத போதிலும், ஆசியாவிலே அதியுயர் தனிநபர் வருமானத்தைக் *(per capita income)* கொண்டிருக்கும், நிலப் பரப்பில் மிகவும் சிறிய நாடாகிய சிங்கப்பூர், இந்த உண்மையை மிக நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியின்றி ஒருநாடு இருக்க முடியுமா? நிச்சயமாக இல்லை. ஒரு மக்கள் கூட்டம் எங்கோ ஓரிடத்தில், ஓர் உறுதியான நிலப்பரப்பில் தமது வாழ்வை நிலைநிறுத்தி வாழ்வது அடிப்படையானதாகும். ஒரு குறிப்பிட்ட, வரையறுக்கப்பட்ட நிலப்பகுதியைத் தமக்கெனச் சொந்தமாகக் கொண்டிருப்பது 'நாடு' என்ற எண்ணக்கருவின் மிக அடிப்படையான விடயமாகும். ஆனால் இங்கு மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம் என்னவென்றால், தனியே நிலத்தையும், நிலப் பகுதியையும் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் மட்டும் எமது முழு ஆற்றலையும் வலுவையும் செலவிடுவது

இன்றைய உலக ஒழுங்கைப் பொறுத்த வரையில், விடுதலையை வென்றெடுப்பதற்கு ஏற்ற வழிவகையாக அமையாது. நிலப்பகுதியுடன் இணைந்து, இன்னும் பல காரணிகள் இருக்கின்றன என்பது இனங்கண்டு கொள்ளப்பட வேண்டும்.

பெருநிறுவனங்களின் உலகளாவிய ஆற்றல் என்பது, நாடுகளின் எல்லைகளை ஊடறுத்து, அவை இயங்கிக் கொண்டிருக்க காரணமான, உலக நாடுகள் அனைத்தையும் ஒன்றிலொன்று 'தங்கியிருக்கும் நிலையை' தோற்றுவிப்பதாகும். அவ்வாறாகப் பார்க்கும் போது, எல்லாவற்றையும் விடப் பெரிய 'வல்லரசு' கூட இன்று உண்மையில் சுதந்திரமாக இல்லை என்பதே எதார்த்தமாகும். பழைய 'நாடிய அரசுகள்' *(nation-states)* என்ற ஒழுங்க மைப்பில் இயங்குகின்ற நாடுகள் விரைவில் அழிந் துவிடப் போவதில்லை என்பது உண்மை தான். ஆனால் இந்த நாடுகளின் இறைமையும், தீர்மானம் எடுப்பதில் இருக்கின்ற தன்னாட்சித் தன்மையும் மிகவும் வலுவிழந்த நிலையிலேயே இன்று காணப்படுகின்றன.

இதன் பொருள் என்னவென்றால், ஏற்கனவே இருக்கின்ற ஒரு 'நாடிய அரசு' என்ற கட்டமைப்பில் இருந்து பிரிந்து செல்ல ஒருவர் விரும்புகின்ற போது, அப்படிப் பிரிந்த பின்னர் அவர்கள் அடுத்து புவியியல் ரீதியாக, எவர் எவருடன், எப்படிப்பட்ட கட்டமைப்பில் இணைந்து கொள்ளப் போகின்றனர் என்பதைத் தீர்மானிக்க வேண்டியது அவசியமாகின்றது. உலகிலுள்ள விடுதலை அமைப்புகள், தாம் எவரிடமிருந்து பிரிந்து செல்ல வேண்டுமென்ற விடயத்தில் மிகத்தெளிவாகவே இருக்கின்றன. ஆனால் அப்படி பிரிந்த பிறகு, தாம் எவருடன் இணைந்து பயணிக்க விரும்புகின்றனர் என்ற விடயம் தொடர்பாக அவர்கள் மிக ஆழமாகவே சிந்திக்க வேண்டியிருக்கிறது.

உதாரணமாக, தெற்காசியாவின் சூழமைவை எடுத்துக் கொண்டால், நீங்கள் ஒரு சுதந்திர தமிழீழத்தைக் கோருகின்றீர்கள் என வைத்துக் கொள்வோம். அப்படியென்றால், எதிர்காலத்தில் உங்கள் இருப்புக்கான உத்தரவாதத்தை எவர் வழங்குவர்? - அது அமெரிக்க ஒன்றியமா, இந்திய ஒன்றியமா, சீனாவா? என்ற ஒரு வினா தேவையற்ற ஒன்றாகத் தென்படலாம். ஆனால் இங்குள்ள கசப்பான உண்மை என்னவென்றால், புவியியல் ரீதியிலான செயற்பாடுகளில் உங்களை ஆதரிக்கும் வலுவான ஒருவரைச் சார்ந்திருப்பது அடிப்படையான தாகும்.

மிகத் தெளிவாகவே தெரிகின்ற காரணங்களினால் 'நாட்டு ஒன்றியம்' உருவாக்குவதை இங்கு நான் உள்வாங்கவில்லை. இன்று அது வல்லரசுகளால் ஆட்டிப் படைக்கப்படுகின்ற 'பல் பிடுங்கப்பட்ட' ஓர் அமைப்பாகவே இருக்கிறது. இங்கு நாங்கள் ஒன்றைக் கட்டாயம் நினைவிற் கொள்ள வேண்டும். நாம் உடன் பயணிப்பதற்கு தனியே நாடுகளை மட்டும் இனங்கண்டால் போதாது. இப் பயணத்தில் உலகளாவிய பெரு நிறுவனங்களையும் இணைப்பது தவிர்க்க முடியாததாகும்.

தற்போதைய உலக ஒழுங்கமைப்பு இப்படித்தான் இருக்கிறதென்றால், எமக்கு முன்னே இருக்கும் தெரிவுகள் எவை? பெரும் சிக்கல் நிறைந்த இவ்வாறான புவியியல் எதார்த்தங்கள் வழியாக எமது விடுதலைக்கான பாதையை நாம் எப்படி செதுக்கிக் கொள்ளலாம்?

இதில் முதலாவதாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், நிலப்பகுதியை மையமாகக் கொண்டு, புதிய நாடுகளை உருவாக்குவது என்பது தற்போது முன்பைவிட கடினமானதொன்றாக மாறியிருக்கும் அதேவேளை யில், புதிய வடிவங்களில், நவீனமயப்படுத்தப்பட்ட நாடுகளை அமைக்கும் சாத்தியப்பாடுகள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. இப்படிப்பட்ட புதிய தெரிவுகளில் கவனத்தைச் செலுத்துவதற்கு, நாடிய விடுதலை அமைப்புகள் நிலப் பகுதியை மீட்பதில் மட்டும் தமது முழுக்கவனத்தையும் மையப்படுத்துவதை தவிர்த்து, நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இக்காலத்தில் மூன்று மிகமுக்கிய மூலதன வடிவங்களாக விளங்குகின்ற நிதி, தொழில் நுட்பம், மனித வளங்கள் போன்றவற்றை கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

மனித ஆற்றல்களும் வளங்களும் எல்லாவற்றிலும் முக்கியத்துவம் வகிக்கின்ற காரணிகளாகும். அதிக நிலப்பரப்பைக் கட்டுப்படுத்துவதனால் மட்டுமே நாடுகள் விடுதலை பெறுவ தில்லை. மாறாக விடு தலை பெறுவதற்கான துணி வையும் ஆற்றலையும் கொண்ட மக்கள் பெருமளவில் இருக்கிறார்கள் என்பதே விடுதலையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாகும். இதன் பொருள் என்னவென்றால், நாடிய விடுதலை இயக்கங்கள் தங்களிடம் ஏற்கனவே இருக்கும் மிகப்பெரிய வளமான தங்களது மக்கள் எங்கு இருந்தாலும், அவர்களை ஒரு குடையின்கீழ் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

மக்களது ஆற்றல்கள், வளங்கள், தாகங்கள் போன்றவற்றிற்குப் பொருத்தமான வடிகால்கள் அமைக்கப்பட்டு, ஒரு நாட்டின் அடிப்படையான அமைப்புக்களாக விளங்குகின்ற மக்களாட்சிப் பொறிமுறைகள், வங்கி போன்ற நிதி நிறுவனங்கள், கல்வியை மேம்படுத்தும் நிறுவனங்கள், சுகாதாரச் சேவைகள், மனிதாபிமானப் பணியை முன்னெடுக்கும் அமைப்புக்கள், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் கட்டமைப்புகள் போன்ற வெவ்வேறு அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

முக்கிய செயற்பாடுகள் அனைத்துமே மெய்நிகர் *(virtual)* வடிவில் முன்னெடுக்கப்படும் இன்றைய காலப்பகுதியில், உலகளாவிய அளவில் இயங்கக்கூடிய ஒரு தமிழீழப் பல்கலைக்கழகத்தையோ, தமிழீழ வங்கியையோ ஏன் தொடங்கக் கூடாது? புலம்பெயர்ந்து வாழும் எமது தமிழ்ச் சமூகத்தில் வாழும் மருத்துவர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் போன்ற பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களை ஒருங்கிணைத்து, புலம்பெயர்ந்து வாழும் எமது தமிழ்ச் சமூகங்கள் நடுவிலும், அவரவர் வாழும் நாடுகளிலும் வாழ்கின்ற மக்களுக்கும் பணிபுரியக் கூடிய செயலணிகளை ஏன் உருவாக்கக் கூடாது? விளையாட்டுத்துறையில் பன்னாட்டு நிகழ்வுகளில் தமிழீழ அணிகள் ஏன் பங்குபெறக் கூடாது?

இங்கு மிக முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், எங்கேயோ ஒரு நிலப்பகுதியை மட்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதால் மட்டும் நாடுகள் தானாக உருவாகாமாட்டாது. அதற்கு மாறாக, அந்த நாட்டின் பங்காளிகளாக விளங்குகின்ற மக்களுக்கான, நலன் சார்ந்ததும், அவர்களது எதிர்காலம் சார்ந்ததுமான உற்பத்திகளையும், செயற்பாடுகளைகளையும் வடிவமைக்கின்ற பொழுதுதான் அந்த நோக்கம் நிறைவேறுகிறது. இதற்காக உங்களது நிலப்பிரதே சத்துக்கான உரிமையை கோருவதை நீங்கள் நிறு த்தி வைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அப்படியான நிலப்பகுதியை நீங்கள் உரிமையாக்கிக் கொள்வதற்கான காலத்துக்காக காத்திருக்கும் அதே வேளையில், ஒரு நாட்டை உருவாக்குகின்ற ஏனைய பல செயற்பாடுகளை நாம் முன்னெடுத்துச் செல்லலாம்.

அப்படிப்பட்ட ஆற்றலையும் வலுவையும் கட்டியெழுப்பும் செயற்பாடு இன்றே தொடங்கப்பட வேண்டும். ஏனென்றால், எவ்வளவு விரைவாக ஒரு நாடு என்ற உணர்வுடன் நாம் செயற்படுகிறோமோ, அவை 'மெய்நிகர் செயற்பாடுகளாக' இருந்தால்கூட, அவ்வளவு விரைவாக அந்த நாடு உருவாகும்.

• • •

# மாறிவரும் காலநிலையும் ஆபத்தின் விளிம்பில் மனித வாழ்க்கையும்

உ. மதுஜா

இன்றைய உலகில் மனிதன் விஞ்ஞானத்தின் உச்சிக்கே சென்று, பல்வேறு விதமான கண்டுபிடிப் புக்களை செய்து, இயற்கையை தன்வசப்படுத்தும் அளவிற்கு முன்னேறியுள்ளான். இருப்பினும், பல்வேறு சவால்களையும், பிரச்சினைகளையும், பின்னடைவுக ளையும் சந்தித்து கோடிக்கணக்கான உயிர்கள் இறந்து போவதற்கு காரணமும் ஆகின்றான்.

அந்த வகையில், இன்று உலகம் எதிர் கொள்ளும் பாரிய பிரச்சினை; காலநிலை மாற்றம் ஆகும். அதாவது அண்மைக் காலமாக சடுதியாக வானிலையில் ஏற்படு கின்ற மாற்றம் தொடரும் பொழுது, அது காலநிலை மாற்றமாக உருவெடுக்கின்றது. காலநிலையாளர்களின் தகவலின்படி இந்தக் காலநிலை மாற்றம் தொடரு மானால், "ஆண்டு தோறும் முப்பது மில்லியன் மக்கள் இறக் கும் அபாயம் ஏற்படும்" எனக் கூறியுள்ளனர்.

காலநிலை, மனித வாழ்க்கையில் பல்வேறு வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதாவது மனிதனின் தோற்றம், நிறம், உடலமைப்பு,மொழி, பண்பாடு, உணவு, உடை, பொருளாதாரம், சமூக அரசி யல் பின்னணிகள், நாளாந்த பழக்கவழக்கங்கள், சிந்த னா சக்தி, ஆரோக்கியம், பொழுது போக்கு அம்சங்கள் என அனைத்தும் இதற்குள் உட்பட்டு இருப்பதனைக் காணலாம். இதற்கு புவிச்சரிதவியலில் அயன வலயம், இடை வெப்ப வலயம், குளிர் வலயம் போன்ற வெவ் வேறு கால நிலைகளின் மாற்றத்திற்கு ஏற்ப மனிதர்கள் மாறி இருப்பதை ஒவ்வொரு விடயங்களுடனும் நோக் கலாம். காலநிலையானது, புவியில் மனிதர்களை மட்டும் தீர்மானிக்காது, மாறாக அனைத்து உயிரினங்களி னதும் இருப்பைத் தீர்மானிக்கின்றது.

அ தே போ ல பு வி இ ய க் க ச் செ ய ற் பா ட் டி ன், அதாவது வானிலை மூ ல க் கூ று க ளா ன ம ழ வீ ழ் ச் சி , வெ ப் ப நி லை , ஈரப்பதன், அமுக்கம், காற்று, ஆவியாக்கம், ஆவியுயிர்ப்பு, சூரியகதிர்வீச்சு என்பனவற்றின் தொடர்ச்சியான செயற்பாட்டையும் அது தீர்மானிக்கின்றது.

இன்றைய உலகை காலநிலையோடு நோக் கும் போது, அபிவிருத்தி அடைந்த நாடுகளே இந்தக் காலநிலை மாற்றத்திற்குப் பிரதான காரணியாக அமை கின்றன. குறிப்பாக உலக வல்லரசான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இதில் முக்கிய இடம் வகிக்கின்றன. இந்த நாடுகளில் அதிகமாக வெளியேறும் காபனீ ரொட்சைட், மெதேன், கந்தகவீரொட்சைட், நீராவி, கைத்தொழிற்சாலைக் கழிவுகள் என்பன பிரதான காரணிகளாகின்றன. ஆனால் இந்த நாடுகள் தம்மிடம் உள்ள உயர்ந்த வசதிகளை பயன்படுத்தி கால நிலை மாற்றத்தால் வரும் பாதிப்புகளில் இருந்து தப்பி விடுகின்றன. நம் போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வாழும் மக்களே கால நிலை மாற்றத்திற்கு காரணமாக இல்லாத போதும், அதன் பாதிப்பை அதிகம் எதிர்கொள்ள வேண்டியுள்ளமை கவலைக்குரிய விடய மாக உள்ளது.

மேலும் காலநிலை மாற்றம் என்பது, இயற் கையான ஒன்றே. ஆனால் கடந்த 100 வருடங்களில்

சடுதியான மாற்றத்தைக் கண்டுள்ளது. இது மனி தனின் இயற்கை மீதான அத்துமீறலான அளவிற்கு அதிகமான உள்நுழைவால், ஏற்பட்ட விளைவு என்றே கூற வேண்டும். இதனைக் குறைப்பதற்கு அனைத்து உலக நாடுகளும் இன்று முயல்கின்றன. குறிப்பாக பயங்கரவாதத்திற்கு அடுத்து உலக நாடுகள் முக்கியத்துவம் கொடுக்கும் விடயமாக காலநிலை மாற்றம் உள்ளமை வரவேற்பிற்குரியது.

உலகின் மின்சாரத் தேவைகளுக்காகவும் தொழிற்சாலைகளுக்காகவும் புதை படிவ எரிபொரு ட்கள் அதிகமாகப் பயன்படுத்துவதாலும், மரங்களை வெட்டி எரிப்பதால் வெளியாகும் காபன் டை ஒக்சைட், மெதேன், நைட்ரஸ் ஒக்சைட் வாயுக்கள் ஏற்படுத்தும் சங்கிலித் தொடர் விளைவால் ஏற்படும் பசுமை இல்ல விளைவு, புவி வெப்பமடைய மூலகாரணமாகும். இதேபோல, குளோரோ புளோரோ காபன்கள் வளிமண் டலத்தில் சேர்தல், உயர் சுவட்டு எரிபொருட்களின் பாவனை, தாவரப் போர்வையை அகற்றல், மந்தை மேய்த்தல், விவசாயக் கழிவுகள் எரித்தல், திண்மக் கழிவு களை நீர் நிலைகளில் கொட்டுதல் போன்ற பல்வேறு மானிடக் காரணிகளால் காலநிலை மாற்றம் ஏற்படுகி ன்றது.

இதேபோல, காலநிலை மாற்றத்தில் செல்வா க்குச் செலுத்தும் இயற்கைக் காரணிகளாக சூரிய கதிர் வீசலின் தாக்கம், புவிக்கோள் பாதையில் மாற்றம், எரிமலை வெடிப்புகள், கடற்பரப்பு வேறுபாடுகள் போன்றவைகளை குறிப்பிடலாம். 2007ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட ஆய்வறிக்கையில், மனிதனால் உருவாக்கப்பட்டு வரும் காலநிலை மாற்றம்; 2020ஆம் ஆண்டு முதல் உலகெங்கும் 300,000 மக்கள் ஆண்டு தோறும் பலியாக காரணமாக இருக் கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கணிப்பி ற்கு முன்கூட்டியே 2000ஆம் ஆண்டு முதல் உலகெங்கும் காலநிலை மாற்றத்தால் 1,50,000 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் திடீர் மழை, புயல், வெள்ளம் மற்றும் கடல்மட்ட உயர்வால் ஏற்படும் கடலரிப்பு என பன்முக தாக்கங்களை தெற் காசிய, தென்கிழக்காசிய, ஆபிரிக்க, தென்ன மெரிக்க நாடுகள் பெருமளவு சந்தித்து வருகின்றன. இதிலும் குறிப்பாக மலைவாழ் மக்கள், நதிக் கரையோர மக்கள், கடலோர மக்கள் மற்றும் நிலமற்ற உழைக்கும் மக்கள் என விளிம்புநிலை மக்கள் தான் அதிகளவில் உயிரி ழக்கின்றனர். அதேபோல திடீர் மழை, வெள்ளப் பெருக்கினால் தோன்றும் மலேரியா மற்றும் வயிற்றுப் போக்கு, பறவைக் காய்ச்சலால் கால்நடைகள் மூலம் பரவும் நோய்கள், பயிர்கள் அழிவடைவதால் போதிய உணவில்லாமையால் ஊட்டச்சத்து குறைபாடு போன் றன ஏற்படுவதுடன், உடல் நோய் எதிர்ப்பு சக்தி குறை வதால் இவ்வாறான உயிரிழப்புகள் நேரிடுகின்றன.

இவை தவிர, பருவம் தவறி கடுமையாக வீசும் அனல் காற்று, வெப்பம் சார்ந்த நோய்களும் இந்த மனிதப் பேரழிவிற்கு மற்றொரு காரணமாகும்.

உலகில் ஒரே நாளில், ஒரே இடத்தில் கூட் டமாக மக்கள் இறந்தால், அது மிகப் பெரிய அவலச் செய்தியாகப் பேசப்படுகின்றது. அரசு ஊடகம், ஆட்சி யாளர்கள், பல்கலைக்கழக அறிஞர்கள், ஆய்வாளர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோர் இதனைப் பற்றி பேச முன்வரினும், அதற்கான நடைமுறையில், அதற்கான சாத்தியப்பாடு பூரணமடையவில்லை. உலகின் பல் வேறு பகுதிகளில் மலை முகடுகளிலும், ஆற்றங்கரை பள்ளங்களிலும், ஆள் அரவமற்ற கடலோரக் கிராமங் களிலும், தொலைதூர பாலைவனத்தின் ஓரத்திலுள்ள சிற்றூர்களிலும் தனித்தனியாக மக்கள் இறக்கும் போது அது வெறும் புள்ளிவிபரமாகவே பார்க்கப்படுகின்றது.

நமது பூவுலகைக் காப்பாற்ற 1992, யூனில் பிரேசிலிலுள்ள ரியா டி ஜெனிரோவில் நடைபெற்ற நியோ புவி உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட செயற்திட்டம்-21, முழுமையாக நடைமுறைப் படுத்தப் படாததன் விளைவுதான், இன்று காலநிலை மாற்றத் தினால் ஏற்படும் பாதிப்பிற்குக் காரணம் ஆகும். 21ஆம் நூற்றாண்டில் நாம் சந்தித்துக் கொண்டிருக்கும், அடுத்து எதிர்கொள்ள இருக்கும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்கு; நகரைத் திட்ட மிடும் வேளையில், இயற்கைக்கு சாதகமான வகையில் அமைத்தல் வேண்டும். உதாரணம்: பசுமை நகர எண் ணக்கரு, வாகன உற்பத்தியின் போது குறைந்தளவு காபனை வெளியிடும் அல்லது மின்சாரத்தில் இயங்கும் வாகனங் களை உற்பத்தி செய்தல், மின் உபகரண பாவனையில் குளோரோ புளோரோ காபனை வெளியி டாத நவீன மின் உபகரணங்களை உபயோகித்தல், மற்றும் மீள்காடாக்கம், கரையோர பாதுகாப்புத் திட்டம் போன்றவற்றிற்கு ஏற்றால் போல சட்டங்களை உருவாக்கி, அதனை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை போன் றவற்றை மேற்கொள்வதன் ஊடாக காலநிலை மாற்றத்திற்கான காரணங்களை குறைத்துக் கொள்ளலாம்.

இதைவிடவும் ஒவ்வொரு தனிமனிதனும் சுற்றுச் கூழலில் கவனம் செலுத்தி, பூமியின் நிலைத்தி ருப்பே மனிதனின் நிலைத்திருப்பென்று கருத்தில் கொண்டு எமது சுற்றுச் சூழலிற்கு பாதிப்பேற்படாத வகையில் செயற்பட இயற்கையின் நிலைத்திருப்பை உறுதி செய்ய வேண்டும்.

• • •

இலக்கு

இதழ் 100

வாராந்த மின்னிதழ்

அக்டோபர் 18, 2020

24

# 100 வது
# வாரத்தில் மாறாத

## தமிழ்த் தேசிய இலக்கை நோக்கி....

இலக்கு 100ஆவது வாராந்த மின்னிதழை தங்கள் கைகளில் அச்சிதழாக தருவதில் அனைத்துலக ஈழத் தமிழர் உரிமை மையத்தின் ஊடகப் பிரிவான அனைத்துலக தமிழ் ஊடக மையம் உவகை கொள்கிறது.

எமது வாராந்த மின்னிதழ்களையும் நாளாந்தச் செய்திகளையும்

www.ilakku.org

என்ற இணையத்தில் நீங்கள் பார்வையிடுவதுடன்,

தங்கள் கருத்துக்களையும், ஆக்கங்களையும்

info@ilakku.org

எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கலாம்.

இலக்கு ஈழத்தமிழ் மக்களின் இலக்கு நோக்கிய பயணத்துக்கும் உலகத் தமிழர்களின் கனதியான இருப்புக்கும், எழுச்சிக்கும் துணை நின்று தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தி எம் இனத்தையும், சமூகத்தையும் ஆற்றற்படுத்தவும், ஆற்றுப்படுத்தவும், மேம்படுத்தவும் கண்ணியத்தோடு பங்காற்றும்.